
கல்கி
KALKI
40 காசு
22-9-1968



செப்டம்பர்
20ம் முதல்
சென்னை
மிட்லண்ட்
பிராட்வே
அகஸ்தியா
மகாலட்சுமி
நூர்ஜஹான்
மற்றும்
தென்னகமெங்கும்...
ஜெமினியின்
ஒளி விளக்கு
ஈஸ்ட்மென்கலர்
கலை ஆலோசகர்: ஏ.கே.சேகர்
வசனம்: சொர்ணம் பாடல்கள்: வாலி
இசை: எம்.எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: சாணக்யா

கல்கி பொருளடக்கம்

இலக பூரட்டாசி 6 ○ செப்டம்பர் 22


லாட்டரி என்னும் திமை	—	5
ராஜாஜியின் கருத்துக்கள்	—	8
பொன்னியின் செல்வன்	—	18
மகாபாரதம்	—	32
ஸினிமா சிந்தனே	—	43
இனிக்கும் நினைவுகள்	—	46
பொன்னிவனத்துப் பூங்குயில்	—	70

கல்கியில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே



கீதோபதேசம் - தந்தப் பதுமை

படம் அனுப்பியவர்: குமாரி சாரதா ராஜன்


ஆட்டுவிப்பது யார்?
பத்திரிகைகளின் வெளிநிறுத்தம்
Rak



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 ★ இதழ் 8

லாட்டரி என்னும் தீமை

மக்களில் கணிசமான பகுதியினர் மற்றச் செலவுகளைச் செய்துவிட்டு, வரிகளும் செலுத்திய பின் முதலீடு செய்வதற்குக் கையில் உபரியாகப் பணம் வைத்திருந்தால்தான் நாடு சுபிட்ச நிலையில் இருப்பதாக ஆகும். வேரிலேயே ஈரம் காய்ந்து போவது போல் சேமிப்பின் மூல ஸ்தானமே வறண்டு போகுமளவுக்கு நேர்முக வரி விதித்து, அதுவும் போதாமல், ஏழைகளின் மீது மறைமுக வரிகள் போடும்படியான நிலை ஏற்பட்டால், அப்போது நாட்டின் சுபிட்சம் மறைந்துவிட்டது என்றே பொருளாகும். இந்த மறைமுக வரிகளும் போதாமல், இனி இவ் வரிகளை அதிகமாக்க முடியாது என்று அரசாங்கம் கருதி, ஏழை மக்களின் சபலத்தைத் தூண்டிவிடும் காரியங்களில் இறங்க நேர்ந்தால், அப்படிப்பட்ட நாடு பொருளாதாரத்தில் மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்பது நிச்சயம்.

கள்ளுக்கடை லைசென்ஸ் தந்து, மக்களுக்குப் போதைப் பொருட்களில் சபலம் காட்டி, கலால் வரியால் அரசாங்கத்துக்கு வருமானம் பெறுவது தவறெனில், பெரிய பரிசு பெறுகிற சபலத்தைக் காட்டி வருமானம் தேடுவது இருமடங்கு தவறாகும். இரு மடங்கு என்று சொல்வதற்குக் காரணம், கலால் வரி தருகிற அனைவருக்குமே பிரதியாக மதுபானம் என்ற ஒன்றாவது வழங்கப்படுகிறது; ஆனால் எங்கேயோ லட்சத்தில் ஒருவரே வெற்றி பெறக்கூடிய லாட்டரியில் மற்ற அனைவருக்கும் பிரதியாக எதுவுமே தரப்படுவதில்லை.

தரும நெறிப்படி தவறான ஒன்று, சர்க்காருக்குப் பணம் தேவைப்படுகிறது என்பதால் சரியாகிவிடாது. சர்க்காருக்குத் தேவைப்படும் பணத்தை எப்படி வேண்டுமானாலும் பெறுவது சரி என்றாகிவிட்டால், சட்ட சபைகளின் அங்கீகாரம் பெற்ற வரி விதிப்புக்குப் பதிலாக நேரடியாகவே மக்களைக் கொள்ளையடிக்கலாம். சபலம் காட்டி ஏமாற்றுகிறவனைத் திருடனுக்குச் சமமாகவே கருதுகிறோம். அப்படியாயின் சபலம் காட்டி லாட்டரி மூலம் பணம் சேர்ப்பதற்கும், கொள்ளையடிப்பதற்கும் வித்தியாசமில்லை.

மிகவும் ஏழைகள் லாட்டரிகளில் கலந்துகொள்வதைத் தடுத்து, சௌகரியமுள்ளவர்களிடமிருந்து மட்டும் உபரி நிதி பெறுவதற்கு லாட்டரி நடத்தப்பட்டால், அதற்கு ஆதரவாக ஏதேனும் சொல்லலாம். ஆனால் ராஜ நீதிக் கொள்கை, நன்னெறி இவற்றின் அடிப்படையில் இந்த உத்தேசத்தைக்கூட ஒப்புக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. வரிகள், கடன்கள் இவற்றின் மூலம் மட்டுமே சர்க்கார் பணம் திரட்டலாம்; சபலம் காட்டி வருமானம் தேடக்கூடாது என்பதே சரியான நிலை.

மக்கள் உபயோகிக்கும் அத்தியாவசியப் பண்டங்களின் மீது விற்பனை வரி போடுவது கொடுமையே எனினும், நேர்முக வரிவிதிப்பின் எல்லையை அடைந்த பின் இவ்விதம் மறைமுக வரி விதிப்பது ஒரு நிலைப்பட்ட வழக்கமாகிவிட்டது. ஆனால் லட்சம், அல்லது பத்து லட்சம் பேரில் ஒருவர் மட்டுமே பெறக் கூடிய வெற்றி வாய்ப்பைக் காட்டி மக்களை மயக்கி, அரசாங்கத்தை நடத்த வருமானம் தேடுவது எவ்விதத்திலும் ஏற்கத் தக்கதல்ல.

உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்தின்றி, வெறும் அதிருஷ்டத்தினால் பரிசு பெறுவது பற்றி மக்களையெல்லாம் ஓயாமல் எண்ணச் செய்கிற தீய விளைவையும் லாட்டரித் திட்டம் உண்டாக்குகிறது. இன்று நாட்டின் அவசியமான தேவை மக்களுக்கு உழைப்பு மனப்பான்மையை உண்டாக்குவதே. இந்த அவசிய காரியத்துக்கு நேர் எதிரானதைச் செய்வது லாட்டரித் திட்டம்.

ராஜ்யங்கள் லாட்டரி நடத்துவதற்கு மத்திய சர்க்கார் 'அனுமதி' தந்ததாக எனக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. லாட்டரி நடத்துவதற்கு ராஜ்யங்கள் அரசியல் சாஸனப்படி அதிகாரம்

பெறவில்லை எனில், சட்டபூர்வமாக ராஜ்யங்கள் பெறாத அதிகாரத்தை மத்திய சர்க்காரின் அநுமதியால் பெற்றுவிட முடியாது. ராஜ்யங்கள் வருமானம் திரட்டுவதற்கான எல்லையை மத்திய சர்க்காரின் 'அநுமதி'யினால் விஸ்தரிக்கலாம் என்பதாகச் சாஸனத்தில் ஷரத்து எதுவும் இல்லை.

தனிப்பட்ட முறையில் துணைப் பிரதமர் லாட்டரிகளை ஆட்சேபிக்கிறார் என்று அறிந்து சிறிது திருப்தி அடைந்தேன். ஆனால் அது தேச விஷயத்துக்குத் தொடர்பானதல்ல. அவரது ஆட்சேபத்தால் நாட்டில் இத் தீமையைத் தடுக்க வழி ஏற்படவில்லை. 'தீமை' என்ற பதத்தை உபயோகித்திருக்கிறேன். ஏனெனில் உழைப்பைத் தவிர்க்க வேண்டும் என்ற மக்களின் மனோபாவம் நாசகரமானது; இந்தப் போக்கிலிருந்து மக்களைத் திருப்பி, கடும் உழைப்பு உணர்வை அவர்களுக்கு ஊட்ட வேண்டிய சமயம் இது. இந்தக் கட்டத்தில் மக்களின் மனத்தை வெறும் அதிருஷ்டத்தைக் கொண்டு பணம் சம்பாதிக்கும் நாட்டத்தில் திருப்பி விடுவது 'தீமை' என்று உறுதியாகக் கருதுகிறேன்.

மற்ற நாடுகளில் காணப்படும் வழிகள் நம்மைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதற்கு அநுமதிக்கக் கூடாது. நம்முடைய இன்றைய நிலையில் இந்தத் திட்டம் மக்களின் நன்னெறி உணர்வைப் பாதிக்கின்ற மாபெரும் தீய சக்தியாகும். எளிதிலும் விரைவிலும் நெறிகளைச் சிதைத்துவிட முடியும். பிறகு அதைச் சீர்செய்வது சிரமம்.

என் ஆட்சேபணை பயனற்றுப் போகலாம். ஆனால் என்னால் முடிந்த அளவு உக்கிரமாக ஆட்சேபக் குரலை எழுப்பி, என் கடமையைச் செய்துவிட்டேன்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

"வைஷ்ணவ ஜனதோ"

காந்தியடிகள் இம்மண்மிசை தோன்றி இந்த அக்டோபர் இரண்டாந் தேதி நூறாவது ஆண்டு பிறக்கிறதல்லவா? இதனை முன்னிட்டுக் 'கல்கி' நேயர்களுக்கு ஓர் அரிய நினைவுப் பரிசை அளிக்கிறோம்.

காந்தியடிகளுக்கு மிகவும் பிரியமான பாடல் 'வைஷ்ண ஜனதோ' என்பதை வாசகர்கள் அறிவர். முந்நூறு ஆண்டுகளுக்கு முன் குஜராத்தில் வாழ்ந்த பரம பக்தசிகாமணியான 'நரஸி மேதா' என்ற நரசிம்ம மேதா, உண்மையான வைஷ்ணவனின் வைபவங்களை இப்பாடலில் வர்ணிக்கிறார். இதில் கூறப்படும் உத்தமப் பாங்குகளுக்கு உருவமாக வாழ்ந்த மகான்கள் பலர். இம்மகான்களை எல்லாம் கலை உலகில் தமக்கெனத் தனியிடம் பெற்றுள்ள ஓவியர் கனுதேசாய் அவர்கள் வண்ணச் சித்திரமாகத் தீட்டியுள்ளார். இந்த அற்புத ஓவியங்களை அடுத்த கல்கியிலிருந்து தொடங்கி, மூன்று வாரங்களுக்கு ஒரு முறை, காந்தி சதாப்தி முழுதும், மேல் அட்டைச் சித்திரமாக வெளியிட இருக்கிறோம். இம்மகான்களின் திருவுருவங்களும் சரிதங்களும் நேயர்களுக்கு உயரிய எண்ணங்களை ஊட்டும் என நம்புகிறோம்.

என்ன சேதி?


வருந்துகிறோம்

திரு வி. கே. வி. நடராஜன் அவர்கள் திடீரென்று நம்மை விட்டுப் பிரிந்தது நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இனிமையும், எழுச்சியும், ஊக்கமும், உற்சாகமும், எப்பொழுதும் களிதுலங்கும் அவரிடம். எடுத்த காரியத்தைத் திறமையுடன் முடித்துத் தீர்க்கும் ஆற்றல் படைத்தவர். அவர் காலஞ்சென்ற தமிழறிஞர் திரு பாஸ்கரத் தொண்டைமானின் மருகராவார். திரு தொண்டைமானைப் போலவே தமிழிடத்தும், கலைகளிடத்தும், கம்பனிடத்தும், டி. கே. சி.யினிடத்தும் அளவிலாப் பற்றுக் கொண்டவர். அவர் பதவி வகித்த ஊர்களில் எல்லாம் தமிழ்ப் பற்றையும் கம்பன் பற்றையும் வளர்க்கப் பண்ணை அமைத்து விட்டு வருவார். சென்னையில் உயர் அதிகாரிகளிடை தமிழ்ப் பற்று வளர்க்க "தமிழ் வட்டம்" என்ற ஓர் இலக்கியக் குழு தோன்றக் காரணமாக இருந்தார். அவரது எதிர்பாராத மறைவு, அவர் மனைவி ஸ்ரீமதி ராஜேசுவரி நடராஜனுக்கும், மக்களுக்கும் எத்தகைய பேரிடிபோல் இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அவர்களுக்கு நமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

திருக்கழுக்குன்றத் திருவிழா

திருக்கழுக்குன்றம் வேதங்களே மலையாக உறைந்த திவ்வியத் திருப்பதி. இரட்டைக் கழுகுகள் தினமும் தவறாமல் நண்பகலில் வந்து இறைவனின் பிரசாதத்தை உண்டு செல்கிற தலம் அது. அக்குன்றிலுள்ள மூலிகைகளின் காற்றுப் பட்டாலே பல நோய்கள் தீரும். உள்ளத்துக்கும் மருத்துவம் புரிபவன் அப்பதியில் வதியும் வேதகிரீசுவரன். இவ்வாலயத்தில் அக்டோபர் 3, 4 தேதிகளில் புஷ்கரமேளாவும், லட்ச தீப உற்சவமும் நடக்கின்றன. கும்பமேளாவுக்குச் சமமான புண்ணிய விழா இது. அன்பர்கள் கலந்து கொண்டு இம்மை, மறுமை நலன்களை எய்த வேணும்.

சாகித்திய அகாதெமிக்குக் கௌரவம்



இம்மாதம் 10ந் தேதி காலை முன்னாள் ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் இல்லத்தில் ஓர் இனிய நிகழ்ச்சி நடந்தேறியது. அன்று ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள், டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு சாகித்ய அகாதெமியின் கௌரவ அங்கத்தினராக்கும் 'ஃபெல்லோ' என்ற சிறப்பை அளித்தார்.

விழாத் தொடக்கத்தில், இவ்வைபவத்தை முன்னிட்டே டாக்டர் வே. ராகவன் அவர்கள் இயற்றியிருந்த சம்ஸ்கிருத சுலோகத்தை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாடினார். சாகித்ய அகாதெமிக் காரியதரிசி ஸ்ரீ கிருஷ்ண கிருபளானியின் வரவேற்புக்குப் பின் டாக்டர் ராகவன், வட மொழியில் அமைந்த சான்றிதழ் வாசகத்தைப் படித்தார். இந்திய வேதாந்தத்தைப் பாரெங்கும் பரப்புவதில் அளப்பரிய தொண்டு புரிந்துள்ள டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு சாகித்திய அகாதெமியின் முதல் 'ஃபெல்லோஷிப்' வழங்கப்படுவதன் பொருத்தத்தை டாக்டர் ஜாகிர் ஹுஸைன் விவரித்தார். கௌரவ அங்கத்தினருக்குரிய தாமிர பத்திரத்தை ஸ்ரீ ராதாகிருஷ்ணனுக்கு வழங்கினார்.

நன்றி கூறுமுகமாகப் பேசிய டாக்டர் ராதாகிருஷ்ணன், மூளையின் ஞானத்தை விட இதயத்தின் ஞானமே பெரிது என்றும், அந்த இதய ஞானத்தை வளர்ப்பதே இலக்கியத்தின் இலட்சியம் என்றும், இந்தத் திசையில் சாகித்ய அகாதெமி ஈடுபட வேண்டும் என்றும் அழகாக ஆணித்தரமாகக் கூறினார்.

முடிவாக ஸ்ரீமதி எம். எஸ்., திருவாசகம், தியாகையர் கிருதி, டாகுர் பாடல், மீரா பஜன் ஆகியவற்றைப் பாடி மகிழ்வித்தார்.

உலகப் புகழ் கொண்ட பல நிறுவனங்களில் கௌரவ அங்கத்தினராயுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணனைக் கௌரவ அங்கத்தினராகப் பெற்றிருப்பது சாகித்ய அகாதெமிக்கே பெரிய கௌரவம் அல்லவா?



காமகோடியின் கருணைமொழி

பரமாத்ம ஸ்வரூபத்தோடு இரண்டறக் கலப்பதுதான் பிறவி எடுத்ததன் பயன். அந்தப் பிறவிப் பயனை எடுக்க அடிப்படையாகச் செய்ய வேண்டிய காரியங்களில் ஒன்று அபரிக்ரஹம். நம்முடைய அவசியத் தேவைக்கு அதிகமாக ஒரு சிறு துரும்பையும் கூட உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதுதான் அபரிக்ரஹம். வசதி இருக்கிறது என்பதற்காக நம் அவசியத் தேவைக்கு அதிகமாக எதுவும் செய்து கொள்ளக் கூடாது. வசதி இருந்தால் அதைக் கொண்டு, கஷ்டப்படுகிற இதர குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் — அல்லது செய்வதற்குப் பிரயத்தனமாவது பண்ணினால்தான் — மோக்ஷப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

'அந்நியர்களோ, உள் நாட்டினரோ நெரிப்பதால் அதற்கு அடங்கி நடக்கமாட்டோம்' என்கிறார் பிரதமர். நெரிசல்களுக்கு எதிர்முகம் கொடுப்பதாக அவர் சங்கற்பம் செய்திருப்பது தைரியத்தைக் காட்டுகிறது. இது பாராட்டுக்குரியது. ஆனால் நெருக்கப்படுவது எதற்காக என்று பார்க்க வேண்டும். சுயநன்மைக்கோ, ஒரு கோஷ்டியின் நன்மைக்கோ, அல்லது குறுகிய நலன்களைக் கருதியோ அரசாங்கத்தை நெருக்கினால் அப்போது ஆட்சியாளர் அதனை உறுதியாக எதிர்த்து நிற்கத்தான் வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட நோக்கம் ஏதுமின்றி, அரசாங்கம் இன்னின்ன செய்ய வேண்டும் என்று அழுத்திக் கூறப்படும் போது, அந்த யோசனைகளை நிதானமாகப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். இவற்றில் தேச நலனை முன்னிட்டுக் கூறப்படும் நல்லுரைகளும் இருக்கலாம். இதுபோல் நல்ல முறையில் அரசாங்கத்தை அசைந்து கொடுக்கச் செய்வதற்காக அழுத்தம் கொடுப்பதே ஜனநாயகப் பண்பு. எந்த அழுத்தத்தையும் எதிர்த்து நிற்க முடியும் என்பதற்காகவே அரசாங்கம் அசைந்து கொடுக்காமல் இருப்பது சரியல்ல. இப்படி நினைக்கிற மனப்போக்கும் சரியல்ல.

ஆக்கிரமிப்பில் இறங்கியுள்ள ஒரு வல்லரசுக்கு ஆட்சேபம் தெரிவிக்காதிருப்பது அதை ஊக்குவதற்கொப்பே ஆகும். உலகம் முழுவதாலும் கண்டனம் தெரிவிக்கப்பட்ட விஷயத்தில் பேசாதிருப்பது குற்றத்தில் பங்கு கொள்வது போன்றதே. இந்தியாவுக்குக் கொஞ்சநஞ்சம் எஞ்சியுள்ள தார்மிக சக்தியை நாம் காத்துக் கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் போது, 'எந்த நெரிசலுக்கும் இடம் கொடோம்' என்று பிரதமர் சொன்னால் பொருந்தாது.

* * *

மாஸ்கோ — செக்கோஸ்லோவேகியா — தொடர்பு பற்றி நாம் கேள்விப்படுகிற தகவல்கள் குறைவே. இதனால் நாம் மாஸ்கோவின் பலவந்தத்தை அறிய முடியவில்லை. மற்ற வல்லரசுகள் செயலற்று இருப்பதால் ருஷியா தனது யதேச்சாதிகாரத்தில் மேலும் பலமாக ஈடுபடுகிறது. டுப்செயின் அதிகாரத்துக்கு அதிக காலம் இல்லை என்றே செய்திகளிலிருந்து தெரிகிறது. ஆ ல் கம்யூனிஸத்தின் ஆட்சிக்கும் அதிக காலம் இல்லை. ஒரு சர்க்காருக்கு எவ்வளவு ராணுவ பலம் இருந்தாலும், அச்சுறுத்துவதில் எவ்வளவு சக்தி இருந்தாலும் மனித இயல்பை அரசாங்கத்தால் நசுக்கிவிட முடியாது.

செக் நாட்டில் மாஸ்கோ யாரை ஆட்சி பீடத்தில் அமர்த்தினாலும், அம் மக்களின் வீரத் தலைவர் டுப்சேதான். அவர் கிளப்பிய சுதந்திரப் புரட்சி இன்று ருஷ்யாவுக்கு மண்டியிடும் எல்லாக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பரவும். மக்கள் வளர்ச்சிக்கு முன்பும், இயற்கையின் எதிர்க்கவொண்ணாச் சக்திக்கு முன்பும் எந்தச் சாம்ராஜ்ய பலமும் காற்றுக் கரைய வேண்டியதுதான்.

டுப்சேயை ஒழித்துக் கட்டிவிடலாம். ஆனால் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆர்வத்தை அழித்துவிட முடியாது. இது இயற்கையின் உந்துதல். ருஷிய வல்லரசின் பெருந் தலைவர்களாலும் இயற்கையை அழிக்க முடியாது.

* * *

''என் தந்தையின் கொள்கைகளை விடமாட்டேன்'' என்பது மகளின் பித்ருவாத்ஸல்யக் கடமையாக இருக்கலாம். ஆனால் தேசத் தந்தை நமக்குத் தந்த தரும நெறிகளையும் வாழ்க்கை நெறிகளையும் ஒதுக்கித் தள்ளுவதற்கில்லை. வாக்குறுதிகளை முறிப்பதும், லாட்டரிகளை நம்பி அரசாங்கம் வாழ்வதும் பிரதமருடைய தந்தையின் கொள்கையல்ல; தேசத் தந்தையின் கொள்கையும் அல்ல. தேசத்தின் பொருளாதாரம் நிலைகுலையாமலிருப்பதற்காக எவ்வளவோ செய்தாக வேண்டியுள்ளது. அதைச் சம நிலையில் வைக்கும் ஈர்ப்புத் தானத்தைக் கண்டாக வேண்டும். இதற்கு நேர்மாறான நிலையையே கடனில் உருவான டம்பாச்சாரித் திட்டங்கள் உண்டாக்கியுள்ளன. சுமையைத் தாங்க வேண்டிய ஆதாரம் வலுவிழந்தால் என்ன ஆகுமோ, அதேபோல் இன்று நம் பொருளாதாரம் நிலைகுலைந்திருக்கிறது. அதைத் தூக்கிப் பிடித்துத் தாங்கும் சக்தியை உண்டாக்க வேண்டும்.

* * *

தமது கட்சிக்கு ஆட்சியதிகாரத்தைப் பெற்றுத் தர வேண்டும் என்ற ஆசை கட்சித் தலைவர்களிடையே தொற்று நோய்போல் பரவி வருகிறது. தொழில் வளர்ச்சி என்பது உற்பத்தியாளரிடமே விடப்பட்டு, சட்டத்தையும் ஒழுங்கையும் பரிபாலிக்கும் ஸ்தாபனமாக மட்டும் சர்க்கார் இருந்தால் இந்தத் தொற்று நோய் தோன்றியிராது. பெர்மிட்—லைசென்ஸ் முறையால் தொழில் துறையில் அரசாங்கம் பிடிப்பு ஏற்படுத்திக் கொண்ட விஷமமே இன்றைய நிலைக்கு அடிப்படை. காங்கிரஸால் உற்பத்தி செய்யப்பட்ட பெர்மிட் லைசென்ஸ் ஆட்சி முறை, சர்க்காரில் ஸ்தானம் பெறுகிற கட்சி எஜமானர்களுக்குப் பண பலத்தைத் தருகிறது. இதைக் காங்கிரஸ் விபரீதமாக நடத்திக் காட்டிவிட்டது. அதிலிருந்து மற்றக் கட்சிகளுக்கும் நோய் பற்றிக் கொண்டுவிட்டது. அதிகார ஆசை ஏற்பட்டால் மனிதன் விவேகத்தை இழந்து விடுவான்; தவறு எனத் தெரிந்த விஷயத்திலேயே ஈடுபடுவான். எனவே சர்க்காரிடமிருந்து பொருளாதாரக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நீக்கினால் தான் இன்றைய ஊழல்கள் குறையும். வெறும் சட்டத்தையும் ஒழுங்கையும் மட்டும் நிர்வகிக்கும் அரசாங்கத்தில் குறைபாடுகள் இருக்கலாம். ஆயினும் அரசியல் பாழாகி விடாமல் காக்க அது போதும்.

மணி மன்றம் கண்டவருக்கு மணிவிழா



திரு. டி. வி. ராமானுஜம்

ஸ்ரீ டி. வி. ராமானுஜம் என்ற பெயரைக் கேட்டவுடன் சங்கீதத் துறையில் பரிசயம் உள்ள அனைவரும் பம்பாய் ஷண்முகானந்த சங்கீத சபையையும், அதன் மகத்தான மணி மன்றத்தையும் நினைத்துக்கொள்வார்கள். கடந்த பல்லாண்டுகளாக ராமானுஜம் அந்தச் சங்கீத சபையுடன் ஒன்றியிருப்பதுதான் காரணம்.

செப்டெம்பர் 24ந் தேதி மணி விழாக் காணும் அவரது வாழ்க்கையின் பூர்விகக் குறிப்புக்களை நினைவு கூர்கையில் இவர் இசைத் துறை தவிர, வேறு எத்தனை எத்தனைத் துறைகளில் ஈடுபட்டுப் பணி புரிந்திருக்கிறார் என்பதைக் காண்கிறோம்.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாச அய்யங்கார், தீரர் சத்தியமூர்த்தி ஆகியோரின் நிழலில் அரசியல் சேவை செய்திருக்கிறார் ஸ்ரீ ராமானுஜம் அவர்கள்.

பத்திரிகைத் தொழிலிலும் நற்பணி ஆற்றியிருக்கிறார். டாக்டர் வரதராஜுலு நாயுடு நடத்திய 'தமிழ் நாடு' பத்திரிகையிலும், பம்பாய் 'ஃப்ரீ ப்ரெஸ் ஜர்ன'லிலும் உதவி ஆசிரியராகவும், சர்தார் படேல் தொடங்கி வைத்த 'பாரத்' என்ற ஆங்கில நாளிதழில் ஆசியராகவும் இருந்திருக்கிறார்.

ஆல்வாய் கல்லூரியிலும், சென்னை விவேகானந்தா கல்லூரியிலும் பதினேழாண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார்.

சிறு வயதிலிருந்தே சங்கீதத்திலும் மற்றக் கலைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த ராமானுஜம், அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்காரிடம் இசை பயின்றவர். ஆங்கில, தமிழ் நாடகங்களில் நடித்திருக்கிறார்.


இவ்விரு மொழிகளில் அவர் சிறந்த பேச்சாளரும் ஆவார்.




பம்பாயில் பல சங்கீத சபைகளை ஒன்றாக்கி ஷண்முகானந்த சபையை ஐயாயிரம் அங்கத்தினர் கொண்ட தேசத்தின் மிகப் பெரும் சபையாக்கிய பெருமை ஸ்ரீ ராமானுஜத்தினுடையது. ஷண்முகானந்த சபைக்கு மகோன்னதமான கட்டிடம் எழுப்புவதற்காக ஸ்ரீ ராமானுஜம் அந்தரங்கசுத்தியுடன் அயராமல் தொண்டு புரிந்தார். அல்லும் பகலும் அவர் எடுத்துக் கொண்ட விடாமுயற்சி நூறு சதவிகிதமும் பலித்தது. இந்தியாவிலேயே — ஒருகால் ஆசியாவிலேயேகூட என்றுகூடச் சொல்லலாம் — மிகப் பெரிய ஹால் உருவாகிவிட்டது. இதமான முறையில் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட இந்த ஹால் கச்சேரிகளுக்கு மிகவும் எடுப்பாக இருப்பதாகப் பெயர் எடுத்துள்ளது.


ஷண்முகானந்த சபையின் ஆதரவில் நடத்தப்படும் சங்கீத வித்தியாலயம் ஸ்ரீ ராமானுஜத்தின் கலைச் சேவைக்கு இன்னொரு சிறந்த சின்னம்.

ஸ்ரீ டி. வி. ராமானுஜம் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து கலைத் தேவிக்குப் பணி புரிய வேண்டுமென ஆண்டவனை வேண்டிக்கொள்கிறோம்.

பம்பாய் ஷண்முகானந்த சங்கீத சபையின் மணிமண்டபம்










ஆகம-சில்ப சதஸ்

ஸ்ரீ காமகோடிப் பீடத்தின் வியாஸ — பாரத — ஆகம — சில்ப — ஸதஸ் இவ்வாண்டு ஹைதராபாத்தில் விமரிசையாக நடைபெற்றது. விழாப் பந்தலின் கோபுர முகப்பையும்; விழாவில் கலந்து கொண்ட ஆந்திர கவர்னர், முதன் மந்திரி ஆகியோரையும்; வைணவ — சைவ ஆகம விற்பன்னர்களையும்; யக்ஷகானம், புர்ரகதா, பொம்மலாட்டம், குச்சிப்









புடி, துளசி ராமாயண நாடகம், வில்லுப்பாட்டு, கரகம், நாகர் நடனம், ஆகியவற்றை நடத்திய கலைஞர்களையும்; கண்காட்சியில் இடம் கொண்ட தெய்வ உருவங்கள் சிலவற்றையும்; விழாவின் காரணமும் நடுநாயகமுமான ஸ்ரீ பெரியவர்களையும் இளைய சுவாமிகளையும் இங்கு காண்கிறோம்.













அக்கினிப் பரீட்சை!

துரோணன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எதிர்பாராமல் உள்ளே வந்த மீராவைக் கண்ட அவளது தாயார் திகைத்தபடி ''வாசற்கதவு திறந்தா இருந்தது?'' என்று கேட்டாள்.

மீரா ஹும்காரத்தின் மூலம் ஆமாம் என்பதைத் தெரிவித்தாள்.

''ஏன், இன்றைக்குப் பள்ளிக்கூடம் இல்லையோ?''

மீராவிடமிருந்து மறு ஹூம்காரமும் வெளிப்பட்டது.

''ஹூம்! இந்தப் பாழும் கட்டைக்குச் சமயத்தில் தினை விழுந்து போய் விடுகிறது.

தபால்காரன் வந்து போனதும் தான் போட்ட நினைப்பில் வந்துவிட்டேன் போல் இருக்கிறது'' என்று தனக்குள்ளாகக் கூறிக் கொண்டவளாய் எழுந்தாள் தாயார்.

தலைக்கு மேலேயிருந்த பலகையின் மீது வைத்திருந்த கடிதம் ஒன்றை எடுத்து, ''இந்தா, உன் அண்ணு இன்றைக்கும்கூட வரிந்து வரிந்து எழுதி யிருக்கிறான்'' என்று வெறுப்பு முட்டும் குரலில் கூறிவிட்டு, முன்கட்டுக்குச் சென்றுவிட்டாள். மீரா படித்தாள்:

''அம்மா, தயவுசெய்து என்னை நிர்ப்பந்திக்காதே. தங்கச் சிலை போன்ற தங்கை ஒருத்தியின் இளமை வாழ்வு' கருகித் தீய்வதைக் கண்ணாரப் பார்த்துக் கொண்டிருக்கும் அண்ணன் எவனாவது தன் திருமணத்துக்கு ஆசை கொள்ளுவானா?

''மீராவின் மௌனம், சம்மதத்தையோ வேண்டாமையையோ அறிய முடியாத நிலையாக இருப்பதுதான் பெருத்த சோதனையாக உள்ளது. அவளுக்குப் புரியாததையும், தெரியாததையும் நாம் புகட்டவில்லை. அவளைப் பற்றின எதிர்காலத்தை அவள் எப்படி நினைத்திருக்கிறாள் என்பதும் புரியவில்லை. அவள் உன் வார்த்தை, என் வார்த்தை இரண்டையும் மதிக்கா விட்டாலும், மூர்த்தியைப் பார்த்த பின்னும், பழக்கமேற்பட்ட பின்னுமாவது முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அவளுடைய முடிவினால்தான் அவளுடைய வாழ்வு; என்னுடைய வாழ்வு—இரண்டிலும் நீ கொஞ்சம் நல்லதைப் பார்த்துவிட்டு நிம்மதியாகக் கண்ணை மூட இயலும். இதை அவள் சிந்திக்க வேண்டும்.''

கடிதத்தில் படிக்க வேண்டிய முக்கிய பாகம் இவ்வளவுதானே ?

பெண் இதயம் விசித்திரமானது ! எதையும் புதியதாக ஏற்பதற்குரிய துணிச்சலை அளிப்பதில்லை ; வேண்டாமென உதறியெறியத் தக்க பக்குவத்தை இலேசில் கொண்டு விடுவதுமில்லை. அப்படிக்கிருந்தும் உலகில் துணிச்சல் மிகுந்த பெண்களும் புதுமையாக வாழாமலா இருக்கிறார்கள் ?

மீராவின் இதயத்துக்குள் ஒரு புரட்சி—வெறி கொண்ட புரட்சி ! இந்தப் புரட்சியின் புறக் காட்சியாக, இதோ — கம்பிக் கொடியில் பச்சைக் கரைக் கதர் வேஷ்டி ஒன்று. அதன் பக்கத்தில் சிவப்புக் கரையும் ஜரிகைக் கரையும் கொண்ட மில் வேஷ்டிகள் இரண்டு; அதன் பக்கத்தில் மடிப்புக் குலையாமல் போடப்பட்டிருக்கும் இரண்டு சட்டைகள், ஜிப்பாக்கள் — இவ்வளவும் ஈர உடைகளாகக் காட்சியளிக்கின்றனவே—இவை யாருடையவை — எப்போது இங்கு வந்து சேர்ந்தன? எல்லாம் கண்கட்டி வித்தை! நான்கு வருஷங்களுக்குமுன், இந்தக் கம்பிக் கொடியின் காட்சி இப்படித்தானே இருந்தது!

மூட்டிக் காலிட்டு அமர்ந்து, மூங்கில் தூணில் சாய்ந்தபடி இந்த உடைகளின் அசைவைப் பார்த்துக் கொண்டிருக்கும் மீராவின் இதயத்தில் இன்பப் பெருமிதம் துள்ளுகிறது. வாழ்வில் எவராலும் நடத்த முடியாத சாதனையைத் தான் புரிந்து விட்டது போன்ற எக்களிப்புச் சொரிகிறது உள்ளம். இந்த வெற்றியின் அடிப்படை சக்தி — துணிச்சல் !

யாரோ மாடிப்படியேறி வரும் சத்தம் கேட்டு, துணுக்குற்றுத் தலை நிமிர்ந்தாள்.

வந்தவள் மங்களா !

கொண்டுவந்திருந்த மிளகாயையும், தானியங்களையும் கீழே கொட்டிக் கையால் பரத்திவிட்டுக் கொண்டிருந்த மங்களா தலை நிமிர்ந்தாள். கம்பிக் கொடியில் தொங்கிக் கொண்டிருந்த ஈர உடைகள் அவளைத் திகைக்கச் செய்தன. ''ஏன் மாமி, இதை யெல்லாம் யார் இங்கே கொண்டு வந்து உலர்த்தினீர்கள்? இவையெல்லாம் சலவைக்காரனிடம் போடுவதற்காக என் மைத்துனர் கட்டி வைத்திருந்ததாயிற்றே?'' என்றாள் உரத்த குரலில்.

மீரா பதிலே அளிக்கவில்லை. அவளது நெஞ்சு படபடத்தது !

மங்களா கொடியை நெருங்கி வந்து உற்றுப் பார்த்தாள். ''ஆஹா ! சலவைக் காரன்கூட இவ்வளவு அழகாக வெளுத்ததில்லையே ? இதை நீங்களா செய்தீர்கள்? எப்போது எடுத்து வந்தீர்கள்?'' என்றாள் பரபரப்பான அதிசயத்துடன்.

மீரா ஒரு போலிப் புன்னகையை உதிர்த்தாள். ''சலவைக்காரனுக்குக் கொடுக்கிற கூலியை எனக்குக் கொடுப்பதற்குச் சம்மதிப்பீர்களா நீங்கள்? அதற்கு மனசு வராது !''

மங்களா சட்டென மீராவின் கழுத்தைக் கட்டிக் கொண்டவளாய், ''மாமி ! மாமி ! நீங்கள் ஒ விசித்திரம் — உங்கள் மனசை யாராலும் புரிஞ்சு கொள்ளவே முடியாது ! என் மைத்துனருக்கு இதைப் பற்றி என்ன சொல்லுவது ?'' என்றாள் முகத்தில் நிறைந்த மகிழ்ச்சிப் பரவசத்துடன்.

''ஐயோ ! அவரிடம் போய் எதையும் உளறி வைக்காதே !''

இரண்டு தினங்களுக்குப் பின் —

மீரா இவ்வளவு சீக்கிரம் பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பிவிடுவாள் என்பதை அம்மா எதிர்பார்க்கவில்லை. முக்காலிக் கட்டையை மேஜையாக வைத்துக் கொண்டு அதன் மீதுள்ள காகிதங்களில், பென்சிலால் அவள் வரைந்து கொண்டிருக்கும் கடிதம் அப்போது தான் முடிவடைந்திருந்தது. மீராவைக் கண்டதும் சற்றே அதிர்ச்சியுற்றவளாய், காகிதங்களைச் சட்டென மடித்துப் பக்கத்தில் உள்ள பஞ்சாங்கத்துக்குள் மறைத்தாள். மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

''இந்தா, இந்தக் கவருக்கு விலாசத்தை எழுதிக் கொடு. நீதான் அண்ணனுக்குக் கடிதாசு எழுதும் பழக்கத்தையே விட்டாயிடுத்து; நான் அம்மாதிரி இருக்க முடியுமா?'' என்று சொல்லிக் கொண்டே கையிலுள்ள கவரை நீட்டினாள் தாயார்.

அதை வாங்கிக் கொண்ட மீரா அலமாரிக்குள் வைத்த பேனாவைக் கையில் எடுத்தாள். குளிரைக் கொண்டது போன்ற நடுக்கம் அந்தக் கைக்கு! மனத்தில் என்ன கழலிட்டதோ, அதைத் தடை செய்விப்பதேபோல், பேனா மசியைச் சுரக்கவில்லை. இதுவரையில் செய்திராத ஒன்றைச் செய்ய முற்படும் சூழ்ச்சிக் கருத்தாயிற்றே ! மூன்று தடவைகள் பேனாவை உதறிவிட்டு, முகவரியை எழுதிக் கொடுத்தாள். அப்புறம் அம்மா, தான் எழுதிய கத்தையைச் சுருட்டி உறைக்குள் போட்

டதையும், உறையை ஒட்டி எடுத்துக்கொண்டு வெளியே சென்றதையும் பாராதவன்போல் பார்த்தான். அவன் சென்றதும், மீராவுக்கு அடக்கமாட்டாத பெருஞ்சிரிப்பு 'பகபக' வென்று எழுந்துவிட்டது. ஆஹா ! அம்மாவுக்கு ஆங்கிலம் தெரியாத அவலம், இப்போது எவ்வளவு அநுகூலம் ! பாவம்—நம்பிக்கை !

மறுநாள் பம்பாய் போய்ச் சேர வேண்டிய கடிதத்தைப் பள்ளிக்கூடத்திலிருந்த மீராவின் கையில் தவறாமல் கொடுத்து விட்டுப் போனான் தபால்காரன். அதை அங்கேயே பிரிக்கவும், படிக்கவும், சந்தர்ப்பம் சூழ்நிலை இடம் அளிக்கவில்லை. வீட்டை அடைந்ததும் நேரே மாடிக்கு வந்தாள். அந்தத் தூணடியில் அமர்ந்தவளாய்க் கடிதத்தைப் பிரித்தாள்.

அம்மாவால் அண்ணாவுக்கு எழுதப்பட்டுள்ள கடிதம் — அது கடிதமல்ல; அன்னைத் தெய்வத்தின் அருள் வாக்கு! அதிலிருந்த விஸ்தாரமான விவரங்களில் சில வரிகள்—

''....அவர்கள் மூவரும் திருச்செந்தூருக்குப் போயிருக்கிறார்கள். இன்னும் நான்கே தினங்களில் திரும்பி வருகிறார்கள்.

''இவ்வளவு விவரமாக எழுதிய பின் இந்த மூர்த்தியைப் பற்றி நாம் வேறு எதுவும் ஆராய்வதற்கே அவசியம் இல்லை. நான் வணங்கும் தேவியே கருணை கொண்டு, மாற்றுப்பெயராக உள்ள மாதவனையே நம்மிடம் அளித்திருக்க வேண்டுமே தவிர வேறில்லை. ஒரு பெண்ணின் இதயத்தை அறிய முடியாத பெண்ணினம் அன்னையாக எப்படி இருக்க முடியும்? இதை நீயும் புரிந்து கொண்டிருப்பாய். அவர்கள் சிறிதுகூடத் தட்டுத் தடங்கலில்லாமல் பூரண சம்மதத்தைத் தெரிவித்து விட்டதை நினைக்கையில் தெய்வமே இதில் தலையிடுகிறது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

''இப்போது — மீராவுக்கு உரியவனை, உரியவனாகவே உலகமறியச் செய்து வைக்கும் நல்ல நாள் ஒன்றை நிச்சயிப்பதுதான் பாக்கியிருக்கிறது. ஆகவே, உன்னை உடனடியாக எதிர்பார்க்கிறேன். பதினைந்து நாள் லீவில் அடுத்த ரயிலுக்கே நீ கிளம்பி....''

மீரா சட்டென எழுந்தாள். கடிதத்தைக் கையிலெடுத்து, உறைக்குள் செருகி அதைப் புடவைக்குள் மறைத்தாள். ஓட்டமும் நடையுமாகக் கீழ்ப்புறம் வந்தாள். இரு கைகளாலும் அம்மாவைச் சேர்த்து இறுகத் தழுவிக் கொண்டாள். அவ்வளவுதான்! பேரணையை உடைத்துக் கொண்டு பெருகி வரும் வெள்ளமாக அவளது நெஞ்சை உடைத்துக் கொண்டு எழுந்த விம்மலும், வெடிப்புமான அழுகை பீறிட்டுக் கொண்டு வெளியாயிற்று.

அன்றிரவு எழுந்த பேய்க் காற்றும் பெருமழையும் உலகத்தையே நடுங்க வைத்து விட்டன. அந்த வேளை முழுவதிலும் மீராவின் உறக்கமற்ற விழிகள் வெள்ளைக் காகிதங்களுடனும் பேனாவுடனும் உறவாடின. பல நாட்களுக்குப் பின் — இன்று அண்ணாவுக்கு வரையும் கடிதம் அது!

மறு நாள்—

நடுப்பகல் வேளையில் வாசல் பக்கத்துக் கதவு தட்டப்படும் ஓசை கேட்கவும் அம்மா கதவைத் திறந்தாள். அவளுடைய கண்களுக்குக் கிடைத்த காட்சி, மீரா மட்டிலுமில்லை; வாசற்படி ஓரம் நின்ற வாடகை லாரி ஒன்றும், அதை விட்டுக் கீழிறங்கி வந்த கூலியாட்கள் மூவருமேயாகும். தாயார் பிரமித்தாள்.

''அம்மா! இனி ஒரு நாழி கூட இந்த வீட்டில் இருக்க முடியாது. இப்போதே கிளம்ப வேண்டும்'' என்றாள் மீரா கண்டிப்பான குரலில்.

தீயை மிதித்தவள் போல் துள்ளினாள் தாய். ''இதென்ன கூத்து? சித்தம் கலங்கி விட்டதா உனக்கு?'' என்று கேட்டபடி வழி மறித்து நின்றாள்.

மீராவின் பதில் சிறிது அடக்கமாகவே வெளிப்பட்டது. ''ஆமாம்மா. சித்தம் கலங்கித்தான் விட்டது. அதற்கு இந்த எல்லையை விட்டே போனால்தான் தெளிவு ஏற்படும்.''

''பத்து வருஷமாக வாழ்ந்த இடத்தை விட்டு இப்போது எந்த சொர்க்கலோகத்துக்குப் போக வேண்டுமென்கிறே?'' — கடுமை வெடித்தது கேள்வியை யொட்டி.

''நமக்குச் சொர்க்கம் — இந்த ஊர் கிழனண்டைக் கோடி எல்லையில், எனது பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருக்கிறது அம்மா!''

''அப்படி என்ன நிர்ப்பந்தம் இப்போது?'' வீட்டுக்காரருக்குத் தெரிவிக்க வேண்டாமா? குடி வந்திருப்பவர்களும் இல்லாத சமயத்தில் இப்போது—''

மீராவின் குரல் பட்டென்று இடைமறித்தது. ''அம்மா! எல்லா ஏற்பாட்டையும் முடித்து விட்டேன். என் முடிவை இனி மாற்ற முடியாது.''

கண நேரத்துக்குள் கூலியாட்கள் முனைந்து சாமான்களைக் கொண்டு வந்து லாரியை நிரப்பி விட்டனர்.

மீரா மாடிக்கு ஓடினாள். நிலைகுலைந்து வீழ்ந்து கிடந்த கொட்டகையை உற்றுப் பார்த்தவளாய்ச் சிறிது நேரம் நின்றாள். பின்னர் அறுந்து கிடந்த கம்பிக் கொடிகளைச் சுருட்டிக் கையில் எடுத்துக் கொண்டு நொடிப்பொழுதில் திரும்பி விட்டாள்.

பிறகு மீரா குளிக்கும் அறைக்குள் சென்றாள். எதையோ அலமாரிக்குள் தேடப்போன அம்மாவின் கரங்களுக்கு ஒட்டப்படாத புதிய கவர் ஒன்று எளிதாகச் சிக்கிவிட்டது. உறைக்குள்ளிருந்த காகிதக் கத்தைகளை வெளியே இழுத்தாள்.

மூன்று தினங்களுக்கு முன் அவளால் வரையப்பட்டதாயிற்றே? பம்பாய்க்கு எழுதிய கடிதம் இங்கே எப்படி வந்தது?

உள்ளத்தில் குழப்பம் மிகைப்பட்டது. உட் கதவைச் சாத்தித் தாளிட்டாள். அவள் பென்சிலால் எழுதிய கடிதத்தோடு பேனாவினால் வரையப்பட்டிருந்த மீராவின் கடிதமும் அதனுள் இருந்தது.

அதிலிருந்த முக்கியமான வரிகளைத் தேடுவதற்கு அவளது உள்ளம் பரபரப்படைந்தது.

''....ஆகவே, மூன்று தினங்களுக்கு முன் அம்மாவினால் எழுதப்பட்ட கடிதத்தையும் உடன் வைத்துள்ளேன். இந்தக் கடிதம் உன் கைக்குச் சேராமலே செய்வித்தது, என் சூழ்ச்சிதான். இதற்கு நீ என்னை மன்னிக்க வேண்டும்.

''அண்ணா! உலகத்தில் வாழ்பவர்களை நோக்கி வகை வகையான குறைகளும், துன்பங்களும் வராமலிக்கவே முடியாது. இவை, வாழ்பவர்களின் நெறியையோ, கட்டுப்பாட்டையோ, ஒழுக்கத்தையோ, எடை போட வரும் சோதனைகள். இவற்றை வெல்லுவதற்காகவே இந்த இடமாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டேன்!

''அம்மாவின் கடிதத்திலுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை. 'மூர்த்தி' என்கிற ஒரு மூர்த்தி இங்கே சேர்க்கப்பட்ட நிலை, என்னையே நோக்கி வீசப்பட்ட அக்கினிப் பரீட்சை! இதில் வெற்றி யடைந்தவள் உன் தங்கை என்பதைக் கேட்க உனக்கு ஆனந்தமில்லையா? இந்த வெற்றியை மிகுந்த பிரயாசையுடன் அடைந்து விட்டதாக நான் பெருமை கொள்ளத் தயாராக இல்லை. ஒரு மீராவின் சரித்திரத்தையும், மணிமேகலையின் தூய வாழ்வையும், அன்னை சாரதாமணியையும் குழந்தை உள்ளங்களுக்கு அறிமுகமாக்கி வைப்பவளுக்கு, இந்த வெற்றி கிடைப்பதில் கஷ்டம் ஏதும் இல்லையே!

''மற்றபடி என் வாழ்வில் பெரும் குறை இருப்பதாக இனியும் கருதினால், அது உங்களுடைய பிழையே. உலகத்தில் வாழ்பவர்களுக்கு உரிமையாகச் சில குழந்தைகள்தாம் உண்டு. ஆனால் எனக்கோ— வருஷத்துக்கு முப்பத்தாறு குழந்தைகள்! இந்தக் குழந்தைகளின் பிஞ்சு முகங்களை நான் தவறாமல் கண்டு கொண்டிருப்பவளுக்குக் குறையொன்று எப்படி ஏற்பட முடியும்?

''இந்தக் கடிதம் என்னைப் பற்றிய விளக்கங்களுக்காகவே வரைந்துள்ளேன். உனது நிலைமை — நீ அன்னையின் வாக்குப்படியே நடக்க வேண்டிய கடமையில் உள்ளது. நீ அனுமதி தந்தால் அதைப் பற்றியும் எழுத விரும்புகிறேன்....''

கண்களில் முட்டி நின்ற நீரைத் துணியினால் துடைத்தவளாய், பரபரப்புக்கொண்டு எழுந்தாள் அன்னை. துண்டுக் காகிதம் ஒன்றையும், பேனாவையும் தேடிக் கையில் எடுத்துக் கொண்டாள். 'மளமள' வென்று சில வரிகள் — முடிவுரையாக எழுதி முடித்தாள். அதனையும் மற்றக் காகிதங்களுடன் சேர்த்து உறைக்குள் திணித்தாள்.

அந்தச் சில வரிகள்:

''உன் தங்கை அக்கினிப் பரீட்சை தனக்கே நேரிட்டதாகக் குறிப்பிட்டு வருணித்திருக்கிறாள். உண்மை அப்படியில்லை! அனுபவங்களை யெல்லாம் விழுங்கியும், அறியாமைக் கட்டையாக இருக்கும் நான் ஒருத்தி— கலைப் பட்டதாரியாக உள்ள நீ ஒருவன்—நமது கண்களைப் புற அழகால் மறைத்த ஒருவன்— ஆக மூவருமாகப் புரிந்த சோதனையில் நம் யாவருக்கும் தோல்வி. அதற்குக் காரணம் — அவளே அக்கினி! அழகான ஒளிமிக்க நெருப்பு அவள்! அவளைப் புரிந்துகொள்ள மாட்டாத அவலங்களாக நாம் முனைந்தோமே, அதுதான் அக்கினிப் பரீட்சை!''

சிறுவர் விருந்து



தயாரிப்பு: வாண்டுமாமா


பதில் தெரியுமா?

ஐந்து கேள்விகள்

- 'கலிகத்தாகப்' ஒரு விளையாட்டுக்கு வழங்கப் படுகிறது. அது என்ன விளையாட்டு? எந்த நாட்டில்?
- நியான் விளக்கில் ஒளி எப்படி உண்டாக்கப்படுகிறது?
- தண்ணீரில் உள்ள இரண்டு வாயுக்கள் என்ன?
- மீன்களிலேயே மிக வேகமாக நீந்தக்கூடிய மீன் எது......?
- நான்கு ஆண்டுகள் தூங்கி எழுந்திருக்கும் ஐந்து எது?

உன் கண் உன்னை ஏமாற்றினால்...!


கீழே உள்ள படத்தைப் பாருங்கள். நீண்ட சதுரங்களின் அடுக்குக் கீழ் நோக்கிச் செல்வதாகத் தெரியும். அடுத்த விநாடியே அந்த அடுக்கு மேல் நோக்கிப் போகும். ஏன்? அதுதான் டடடா! டடடா...! டட்டா....!



சிம்ம கர்ஜனை


செய்து பார்

சிங்கம் இல்லாமல் சிங்க கர்ஜனையைக் கேட்க வேண்டுமா? நாய் இல்லாமல் உறுமும் நாயின் குரலைக் கேட்க வேண்டுமா? இதோ, இப்படி ஒரு பெட்டி- எல்லாப் பக்கமும் மூடிய படி. அதன் ஒரு பக்கத்தில் ஒரு சிறு துவாரம் செய்து அதில் உங்கள் பென்சிலை நுழைத்துக் கொள்ளுங்கள். உட்பக்கம் உள்ள பென்சிலின் மையம் துவாரத்துக்கு நேராக இருக்கும்படி வைத்து அதில் ஒரு நைலன் நூலை முடிந்து மறுமுனையை வெளிப் பக்கமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். நைலன் நூல் நழுவாமலிருக்க ரோஜனத்தினால் தேய்த்துக் கொள்ளுங்கள். பெட்டியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு நூலை உருவி இழுத்துப் பாருங்கள். பெட்டியிலிருந்து சிங்ககர்ஜனை கேட்கும். பெட்டியின் அமைப்பைப் பொறுத்து அதிலிருந்து வெளிப்படும் சப்தமும் வேறுபட்டு இருக்கும். இது எப்படி? பெட்டியின் பக்கங்களில் ஏற்படும் சலனம், அதிர்ச்சியே இந்த வினோதமான சப்தங்களுக்குக் காரணம்.



ஓடுமீன் ஓட...!


இந்தப் பெலிகன் என்ற பறவைக்கு ரொம்பப் பசியாம். ஒரு மூன்று மீன்களைப் பிடித்துப் போடுங்கள். குறைந்த பட்சம் பதினாறு பவுண்டாவது அவைகளின் எடை இருக்க வேண்டும். மீன்களின் மீதே அவைகளின் எடை குறிக்கப் பட்டிருக்கிறது.



அப்படியும், இப்படியும், எப்படியும்!

கீழே உள்ள படத்தைப் பார்த்ததும் சொக்கட்டான் ஆட்டம் போலிருக்கிறதென்று சொக்க வேண்டாம். உங்கள் மூளையைக் கலக்கும் ஒரு கணக்கு அது. படத்தின் மேலேயுள்ள ஒன்பது இலக்கங்களை இந்த ஒன்பது கட்டங்களில் அடைக்க வேண்டும். எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை ஒன்றாக இருக்க வேண்டும்.

½ · 1 · 1½ · 2 · 2½ · 3 · 3½ · 4 · 4½




பார்த்த ஞாபகம் இல்லையோ?

இந்தப் பக்கத்தில் சில ஜீவராசிகளின் படம் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தோட்டங்களிலே இவைகளை நீங்கள் சாதாரணமாகக் காணலாம். ஒவ்வொன்றைப் பற்றியும் சிறு குறிப்பு உள்ளது. அதைக் கொண்டு இவை என்னென்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.



1. தன் சிறிய இறகுகளை ஒன்றோடு ஒன்றைத் தேய்த்துக் கொள்ளும்போது இடைவிடாது ஒரு சத்தத்தை உண்டாக்கும். வீட்டின் மூலைமுடுக்குகளில் முக்கியமாக வெதுவெதுப்பான அடுப்படியின் அருகே காணப்படும். சீனாவில் குழந்தைகள் இதை விரும்பி விளையாட வைத்துக் கொள்வார்கள். இதன் பெயர் ———

2. ஆரஞ்சு நிற உடலில் கறுப்புப் புள்ளிகளோடு காணப் படும். உடலைப் பாதுகாக்கும் இந்த அங்கி ஓடுபோலக் கனமானது. பறக்கும்போது இந்த ஓட்டைத் தூக்கிக் கொள்ளும். இதனடியில் உள்ள சிறிய இறகுகள் வெளிப் படும். இந்தச் சிறிய இறகுகளின் உதவியால் பறக்கும். இதன் பெயர் ———





3. கிராமத்து வாய்க்கால் பக்கங்களில் இதைக் காண லாம். இதில் இரண்டு வகை உண்டு. அந்த இன்னொரு வகை பட்டாளம் பட்டாளமாகப் படையெடுத்து வரும், பயங்கரமாக. மேகமே இரண்டு வருவதுபோல் இருக்கும். இதன் வழியில் எதிர்ப்பட்ட எந்தப் பயிர் பச்சையும் தப்பாது. வயல், தோட்டம், துரவு எல்லாம் அபேஸ். அந்த கைய சக்தி வாய்ந்தது இந்தச் சின்ன ஜந்து. இதன் பெயர்—

4. இதன் கடி உலகப் பிரசித்தி பெற்றதாயிற்றே! கொடிய நோய்களான மலேரியா, மஞ்சள் காய்ச்சல் போன்ற வைகளைச் சுமந்து செல்லும். மிருகங்கள், மனிதன் இவை களின் உடலில் இஞ்செக்ஷன் செய்து ரத்தத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும் கருவி ஒரு மெல்லிய குழாய். இது தலைப் பாகத்தில் இருக்கும். அழுக்கு நீர்த் தேக்கங்களில் உற்பத்தியாகிறது. இதன் பெயர் ———







5. ஆறு பக்கங்களுடைய பல அறைகளைக் கொண்டது இதன் வீடு. இந்த வீட்டை ஆட்சி செய்வது ராணி — மகாராணி! ஒரே ஒரு ராணிதான். ராஜா கிடையாது. வீட்டின் மற்ற நபர்கள் இரண்டு பிரிவு. ஒன்று வேலைக் காரர்கள். மற்றது சோம்பேறிகள் — ஆண் வர்க்கம்! வேலைக்காரர்கள் உழைப்பாளிகள் — பெண் வர்க்கம். இதன் பெயர் ———

6. அறுவடைக் காலத்தில் இதைக் காணலாம். உருவத் தில் பெரியது. பறக்கும்போது சத்தம் உண்டாக்கும். சத்தம் உண்டாக்கும் இத்தகைய ஜீவராசிகளில் இது பெயர் பெற்றது. இதன் ஜன்ம விரோதி குளவிதான். தன் விஷக் கொடுக்கால் இதைக் கொட்டி நினைவிழக்கச் செய்துவிடும். இதன் பெயர் —

விடை : 1. பாச்சை. 2. தாவர வண்டு. 3. தத்துக்கிளி. 4. கொசுவேதான். 5. தேனீ. 6. மாட்டு ஈ.





வக்கீல்: சம்பவம் நடந்த இடத்திலிருந்து முப்பத் தைந்தடி தூரத்தில் இருந்ததாகக் கூறுகிறாய் இல்லையா? எங்கே, உன்னால் எத்தனை அடி தூரத்தில் இருக்கும் பொருள் களைத் துல்லியமாகக் காண முடியும் என்பதைக் கோர்ட்டார் முன்னிலையில் கூறு பார்க்கலாம்.

சாட்சி: சொல்றேனுங்க. நான் காலையில் எழுந்ததும் சூரியனைப் பார்க்கிறேன். சூரியன் பூமியிலிருந்து தொண்ணூத்தி மூணு மிலியன் மைல்களுக்கு அப்பால் இருப்பதாகச் சொல்றாங்க!



Bensons-0460 TAM

பொன்னியின்

பதினைந்தாம் அத்தியாயம்

• வானதியின் ஜாலம் •



இளையபிராட்டி குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும் ரதத்தில் ஏறிக் குடந்தை நகரை நோக்கிச் சென்றார்கள் அல்லவா? அதன் பிறகு படகில் இருந்த பெண்கள் என்ன பேசினார்கள், என்ன செய்தார்கள் என்பதை நாம் சிறிது தெரிந்துகொள்ள வேண்டும்.

''அடியே, தாரகை! இந்தக் கொடும்பாளூர்க்காரிக்கு வந்த யோகத்தைப் பாரடி! அவள் பேரில் நம் இளையபிராட்டிக்கு என்னடி இவ்வளவு ஆசை?'' என்றாள் ஒருத்தி.

''ஆசையுமில்லை, ஒன்றுமில்லையடி, வாரிணி! நாலு மாதமாக அந்தப் பெண் ஒரு மாதிரி கிறுக்குப் பிடித்தவள் போல் இருக்கிறாள். அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து தொலைக்கிறாள். தாய் தகப்பனார் இல்லாத பெண்ணை நம்மை நம்பி ஒப்புவித்திருக்கிறார்களே என்று இளையபிராட்டிக்குக் கவலை. அதனால்தான், வானதிக்கு என்ன வந்து விட்டது என்று கேட்க ஜோதிடரிடம் அழைத்துப் போயிருக்கிறார்! ஏதாவது பேய் பிசாசுகளின் சேஷ்டையாயிருக்கலாம் அல்லவா? அப்படியிருந்தால் ஏதாவது மந்திரம் கிந்திரம் போட்டு ஓட்ட வேண்டும் அல்லவா?'' என்றாள் தாரகை.

'' பேயுமில்லை, பிசாசுமில்லையடி! இவளை வந்து எந்தப் பிசாசு பிடிக்கப் போகிறது? இவளே நூறு பிசாசை அடித்து ஓட்டி விடுவாளே?'' என்றாள் வாரிணி என்பவள்.

'' வானதி மயக்கம் போட்டு விழுவதுகூடப் பாசாங்குதானடி! இப்படியெல்லாம் செய்தால் மெதுவாக இளவரசரைத் தன் வலையில் போட்டுக் கொண்டுவிடலாம் என்று அவளுடைய எண்ணம்!'' என்றாள் இன்னொருத்தி.

''நிரவதி சொல்வதுதான் சரி! அது மட்டுமா? அன்றைக்கு இளவரசர் புறப்படும்போது கையிலிருந்த தீபத் தட்டைக் கீழே போட்டாளே? அது கூடத் தன்னை அவர் கவனிக்க வேண்டுமென்பதற்காகச் செய்த காரியந்தான்! இரண்டு கைகளாலும் ஏந்திக் கொண்டிருந்த தட்டு அப்படித் தவறி விழுந்து விடுமா? அல்லது நம் இளவரசர் என்ன புலியா, கரடியா, அவரைப் பார்த்து இவள் பயப்படுவதற்கு?'' என்றாள் வாரிணி.

''உடனே மூர்ச்சை போட்டு விழுந்து விட்டதாகப் பாசாங்கு செய்தாளே? அதற்கு எவ்வளவு கெட்டிக்காரத்தனம் வேண்டும்?'' என்றாள் நிரவதி.

''அவள் செய்த ஜாலத்தைக் காட்டிலும் அந்த ஜாலத்தில் குந்தவைதேவியும் இளவரசரும் ஏமாந்து போனார்

செல்வன்

அமரர் **கல்கி**



களே, அதுதான் பெரிய வேடிக்கை!'' என்றாள் செந்திரு என்பவள்.

''பொய்யும் புனைசுருட்டும் ஜாலமும் மாய்மாலமும் செய்கிறவர்களுக்குத்தான் இது காலம்!'' என்றாள் மந்தாகினி என்பவள்.

'' யுத்தத்துக்குப் புறப்பட்டான பிறகு இளவரசர் திரும்பி வந்து இந்த வானதியைப் பார்த்து விட்டுப் போனாரே. இதை விட என்னடி வேண்டும்? அவளுடைய மாயாஜாலம் எவ்வளவுதூரம் பலித்து விட்டது பார்த்தாயா ?'' என்றாள் வாரிணி.

''அதெல்லாம் ஒன்றுமில்லை; இளவரசர் அவ்வளவு மேன்மையான குணமுள்ளவர். ஒரு பெண் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள் என்றால், அவளைப் பார்த்து விசாரியாமல் போவாராடி? அதிலிருந்து நீ ஒன்றும் அர்த்தம் கற்பிக்க வேண்டாம்!'' என்றாள் தாரகை.

''இளவரசரைப் பற்றி நீ சொல்வது தான் உண்மை. அவரைப் போன்ற குணசாலி இந்த ஈரேழு பதினாலு உலகத்திலும் வேறு யார் இருக்க முடியும்? கதைகளிலும் காவியங்களிலும் கூடக் கிடையாது. ஆனால் நான் சொல்கிறது வேறு. இவள் — இந்த வானதி— மயக்கம் போட்டு விழுந்தாளே, அது என்ன மயக்கம் தெரியுமா? அதைக் கேட்க ஜோதிடரிடம் போயிருக்க வேண்டியதில்லை. என்னைக் கேட்டிருந்தால் நானே சொல்லியிருப்பேன்!'' என்றாள் வாரிணி.

''அது என்ன மயக்கமடி? எங்களுக்குத்தான் சொல்லேன்!'' என்றாள் செந்திரு. வாரிணி செந்திருவின் காதோடு ஏதோ சொன்னாள்.

''என்ன இரகசியம் சொன்னாள்? எங்களுக்குத் தெரியக் கூடாதா?'' என்று நிரவதி கேட்டாள்.

''அது சாதாரண மயக்க மில்லையாம்! மையல் மயக்கமாம்!'' என்றாள் செந்திரு.

உடனே எல்லாரும் கடகடவென்று சிரித்தார்கள். அதைக் கேட்டு விட்டு நதிக்கரை மரங்களில் இருந்த பறவைகள் சட சடவென்று இறக்கை அடித்துக் கொண்டு பறந்து சென்றன.

''நம் இளவரசர் இலங்கையிலிருந்து திரும்பி வந்தால் மறுபடியும் இவள் மாயப் பொடி போடப் பார்ப்பாள். அதற்கு நாம் இடங் கொடுத்துவிடாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!'' என்று சொன்னாள் நிரவதி.

''இளவரசர் திரும்பி வருவதற்குள் இந்த வானதி பைத்தியம் பிடித்துப் பிதற்ற ஆரம்பிக்காவிட்டால் என் பெயர் தாரகை இல்லை; 'தாடகை' என்று மாற்றி வைத்துக் கொள்ளுகிறேன்!'' என்றாள் தாரகை.

''அது கிடக்கட்டுமடி! இளைய பிராட்டி சொல்லி விட்டுப் போன காரியத்தை அவர் வருவதற்குள் செய்து வைக்க வேண்டாமா? வாங்கஎடி!'' என்றாள் மந்தாகினி.

பிறகு அந்தப் பெண்களில் இருவர் படகின் அடியில் ஏற்கனவே சிறிது பெயர்த்திருந்த ஒரு பலகையைப் பெயர்த்து எடுத்தார்கள். பெயர்க்கப் பட்ட இடத்தில் நீளமான பெட்டி போல் அமைந்த பள்ளத்தில் ஒரு முதலை கிடந்தது! அதாவது, செத்துப் போன முதலையின் உடலைப் பதப் படுத்தி உள்ளே பஞ்சும் நாரும் திணித்து வைத்திருந்த பொம்மை முதலை. அதை எடுத்து வெளியில் வைத்துக் கொண்டார்கள். படகைச் சிறிது தூரம் செலுத்திக் கொண்டு சென்று நதிக்கரை ஓரத்தில் பெரிய பெரிய வேர்கள் விட்டு வளர்ந்திருந்த ஒரு பெரும் மாமரத்தின் அருகில் வந்தார்கள். அம்மரத்தின் ஓரத்தில் அத்தோல் முதலையை எடுத்து விட்டார்கள். அது மர வேர்களிலே பாதியும் நதி வெள்ளத்தில் பாதியுமாகக் கிடந்தது. பார்ப்பதற்கு நிஜ முதலையைப் போலவே பயங்கரமான தோற்றம் அளித்தது. வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடாமல் ஒரு சிறிய மணிக் கயிற்றை அதன் கால் ஒன்றில் கட்டி வேரோடு சேர்த்துப் பிணைத்தார்கள். கயிறு வெளியில் தெரியாதபடி நீருக்குள்ளேயே அமுங்கியிருக்கும்படி கட்டினார்கள்.

''ஏனடி, மந்தாகினி! எதற்காக இந்தப் பொம்மை முதலையை இப்படி மரத்தடியில் கட்டி வைக்கச் சொல்லியிருக்கிறார் இளையபிராட்டி?'' என்று தாரகை கேட்டாள்.

''உனக்குத் தெரியாதா? வானதி மிக்க பயங்கொள்ளியா யிருக்கிறாள் அல்லவா? அவளுடைய பயத்தைப் போக்கித் தைரியசாலி ஆக்குவதற்குத் தான்!'' என்றாள் மந்தாகினி.

''எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் வானதியை இளவரசருக்குக் கலியாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்றே குந்தவைதேவி உத்தேசித்திருக்கிறார் போலிருக்கிறது!'' என்றாள் நிரவதி.

''அப்படி ஏதாவது பேச்சு வந்தால் நான் இந்த வானதிக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்று விடுகிறேன் பார்த்துக் கொண்டிரு!'' என்றாள் பொறாமைக்காரியான வாரிணி.

''நீ இப்படியெல்லாம் எரிச்சல் அடைவதற்குக் காரணமே இல்லை. மானிய கேடத்து இரட்டை மண்டலச் சக்கரவர்த்தியும் வேங்கி நாட்டின் மன்னரும் கலிங்க தேசத்து ராஜாவும் வடக்கே வெகு தூரத்தில் உள்ள கன்னோசி சக்கரவர்த்தியும்கூட நம் இளவரசருக்குப் பெண் கொடுக்கக் காத்திருக்கிறார்களாம்! அப்படியிருக்க இந்தக் கொடும்பாளூர் வானதியை யாரடி இலட்சியம் செய்யப் போகிறார்கள்!'' என்றாள் மந்தாகினி.

''நீ சொல்லுகிறபடி அந்த அரசர்கள் காத்திருக்கலாமடி! ஆனால் நம் இளவரசருடைய விருப்பம் அல்லவா முக்கியம்? இளவரசர் 'நான் எப்போதாவது கலியாணம் செய்து கொண்டால் தமிழகத்துப் பெண்ணைத்தான் மணந்து கொள்வேன்!' என்று சொல்

லிக் கொண்டிருக்கிறாராம்! உங்களுக்கெல்லாம் இது தெரியாதா?'' என்றாள் செந்திரு.

''அப்படியானால் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. நாம் எல்லோரும் சேர்ந்து தனித் தனியே நம் கைவரிசையைக் காட்ட வேண்டியதுதானே? இந்த வானதியினால் முடிகிற காரியம் நம்மால் முடியாது போய் விடுமா? அவளிடம் உள்ள மாயப் பொடி நம்மிடமும் இல்லையா, என்ன?'' என்றாள் தாரகை.

இப்படியெல்லாம் இந்தப் பெண்கள் பேசியதற்கு ஆதாரமான நிகழ்ச்சி என்னவென்பதை நேயர்களுக்கு இப்போது தெரிவிக்க விரும்புகிறோம்.

பதினாறாம் அத்தியாயம்

அருள்மொழிவர்மர்

இன்றைக்குச் சுமார் 980 ஆண்டுகளுக்கு முன்னால் கோ இராச கேசரி வர்மர் பராந்தக **சுந்தரசோழ மன்னர்** தென்னாட்டில் இணையில்லாத சக்கரவர்த்தியாக விளங்கி வந்தார். நம் கதை நடக்கும் காலத்துக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவர் சிங்காதனம் ஏறினார். சென்ற நூற்றாண்டுகளாகச் சோழர்களின் கை நாளுக்கு நாள் வலுத்து வந்தது. சோழ சாம்ராஜ்யம் நாலா திசையிலும் பரவி வந்தது. எனினும் சுந்தரசோழர் பட்டத்துக்கு வந்த சமயத்தில் தெற்கேயும் வடக்கேயும் விரோதிகள் வலுப்பெற்றிருந்தார்கள். சுந்தர சோழருக்கு முன்னால் அரசு புரிந்த கண்டராதித்தர் சிவ பக்தியில் திளைத்துச் 'சிவஞான கண்டராதித்தர்' என்று புகழ் பெற்றவர். அவர் இராஜ்யத்தை விஸ்தரிப்பதில் அவ்வளவாகச் சிரத்தை கொள்ளவில்லை. கண்டராதித்தருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவருடைய சகோதரர் **அரிஞ்சயர்** ஓர் ஆண்டு காலந்தான் சிம்மாதனத்தில் இருந்தார். அவர் தொண்டை நாட்டிலுள்ள 'ஆற்றூரில் துஞ்சிய' பின்னர், அவருடைய புதல்வர் பராந்தக சுந்தர சோழர் தஞ்சைச் சிம்மாதனம் ஏறினார்.

பேரரசர் ஒருவருக்கு இருக்க வேண்டிய எல்லாச் சிறந்த அம்சங்களும் சுந்தரசோழ சக்கரவர்த்தியிடம் பொருந்தியிருந்தன. போர் ஆற்றலில் மிக்க சுந்தர சோழர் தம் ஆட்சியின் ஆரம்பத்திலேயே தென் திசைக்குப் படையெடுத்துச் சென்றார். **சேவூர்** என்னுமிடத்தில் சோழ சைன்யத்துக்கும் பாண்டிய சைன்யத்துக்கும் பெரும் போர் நடைபெற்றது. அச்சமயம் மதுரை மன்னனாயிருந்த **வீர பாண்டியனு**க்குத் துணை செய்வதற்காகச் சிங்கள நாட்டு அரசன் மகிந்தன் ஒரு பெரிய சேனையை அனுப்பியிருந்தான். சோழர்களின் மாபெரும் வீர சைன்யம் பாண்டியர்களுடைய சேனையையும் சிங்கள நாட்டுப் படையையும் சேவூரில் முறியடித்தது. வீர பாண்டியன் படை இழந்து, உயிரை மட்டும் காப்பாற்றிக் கொண்டு போர்க்களத்திலிருந்து ஓடித் தப்பித்தான். பாலை நிலப் பகுதி ஒன்றின் நடுவில் இருந்த மலைக் குகையில் ஒளிந்து கொண்டு காலங் கழிக்கலானான்.

சேவூர்ப் போரில் ஈழத்துப் படை அநேகமாக நிர்மூலமாகிவிட்டது. எஞ்சிய வீரர்கள் சிலர் போர்க்களத்தில் புகழையும் வீரத்தையும் உதிர்த்து விட்டு, உயிரை மட்டும் கைக்கொண்டு ஈழ நாட்டுக்கு ஓடிச் சென்றார்கள்.

இவ்விதம் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் நடக்கும் போர்களில் சிங்கள மன்னர்கள் தலையிட்டுப் பாண்டியர்க்கு உதவிப் படை அனுப்புவது சில காலமாக வழக்கமாய்ப் போயிருந்தது. இந்த வழக்கத்தை அடியோடு ஒழித்து விடச் சுந்தர சோழ சக்கரவர்த்தி விரும்பினார். ஆகையினால் சோழ சைன்யம் ஒன்றை இலங்கைக்கு அனுப்பிச் சிங்கள மன்னர்களுக்குப் புத்தி கற்பிக்க எண்ணினார். கொடும்பாளூர்ச் சிற்றரசர் குடும்பத்தைச் சேர்ந்த பராந்தகன் சிறியவேளான் என்னும் தளபதியின் தலைமையில் ஒரு பெரும் படையைச் சிங்களத்துக்கு அனுப்பினார். துரதிர்ஷ்ட வசமாக, சோழர் படை சிங்களத்துக்கு ஒரே தடவையில் போய்ச் சேரவில்லை. அதற்குத் தேவையான கப்பல் வசதிகள் இல்லை. முதல் தடவை சென்ற சேனை முன்யோசனையின்றித் துணிந்து முன்னேறத் தொடங்கியது. மகிந்த ராஜனுடைய தளபதி சேனன் என்பவனின் தலைமையில் சிங்களப் படை எதிர்பாராத விதத்தில் வந்து சோழப் படையின் பகுதியை வளைத்துக் கொண்டது. பயங்கரமான பெரும் போர் நடந்தது. அதில் சோழ சேனாதிபதியான பராந்தகன் சிறிய வேளான்

தன் வீரப் புகழை நிலைநிறுத்திவிட்டு இன்னுயிரைத் துறந்தான்! 'ஈழத்துப் பட்ட பராந்தகன் சிறிய வேளான்' என்று சரித்திரக் கல்வெட்டுக்களில் பெயர் பெற்றான்.

இந்தச் செய்தியானது பாலைவனத்தில் மலைக் குகையில் ஒளிந்து கொண்டிருந்த வீர பாண்டியனுக்கு எட்டியதும் அம்மன்னன் மீண்டும் துணிவு கொண்டு வெளிவந்தான். மறுபடியும் பெருஞ் சேனை திரட்டிப் போரிட்டான். இம்முறை பாண்டிய சேனை அதோகதி அடைந்ததுடன், வீரபாண்டியனும் உயிர் துறக்க நேர்ந்தது. இந்தப் போரில் சுந்தர சோழரின் மூதற் குமாரன் ஆதித்த கரிகாலன் முன்னணியில் நின்று பராக்கிரமச் செயல்கள் புரிந்தான்; 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பர கேசரி' என்ற பட்டத்தையும் அடைந்தான்.

எனினும், சிங்கள மன்னன் மகிந்தனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்ற விருப்பம் சுந்தர சோழ சக்கரவர்த்திக்கு மட்டுமல்ல,— சோழ நாட்டுத் தளபதிகள், சாமந்தகர்கள், சேனா வீரர்கள் எல்லாருடைய மனத்திலும் குடிகொண்டிருந்தது. படையெடுத்துச் செல்ல ஒரு பெரிய சைன்யமும் ஆயத்தமாயிற்று. அதற்குத் தலைமை வகித்துச் செல்வது யார் என்னும் கேள்வி எழுந்தது. சுந்தர சோழரின் மூத்த புதல்வர் — பட்டத்து இளவரசனாகிய ஆதித்த கரிகாலன்,— அச்சமயம் வடதிசைக்குச் சென்றிருந்தான். திருமுனைப்பாடி நாட்டிலும் தொண்டை மண்டலத்திலும் சில நாட்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த இரட்டைமண்டலப் படைகளை (ராஷ்டிர கூடர்களை) முறியடித்து விரட்டிவிட்டுப் புராதனமான காஞ்சி நகரைத் தமது வாசஸ்தலமாகச் செய்து கொண்டிருந்தான். மேலும் வடதிசையில் படையெடுத்துச் செல்வதற்கு ஆயத்தமும் செய்து கொண்டிருந்தான்.

இந்நிலைமையில், ஈழ மண்டலப் படைக்குத் தலைமை வகித்துச் செல்லச் சோழ நாட்டின் மற்றத் தளபதிக்குள்ளே பெரும் போட்டி ஏற்பட்டது. போட்டியிலிருர்து பொறாமையும் புறங் கூறலும் எழுந்தன. பழந்தமிழ் நாட்டில் போருக்குப் போகாமல் தப்பித்துக் கொள்பவரைக் காண்பது மிக அருமை. போர்க்களத்துக்குச் செல்லுவது யார் என்பதிலேதான் போட்டி உண்டாகும். அதிலிருந்து சில சமயம் பொறாமையும் விரோதமும் வளருவதுண்டு.

ஈழ நாட்டுக்குச் சென்று மகிந்தனைப் பழிக்குப் பழி வாங்கிச் சோழரின் வீரப் புகழை நிலைநாட்டுவது யார் என்பது பற்றி இச்சமயம் சோழ நாட்டுத் தலைவர்களிடையிலே போட்டி மூண்டது. இந்தப் போட்டியை அடியோடு நீக்கி அனைவரையும் சமாதானப்படுத்தும்படியாகச் சுந்தர சோழ மன்னரின் இளம் புதல்வர் **அருள்மொழிவர்மர்** முன்வந்தார்.

''அப்பா! பழையாறை அரண்மனையில் அத்தைகளுக்கும் பாட்டிகளுக்குமிடையில் இத்தனை நாள் நான் செல்லப் பிள்ளையாக வளர்ந்தது போதும். தென்திசைச் சைன்யத்துக்கு மாதண்டநாயகனாக என்னை நியமனம் செய்யுங்கள். ஈழப் போருக்குத் தலைமை வகித்து நடத்த நானே இலங்கை சென்று வருகிறேன்!'' என்றார் இளங்கோ அருள்மொழி வர்மர்.

அருள்மொழி வர்மருக்கு அப்போது பிராயம் பத்தொன்பதுதான். அவர் சுந்தரசோழரின் கடைக்குட்டிச் செல்வப் புதல்வர்; பழையாறை அரண்மனைகளில் வாழ்ந்த ராணிமார்களுக்கெல்லாம் செல்லக் குழந்தை; சோழ நாட்டுக்கே அவர் செல்வப்பிள்ளை.

சுந்தர சோழ மன்னர் நல்ல அழகிய தோற்றம் வாய்ந்தவர். அவருடைய தந்தை அரிஞ்சயர் சோழ குலத்துக்கு எதிரிகளாக இருந்த வைதும்பராயர் வம்சத்துப் பெண்ணாகிய கலியாணியை அவளுடைய மேனி அழகைக் கண்டு மோகித்து மணந்துகொண்டார். அரிஞ்சயருக்கும் கலியாணிக்கும் பிறந்த சுந்தர சோழருக்குப் பெற்றோர்கள் வைத்த பெயர் பராந்தகர். அவருடைய தோற்றத்தின் வனப்பைக் கண்டு நாட்டாரும் நகரத்தாரும் ''சுந்தரசோழர்'' என்று அவரை அழைத்து வந்தார்கள். அதுவே, அனைவரும் வழங்கும்பெயராயிற்று.

அத்தகையவருக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாருமே அழகில் மிக்கவர்கள்தான், ஆனால் கடைசியில் பிறந்த அருள்மொழி வர்மர் அழகில் அனைவரையும் மிஞ்சிவிட்டார். அவ



ருடைய முகத்தில் பொலிந்த அழகு மனித குலத்துக்கு உரியதாக மட்டும் இல்லை; தெய்விகத் தன்மை பொருந்தியதாக இருந்தது. அவர் குழந்தையாக இருந்தபோது சோழ வம்சத்து ராணிமார்கள் அவரை முத்தமிட்டு முத்தமிட்டுக் கன்னம் கனியச் செய்துவிடுவார்கள். எல்லாரிலும் அதிகமாக அவரிடம் வாஞ்சையுடன் இருந்தவள் அவருடைய தமக்கையாகிய குந்தவை. அருள்மொழிக்கு இரண்டு பிராயந்தான் மூத்தவளான போதிலும், தம்பியை வளர்க்கும் பொறுப்பு தன் தலை மேலேயே சுமந்திருப்பதாகக் குந்தவைப் பிராட்டி எண்ணியிருந்தாள். குந்தவையிடம் அருள்மொழியும் அதற்கிணையான வாஞ்சை வைத்திருந்தார். தமக்கை இட்ட கோட்டைத் தம்பி தாண்டுவது கிடையாது. இளையபிராட்டி ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும்; அதற்கு மாறாகப் பிரம்மாவும் விஷ்ணுவும் சிவனும் சேர்ந்து வந்து சொன்னாலும் அருள்மொழி வர்மர் பொருட்படுத்த மாட்டார். தமக்கையின் வாக்கே தம்பிக்குத் தெய்வத்தின் வாக்காயிருந்தது.

தம்பியின் முகத்தைத் தமக்கை அடிக்கடி உற்று நோக்குவாள். விழித்துக் கொண்டிருக்கும் போது மட்டுமல்லாமல் அவன் தூங்கும்போது கூட நாழிகைக் கணக்கில் பார்த்துக் கொண்டிருப்பாள். ''இந்தப் பிள்ளையிடம் ஏதோ தெய்விக சக்தி இருக்கிறது! அதை வெளிப்படுத்திப் பிரகாசிக்கச் செய்ய வேண்டியது என் பொறுப்பு!'' என்று எண்ணமிடுவாள். தம்பி தூங்கும்போது அவனுடைய உள்ளங்கைகளை அடிக்கடி எடுத்துப் பார்ப்பாள். அந்தக் கைகளில் உள்ள ரேகைகள் சங்கு சக்கர வடிவமாக அவளுக்குத் தோன்றும். ''ஆகா! புவி ஆளப் பிறந்தவன் இவன்! உலகத்தை ஒரு குடை நிழலில் புரந்திடப் பிறந்தவன் இவன்!'' என்று சிந்தனை செய்வாள். ஆனால், சோழ சிங்காதனத்தில் இவன் ஏறுவான் என்று எண்ணுவதற்கே இடமிருக்கவில்லை. இவனுக்கு மூத்தவர்கள் — பட்டத்துக்கு உரியவர்கள் — இரண்டு பேர் இருந்தார்கள். பின் இவனுக்கு எங்கிருந்து இராஜ்யம் வரப் போகிறது! எந்தச் சிம்மாசனத்தில் இவன் ஏறப்போகிறான்? — கடவுள் சித்தம் எப்படியோ, யார் கண்டது? உலகம் மிக விசாலமானது. எத்தனையோ தேசங்கள், எத்தனையோ ராஜ்யங்கள் இந்நில உலகில் இருக்கின்றன. புஜபல பராக்கிரமத்தினால் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாடு சென்று சிங்காதனம் ஏறி ராஜ்யம் ஆண்டவர்களைப் பற்றிக் கதைகளிலும் காவியங்களிலும் நாம் கேட்டதில்லையா? கங்கை நதி பாயும் வங்க நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட இளவரசன் படகிலேறி இலங்கைக்குச் சென்று அரசு புரியவில்லையா? ஆயிரம் வருஷமாக இந்தச் சிங்கள ராஜ வம்சம் நிலைத்து நிற்கவில்லையா?

இவ்விதமாகக் குந்தவைப் பிராட்டி ஓயாது சிந்தித்து வந்தாள். கடைசியாக, இலங்கைக்கு அனுப்பும் சைன்யத்துக்கு யார் தளபதியாகப் போவது என்பது பற்றி விவாதம் எழுந்தபோது அதற்கு



உரியவன் அருள்மொழிதான் என்ற முடிவுக்கு வந்தாள்.

''தம்பி! அருள்மொழி! உன்னை ஒரு கணம் பிரிந்திருப்பதென்றாலும் எனக்கு எத்தனையோ கஷ்டமாகத்தானிருக்கிறது. ஆயினும், நானே உன்னைப் போகச் சொல்ல வேண்டிய சமயம் வந்துவிட்டது. இலங்கைப் படையின் சேநாதிபதியாக நீதான் போக வேண்டும்!'' என்றாள்.

இளவரசர் குதூகலத்துடன் இதற்குச் சம்மதித்தார். அரண்மனை வாழ்விலிருந்தும் அந்தப்புர மாதரசிகளின் அரவணைப்பிலிருந்தும் எப்போது தப்புவோம் என்று அருள்மொழிவர்மரின் உள்ளம் துடிதுடித்துக் கொண்டிருந்தது. அருமைத் தமக்கையே இப்போது போகச் சொல்லி விட்டாள்! இனி என்ன கவலை? இனி என்ன தடை?

குந்தவை தேவி மனம் வைத்துவிட்டால் சோழ சாம்ராஜ்யத்தில் நடவாத காரியம் ஒன்றுமே கிடையாது. சுந்தர சோழ சக்கரவர்த்திக்குத் தம் செல்வக் குமாரியிடம் அவ்வளவு ஆசை; அவ்வளவு நம்பிக்கை.

இளங்கோ அருள்மொழி வர்மர் தென் திசைச் சோழ சைன்யத்தின் மாதண்ட நாயகர் ஆனார். இலங்கைக்கும் போனார். அங்கே படைத் தலைமை வகித்துச் சில காலம் போர் நடத்தினார். ஆனால், போர் எளிதில் முடிகிறதாயில்லை. அவர் போர் நடத்திய முறைக்கும் மற்றவர்களின் போர் முறைக்கும் வித்தியாசம் இருந்தது. தாய்நாட்டிலிருந்து அவர் வேண்டியபடியெல்லாம் தளவாடங்களும் சாமக்கிரியைகளும் சரியாக வந்து சேரவில்லை. ஆகையால் இடையில் ஒரு தடவை தாய்நாட்டுக்கு வந்திருந்தார். தந்தையிடம் சொல்லித் தம் விருப்பத்தின்படி எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டார். மறுபடியும் ஈழத்துக்குச் செல்ல ஆயத்தமானார்.

அருமைத் தம்பியைப் போர்முகத்துக்கு அனுப்புவதற்குக் குந்தவைதேவி பழையாறையின் பிரதான மாளிகையில் மங்கள நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தாள். அருள் மொழித்தேவர் புறப்பட்டபோது அரண்மனை முற்றத்தில் வெற்றி முரசுகள் முழங்கின; சங்கங்கள் ஆர்ப்பரித்தன; சிறு பறைகள் ஒலித்தன; வாழ்த்து கோஷங்கள் வானை அளாவின.

சோழ குலத்துத் தாய்மார்கள் அனைவரும் அரண்மனையில் செல்வக் குழந்தைக்கு ஆசி கூறி, நெற்றியில் மந்திரித்த திருநீற்றை இட்டு, திருஷ்டி கழித்து வழி அனுப்பினார்கள்.

அரண்மனை வாசலின் முகப்பில், அருள் மொழித் தேவர் வீதி வாசற்படியில் இறங்க வேண்டிய இடத்தில், குந்தவைதேவியின் தோழிப் பெண்கள் கைகளில் தீபமேற்றிய தங்கத் தட்டுகளை ஏந்திக் கொண்டு நின்றார்கள். தோழிப் பெண்கள் என்றால், சாமான்யப்பட்டவர்களா? தென்னாட்டிலுள்ள புகழ் பெற்ற சிற்றரசர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். பழையாறையில் செம்பியன்மாதேவிக்குப் பணிவிடை செய்வதையும் குந்தவைப் பிராட்டிக்குத் தோழியாக இருப்பதையும் பெறற்கரும் பாக்கியமாகக் கருதி வந்திருந்தவர்கள். அவர்களிலே கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் புதல்வி வானதியும் இருந்தாள். இளவரசர் சற்றுத் தூரத்தில் வருவதைப் பார்த்ததும் அந்தப் பெண்கள் எல்லாருமே மனக் கிளர்ச்சி அடைந்தார்கள். இளவரசர் அருகில் வந்ததும் கையில் ஏந்திய தட்டுகளைச் சுற்றி ஆரத்தி எடுத்தார்கள். அப்போது வானதியின் மேனி முழுவதும் திடீரென்று நடுங்கிற்று. கையிலிருந்த தட்டு தவறிக் கீழே விழுந்து 'டணார்' என்ற சத்தத்தை உண்டாக்கிற்று. ''அடடா! இது என்ன அபசகுனம்!'' என்ற எண்ணம் எல்லாருடைய மனத்திலும் உண்டாயிற்று. ஆனால் தட்டுக் கீழே விழுந்த பிறகும் திரி மட்டும் எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு அனைவரும் நிம்மதி அடைந்தார்கள். ''இது மிக நல்ல சகுனம்'' என்றே முதியவர்கள் உறுதிகூறினார்கள்.

எவ்விதக் காரணமும் இன்றிப் பீதியும் கலக்கமும் அடைந்து தட்டை நழுவவிட்ட பெண்ணைப் பார்த்துப் புன்னகை புரிந்துவிட்டு இளங்கோ அருள்மொழி வர்மர் மேலே சென்றார். அவர் அப்பால் சென்றதும் வானதியும் மயக்கமடைந்து கீழே சுருண்டு விழுந்து விட்டாள். 'ஆகா! இப்பேர்ப்பட்ட தவறு செய்து விட்டோமே?' என்ற எண்ணமே வானதியை அவ்வாறு மூர்ச்சையடைந்து விழும்படி செய்து விட்டது. குந்தவையின் கட்டளையின் பேரில் அவளை மற்றப் பெண்கள் தூக்கிச் சென்று ஓர் அறையில் மேடையில் கிடத்தினார்கள். குந்தவைப் பிராட்டி தம் சகோதரர் புறப்படுவதைப் பார்ப்பதற்குக்கூட நில்லாமல் உள்ளே சென்று வானதிக்கு மூர்ச்சை தெளிவிக்க முயன்றாள். வாசலில் நின்றபடியே வானதி சுருண்டு விழுந்ததைப் பார்த்துவிட்ட

அருள்மொழித் தேவர் தாம் குதிரை மீது ஏறுவதற்கு முன்னால், "விழுந்த பெண்ணுக்கு எப்படியிருக்கிறது? மயக்கம் தெளிந்ததா?" என்று விசாரித்து வர ஆள் அனுப்பினார். விசாரிக்க வந்தவனிடம் குந்தவை தேவி, "இளவரசரை இங்கே சிறிது வந்து பார்த்துவிட்டுப் போகச் சொல்லு!" என்று திருப்பிச் சொல்லி அனுப்பினாள். தமக்கையின் சொல்லை என்றும் தட்டியறியாத இளவரசர் அவ்விதமே மீண்டும் அரண்மனைக்குள் வந்தார். வானதியைத் தம் தமக்கை மார்பின் மீது சாத்திக் கொண்டு மூர்ச்சை தெளிவிக்க முயன்று கொண்டிருந்த காட்சி அவருடைய மனத்தை உருக்கியது.

"அக்கா! இந்தப் பெண் யார்? இவள் பெயர் என்ன?" என்று இளங்கோ கேட்டார்.

"கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் மகள்;- இவள் பெயர் வானதி. கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவள்!" என்றாள் குந்தவை.

"ஆகா! இப்போது இவள் மூர்ச்சையாகி விழுந்ததின் காரணம் தெரிந்தது. இந்தப் பெண்ணின் தந்தைதானே இலங்கை சென்று மீண்டும் வராமல் போர்க்களத்தில் மாண்டார்? அதை நினைத்துக் கொண்டாள் போலிருக்கிறது!" என்றார் இளவரசர்.

"இருக்கலாம். ஆனால் இவளைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்! நான் பார்த்துக் கொள்கிறேன்! இலங்கை சென்று விரைவில் வெற்றி வீரனாகத் திரும்பி வா! அடிக்கடி எனக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிரு!" என்றாள் இளையபிராட்டி.

"ஆகட்டும்; இங்கே ஏதாவது விசேஷம் நிகழ்ந்தாலும் எனக்குச் செய்தி அனுப்புங்கள்!" என்றார் இளங்கோ.

இச்சமயத்தில் இளவரசரின் இனிய குரலின் மகிமையினால்தானோ என்னவோ, வானதிக்கு மூர்ச்சை தெளிந்து நினைவு வரத் தொடங்கியது! அவளுடைய கண்கள் முதலில் இலேசாகத் திறந்தன. எதிரில் இளவரசரைப் பார்த்ததும் கண்கள் அகன்று விரிந்தன. பின்னர் முகமும் மலர்ந்தது. அவளது பவளச் செவ்வாயில் தோன்றிய புன்னகையினால் கன்னங்கள் குழிந்தன.

உணர்வு வந்ததும் நாணமும் கூட வந்தது. சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். பின்னால் திரும்பிப் பார்த்தாள். தன்னை இளைய பிராட்டி தாங்கிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டு வெட்கினாள். நடந்ததெல்லாம் ஒருகணத்தில் நினைவு வந்தது.

"அக்கா! இந்த மாதிரி செய்துவிட்டேனே?" என்று கண்களில் நீர் மல்கக் கூறினாள்.

இதற்குக் குந்தவை மறுமொழி சொல்வதற்குள், இளவரசர், "அதற்காக நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம், வானதி! தவறுவது யாருக்கும் நேரிடுகிறதுதான். மேலும், உனக்கு அவ்விதம் நேருவதற்கு முக்கிய காரணமும் இருக்கிறது. அதைத்தான் இளைய பிராட்டியுடன் சொல்லிக் கொண்டிருந்தேன்!" என்றார்.

வானதிக்குத் தான் காண்பது உண்மையா, கேட்பது மெய்யா என்ற சந்தேகமே வந்து விட்டது. பெண்களைச் சாதாரணமாக ஏறிட்டுப் பார்க்காமலே போகும் வழக்கமுடைய இளவரசரா என்னுடன் பேசுகிறார்? எனக்கு ஆறுதல் மொழி கூறித் தேற்றுகிறார்? என் பாக்கியத்தை என்னவென்று சொல்வது? — ஆகா! உடம்பு புல்லரிக்கிறதே! மறுபடியும் மயக்கம் வந்துவிடும் போலிருக்கிறதே!....



இளவரசர், "அக்கா! சேனைகள் காத்திருக்கின்றன. நான் போய் வருகிறேன். நீங்கள் எனக்குச் செய்தி அனுப்பும்போது இந்தப் பெண்ணுக்கு உடம்பு எப்படியிருக்கிறது என்றும் சொல்லி அனுப்புங்கள். தாய் தகப்பனில்லாத இப்பெண்ணை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லி விட்டுக் கிளம்பிச் சென்றார்.

இவற்றையெல்லாம் குந்தவை தேவியின் மற்றத் தோழிப் பெண்கள் மேல் மாடங்களிலிருந்து பலகணி

களின் வழியாகப் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டு மிருந்தார்கள். அவர்களுடைய உள்ளங்களில் பொறுமைத் தீ கொழுந்துவிட ஆரம்பித்தது.

அன்று முதல் குந்தவைப் பிராட்டி வானதியிடம் தனி அன்பு காட்டத் தொடங்கினாள். இணைபிரியாமல் தன்னுடனேயே வைத்துக் கொண்டிருந்தாள். தான் கற்றிருந்த கல்வியையும் கலைகளையும் அவளுக்கும் கற்பித்தாள். எங்கே போனாலும் அவளைத் தவறாமல் கூட அழைத்துச் சென்றாள். அரண்மனை நந்தவனத்துக்கு வானதியை அடிக்கடி அழைத்துச் சென்று குந்தவை தேவி அவளிடம் அந்தரங்கம் பேசினாள். தன் இளைய சகோதரனுடைய வருங்கால மேன்மையைக் குறித்துத் தான் கண்டு வந்த கனவுகளையெல்லாம் அவளிடமும் சொன்னாள். அதையெல்லாம் வானதியும் சிரத்தையுடன் கேட்டாள்.

மேலே கூறிய நிகழ்ச்சிக்குப் பிறகு, வானதி இன்னும் நாலைந்து தடவை உணர்வு இழந்து மூர்ச்சையடைந்தாள். அப்போதெல்லாம் குந்தவைப் பிராட்டி அவளுக்குத் தக்க சிகிச்சை செய்து திரும்ப உணர்வு வருவித்தாள்.

மூர்ச்சை தெளியும்போது வானதி விம்மி விம்மி அழுது கொண்டே எழுந்திருப்பாள். "என்னடி, அசடே! எதற்காக இப்படி அழுகிறாய்?" என்று குந்தவை கேட்பாள்.

"தெரியவில்லையே, அக்கா! மன்னியுங்கள்!" என்பாள் வானதி.

குந்தவை அவளைக் கட்டிக் கொண்டு உச்சி முகந்து ஆறுதல் கூறுவாள்.

இதெல்லாம் மற்றப் பெண்களுக்கு மேலும் மேலும் பொறுமையை வளர்த்துக் கொண்டிருந்தன.

எனவே, குந்தவையும் வானதியும் ரதம் ஏறிக் குடந்தை சோதிடரின் வீட்டுக்குப் போன பிறகு அப்பெண்கள் மேற் கூறியவாறெல்லாம் பேசிக் கொண்டது இயல்பேயல்லவா?

பதினேழாம் அத்தியாயம்

குதிரை பாய்ந்தது!

ஒப்புவமையில்லாத தன் சகோதரன் அருள்மொழி வர்மனுக்குத் தகுந்த மணமகள் வானதிதான் என்று குந்தவை தீர்மானித்திருந்தாள். ஆனால் வானதியிடம் ஒரே ஒரு குறை இருந்தது. அது அவளுடைய பயந்த சுபாவம்தான். வீராதி வீரனை மணக்கப் போகிறவள், உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் போகும் புதல்வனைப் பெறப் போகிறவள், இப்படிப் பயங்கொள்ளியாயிருக்கலாமா? அவளுடைய பயந்த சுபாவத்தை மாற்றி அவளைத் திறமுள்ள வீர மங்கையாக்க வேண்டும் என்று குந்தவை விரும்பினாள். அதற்காகவே இந்தப் பொம்மை முதலை விளையாட்டை ஏற்படுத்தியிருந்தாள். ஆனால் அந்தச் சோதனையில் கொடும்பாளூர்க் குமாரி வெற்றியுடன் தேறி விட்டாள்.

குடந்தை ஜோதிடர் வீட்டிலிருந்து குந்தவை தேவியும் வானதியும் திரும்பி வந்ததும் அன்னப் படகில் ஏறிக் கொண்டார்கள். படகு சிறிது தூரம் சென்றது. ஆற்றங்கரையில் இருபுறமும் மரமடர்ந்த ஓரிடத்தில் படகை நிறுத்திவிட்டு இறங்கிக் குந்தவையும் அவளுடைய தோழிகளும் நீரில் இறங்கி விளையாடுவது வழக்கம். அந்த இடத்துக்கே இன்றும் போய் அவர்கள் இறங்கினார்கள்.

எல்லாரும் இறங்கியானதும், அப்பெண்களில் ஒருத்தி, "ஐயோ! முதலை!" என்று கூவினாள். அவர்கள் எந்தப் பெரிய மரத்தின் அடியில் இறங்கினார்களோ, அந்த மரத்துக்கு மறு பக்கத்தை அந்தப் பெண் சுட்டிக்காட்டிக் கொண்டே "முதலை! முதலை!" என்று அலறினாள். உடனே எல்லாப் பெண்களும் சேர்ந்து, "ஐயோ! முதலை! பயமாயிருக்கிறதே!" என்றெல்லாம் கூச்சலிட்டுக் கொண்டு ஓடினார்கள்.

ஆனால் பயந்த சுபாவமுள்ள வானதி மட்டும் அச்சமயம் சிறிதும் பயப்படவில்லை. திறந்த வாயுள்ள பயங்கர முதலையைத் திடீரென்று சமீபத்தில் கண்டும் அவள் பீதி அடைந்துவிட

வில்லை. மற்றவர்கள் எல்லாரும் குந்தவை தேவி கூறியிருந்தபடி மிகவும் பயந்தது போல் பாசாங்கு செய்தும் வானதி பயப்படவில்லை. "அக்கா! முதலைக்குத் தண்ணீரில் இருக்கும் போதுதான் பலமெல்லாம்! கரையில் கிடக்கும்போது அதனால் ஒன்றும் செய்ய முடியாது. இவர்களைப் பயப்படாதிருக்கச் சொல்லுங்கள்!" என்றாள் கொடும்பாளூர்க் குமரி.



"அடி, பொல்லாத கள்ளி! இது நிஜ முதலையல்ல; பொம்மை முதலை என்பது உனக்கு முன்னாலேயே தெரியும் போலிருக்கிறது! யாரோ உனக்குச் சொல்லியிருக்க வேண்டும்!" என்று மற்றப் பெண்கள் கூறினார்கள்.

"நிஜ முதலையா யிருந்தால் கூட எனக்குப் பயம் கிடையாது. பல்லியைக் கண்டால்தான் எனக்குப் பயம்!" என்றாள் வானதி.

இந்தச் சமயத்திலேதான் அந்தப் பெண்களைப் பயங்கரமான முதலை வாயிலிருந்து காப்பாற்றுவதற்கு வந்தியத் தேவன் வந்து சேர்ந்தான். குதிரை மேலிருந்து ஒரே குதியாய்க் குதித்து ஓடி வந்து வேலையும் வீசினான்.

முதலைக்கு முன்புறத்தில் வந்து நின்று அந்தக் கம்பீரத் தோற்றமுடைய மங்கை பேசியதைக் கேட்ட வல்லவரையனுக்கு உடம்பு புல்லரித்தது. அவள் தன்னோடு பேசவில்லையே என்று குடந்தை ஜோதிடர் வீட்டில் அவனுக்கு ஏற்பட்ட மனக்குறை தீர்ந்தது. ஆனால், அந்த முதலை,—அவன் பின்னால் கிடந்த திறந்த வாயுடைய பயங்கர முதலை,—ஏனோ, அது அவனுக்கு மனச் சங்கடத்தை அளித்துக் கொண்டிருந்தது. முதலைக்கு முன்னால் இவள் வந்து நிற்கும் காரணம் என்ன? அதைப் பற்றிச் சிரமம் வேண்டாம் என்று இவள் சொல்வதின் பொருள் என்ன? இவ்வளவு நேரமும் அம்முதலை கிடந்த இடத்திலேயே கிடப்பதன் காரணந்தான் என்ன?

அந்த யுவதி மேலும் பேசினாள் :—

"ஐயா! குடந்தையில் நீங்கள் அவசரப்பட்டுச் சோதிடர் வீட்டுக்குள்ளே வந்ததற்காக வருத்தம் தெரிவித்தீர்கள். அதற்கு மறுமொழி சொல்லாமலே நாங்கள் வந்துவிட்டோம். இதிலிருந்து சோழ நாட்டுப் பெண்களே மரியாதை அறியாதவர்கள் என்ற கருத்து உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். அப்படி நீங்கள் எண்ணிக் கொள்ள வேண்டாம். என்னுடன் வந்த பெண்ணுக்குத் திடீரென்று மயக்கம் வந்துவிட்டபடியால் என் மனம் சிறிது கலங்கி யிருந்தது. ஆகையினால்தான் தங்களுக்கு மறுமொழி சொல்லவில்லை!...."

அடாடா! இது என்ன இனிமையான குரல்! இவள் பேசும் மொழிகளைக் கேட்டு என் நெஞ்சு ஏன் இப்படிப் பொங்குகிறது? தொண்டை ஏன் விக்கிக் கொள்கிறது? குழலும், வீணையும், மத்தளமும் போர் முரசுங் கூட இப்படி என்னைக் களி வெறி கொள்ளச் செய்ததில்லையே? இப்படி என்னைக் குலுக்கிப் போட்டதில்லையே? இந்த மங்கையின் பேச்சில் குறுக்கிட்டு ஏதேனும் சொல்ல வேண்டும் என்று பார்த்தால், ஏன் என்னால் முடியவில்லை? ஏன் நாக்கு மேலண்ணத்தில் இப்படி ஒட்டிக் கொள்கிறது? ஏன் இப்படிக் காற்றோட்டம் அடியோடு நின்று போயிருக்கிறது? ஏன் இந்த அரசிலாற்றின் வெள்ளம் ஓடாமல் நின்றிருக்கிறது? அப்புறம் இந்த முதலை!....இது ஏன் இப்படிச் சும்மா கிடக்கிறது?

வந்தியத் தேவனுடைய உள்ளம் இவ்வாறு தத்தளிக்கையில், அந்த மங்கையின் குரல் மேலும் கனவில் கேட்பதுபோலக் கேட்டது:— "இப்போது கூட அபலைப் பெண்களாகிய எங்களைக் காப்பாற்றுவதாக எண்ணிக் கொண்டுதான் இந்தக் காரியம் செய்தீர்கள்! முதலையின்மேல் வேலை எறிந்தீர்கள். இவ்வளவு வேகமாகவும் குறி தவறாமலும் வேல் எறியக்கூடிய வீரர்களைக் காண்பது அரிது!...."

மரத்தடியில் ஒதுங்கி நின்று கேட்டுக் கொண்டிருந்த பெண்கள் இப்போது மறுபடியும் 'கலீர்' என்று சிரித்தார்கள். அச் சிரிப்பினால் வந்தியத் தேவனுடைய மோகக் கனவு கலைந்தது. அந்த மங்கையின் பேச்சாகிய மாய மந்திரத் தளை படீர் என்று அறுபட்டது. முதலையை இன்னொரு தடவை உற்றுப் பார்த்தான். எதிரேயிருந்த பெண்ணைச் சற்றும் பொருட்படுத்தாமல் விலகிச் சென்று முதலையின் சமீபம் அடைந்தான். அதன் முதுகில் பாய்ந்திருந்த தன் வேலை



"என்ன? ஊருக்குக் கிளம்பிட்டேள்?"

"சாப்பாட்டைக் குறைக்கணும். கொஞ்ச நாளைக்கு அரைப் பட்டினி இருக்கணும்னு டாக்டர் சொல்லிட்டார்!"

"அதுக்காக ஊருக்கு ஏன் கிளம்பணும்?"

"என் உயிருக்குயிரான சிநேகிதன் இருக்கான். ஒருவேளை சோறுகூடப் போடமாட்டான். அங்கு போய்ப் பத்து நாள் தங்கிட்டு வரலாம்னு போறேன்!"

அசைத்து எடுத்தான்! வேல் குத்தியிருந்த துவாரத்தின் வழியாக இரத்தம் பீறிட்டுக் கொண்டு வரவில்லை! பின், என்ன வந்தது? கொஞ்சம் வாழைநாரும் பஞ்சும் வெளிவந்தன!

மறுபடியும் அந்தத் துஷ்டப்பெண்கள் சிரித்தார்கள். இம்முறை கெக்கலி கொட்டிப் பலமாகச் சிரித்தார்கள்.

வல்லவரையனுடைய உள்ளமும் உடலும் குன்றிப் போயின. இம்மாதிரி அவமானத்தை இதற்குமுன் அவன் எக் காலத்திலும் அடைந்ததில்லை. இத்தனை பெண்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட பேரவமானமா?— இவர்கள் பெண்களா? இல்லை! இல்லை! இவர்கள் அரக்கிகள்!— இவர்கள் பக்கத்திலேயே நிற்கக் கூடாது! இவர்களுடைய முகத்தை ஏறிட்டும் பார்க்கக் கூடாது! சீச்சீ! — என் அருமை வேலாயுதமே! உனக்கு இந்தக் கதியா நேர்ந்தது? இத்தகைய அவமானமா உனக்கு நேர்ந்தது. இதை எப்படி நிவர்த்தி செய்து உனக்கு நேர்ந்த மாசைத் துடைக்கப் போகிறேன்!...

இவ்வளவு எண்ணமும் சில கண நேரத்தில் வந்தியத்தேவனுடைய மனத்தில் ஊடுருவிச் சென்றன. அங்கு நின்று சிரித்தவர்கள் மட்டும் ஆண் மக்களாயிருந்திருந்தால், அங்கேயே ஒரு போர்க்களம் ஏற்பட்டிருக்கும்! சிரிக்கத் துணிந்தவர்கள் அக்கணமே உயிரை இழந்திருப்பார்கள்! அரசலாற்றின் செந்நீர்ப் பிரவாகத்துடன் அவர்களுடைய இரத்தமும் கலந்து ஓடியிருக்கும்! ஆனால் இவர்கள் பெண்கள்! இவர்களை என்ன செய்ய முடியும்? இவர்களை விட்டுவிட்டு ஓடிப் போவது ஒன்றுதான் செய்யக்கூடிய காரியம்!

தன் உள்ளத்தை நிலைகுலையச் செய்த மங்கையின் முகத்தைக்கூட ஏறிட்டுப் பார்க்காமல் வந்தியத்தேவன் பாய்ந்து ஓடி நதிக்கரைமீது ஏறினான். அங்கே நின்றிருந்த அவனுடைய குதிரையும் அச்சமயம் ஒரு கனைப்புக் கனைத்தது. குதிரையும்கூட அப்பெண்களுடன் சேர்ந்து தன்னைப் பார்த்துச் சிரிப்பதாகவே வந்தியத்தேவனுக்குத் தோன்றியது. எனவே, தன் கோபத்தையெல்லாம் அந்தக் குதிரையின் பேரில் காட்டினான். அதன்மேல் பாய்ந்து ஏறி உட்கார்ந்து தலைக் கயிற்றினால் 'சுளீர் சுளீர்' என்று இரண்டு அடி கொடுத்தான்! அந்த ரோஸமுள்ள குதிரை நதிக்கரைச் சாலையின் வழியாகப் பிய்த்துக் கொண்டு பாய்ந்தோடியது!

* * *

சிறிது நேரம் வரையில் குந்தவைப் பிராட்டி குதிரை போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரை கிளப்பிய புழுதி அடங்கும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றாள்.

பின்னர், தோழிப் பெண்களைத் திரும்பிப் பார்த்து, "பெண்களா! உங்களுக்கு மட்டு மரியாதை இன்னும் தெரியவில்லை. நீங்கள் அப்படிச் சிரித்திருக்கக் கூடாது. நாம் தனியாயிருக்கும் போது, எப்படி வேண்டுமானாலும் நீங்கள் சிரித்துக் கும்மாளம் அடிக்கலாம். அந்நிய புருஷன் வந்திருக்கும் போது அடக்கமாயிருக்க வேண்டாமா? சோழ நாட்டுப் பெண்களைப் பற்றி அந்த வாலிபன் என்ன எண்ணிக் கொண்டு போவான்?" என்று சொன்னாள்.

(தொடரும்)



மகாபாரதம்

ராஜாஜி

“உமக்குப் பாண்டவர்கள் எப்படியோ அப்படியே நானும். எனக்கு நீர் துணையாக இருக்க ஒப்புக்கொள்ள வேண்டும்'' என்றான் துரியோதனன்.

சல்லியன், ''அப்படியே ஆகட்டும்'' என்றான்.

துரியோதனன் செய்வித்த மகத்தான உபசாரத்தினால் மதிமயங்கிச் சல்லியன் தன் நெருங்கிய பந்துக்களும் தன்னுடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரரானவர்களுமான பாண்டவர்களை விட்டு விட்டுத் துரியோதனனுக்குத் துணையாக அவன் பக்கம் சேர்ந்து யுத்தம் புரிவதாக வாக்குக் கொடுத்து விட்டான்!

அரசர்கள் செய்யும் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டால் இத்தகைய ஆபத்து நேரிடும்.

பிறகு சல்லியன் யுதிஷ்டிரனைப் பாராமலே திரும்புவது சரியல்லவென்று நினைத்து, ''துரியோதனா! நீ என்னை நம்பு. நான் உனக்கு வாக்குத் தந்து விட்டேன். ஆயினும் யுதிஷ்டிரனைப் பார்த்து விட்டுத் திரும்புகிறேன். அவனுக்கு நான் சொல்லிவிட வேண்டியது அவசியம்!'' என்றான்.

''பார்த்து விட்டுச் சீக்கிரம் திரும்பி வாரும். எனக்குக் கொடுத்த வாக்கை மறக்க வேண்டாம்!'' என்றான் துரியோதனன்.

''மங்களம்! நீ உன் நகரத்துக்குத் திரும்பிப் போ. நான் மோசம் செய்ய மாட்டேன்'' என்று சல்லியன் சொல்லி விட்டு யுதிஷ்டிரன் இருந்த உபப்பிலாவிய நகரத்துக்குப் போனான்.

உபப்பிலாவியத்தில் மத்திர தேசாதிபதியை மிகுந்த மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு வரவேற்றார்கள். நகுல சகதேவர்கள் தங்கள் மாமன் வந்ததைக் கண்டு அளவுகடந்த சந்தோஷம் அடைந்தார்கள். பாண்டவர்கள் தாங்கள் பட்ட கஷ்டங்களையெல்லாம் சொன்னார்கள். வரப் போகும் யுத்தத்தில் சல்லியனுடைய துணையைப் பெறுவதைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அப்போது சல்லியன் துரியோதனனுக்கு வாக்குத் தந்து விட்டதைப் பற்றிச் சொன்னான்.

மாமனையிழந்தே என்று அஜாக்கிரதையாக இருந்ததனால் உண்டான பயன் இது என்று யுதிஷ்டிரன் அறிந்தான். தன் வருத்தத்தை அதிகமாகக் காட்டிக் கொள்ளாமல், ''வீரரே! நீர் துரியோதனன் செய்த உபசாரத்தினால் மகிழ்ச்சியடைந்து அவனுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டியதே. நீர் யுத்தத்தில் வாசுதேவருக்கு நிகரானவர். அருச்சுனனைக் கொல்வதற்காகக் கர்ணன் உம்மைத் தன்னுடைய சாரதியாக வைத்துக் கொள்வான். அருச்சுனனுடைய மரணத்துக்கு நீர் காரணமாகப் போகிறீரா? அல்லது அருச்சுனனை அப்போது காப்பாற்றுவீரா? இதை நான் கேட்கத் தகாது. ஆயினும் வேண்டிக் கொள்கிறேன்'' என்றான் யுதிஷ்டிரன்.

''அப்பனே! நான் வஞ்சிக்கப்பட்டுத் துரியோதனனுக்கு வாக்குத்தத்தம் செய்துவிட்டேன். அவன் பக்கத்தில் நின்று உங்களுக்கு விரோதமாகவே யுத்தம் செய்வேன். ஆயினும் கர்ணன் அருச்சுனனை எதிர்க்கச் செல்லும்போது என்னைச் சாரதியாக அழைத்தால் என்னால் கர்ணனுடைய தேஜஸ் பங்கப்பட்டு அருச்சுனன் காப்பாற்றப்படுவான். அஞ்ச வேண்டாம். சூதாட்டத்தில் சிக்குவிக்கப்பட்டுத் திரௌபதியும் நீங்களும் அடைந்த துயரங்கள் முடிந்தன. இனி உங்களுக்கு மங்களம் உண்டாகும். விதியின் போக்கை யாரும் தடுக்க முடியாது. நான் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்'' என்றான்.

52. விருத்திரன்

மூன்று உலகங்களுக்கும் அதிபதியாக இருந்த இந்திரன் ஒரு காலத்தில் தேவர்களுக்குரிய மரியாதையை மறந்து மதோன்மத்தனாகிப் போனான். சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அரசன் யாருக்காகவும் எழுந்து நிற்க வேண்டியதில்லை என்று சாஸ்திரம் இருப்பதாகக் கேள்விப்பட்டு, தேவபுரோகிதரான பிருகஸ்பதி சபைக்கு வந்தபோது எழுந்து ஆசனம் அளித்தல் முதலிய உபசாரங்கள் செய்யாமல் சும்மா இருந்தான். எல்லா வித்தைகளிலும் முதல் ஸ்தானம் பெற்ற மகானும் தேவாசுரர்களுடைய பூஜைக்கு யோக்கியருமான பிருகஸ்பதி இதைக் கண்டு வருத்தப்பட்டார். இது செல்வத்தால் உண்டான தோஷம் என்று எண்ணிப் பேசாமல் சபையை விட்டுத் தம் இல்லத்

துக்குப் போய்விட்டார். தேவ குரு இல்லாமல் சபை சோபிக்கவில்லை.

தான் செய்த அபராதத்தை இந்திரன் உணர்ந்து கொண்டு இதனால் என்ன நேரிடுமோ என்று பயம் அடைந்தான். ''ஆசாரியருடைய காலில் விழுந்து சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று தீர்மானித்தான்.


பிருகஸ்பதியோ இந்திரனால் காண முடியாத மாய நிலையை அடைந்து மறைந்து போனார். இந்திரன் பெரு முயற்சி செய்தும் குருவானவர் கிடைக்காமல் போனபடியால் கவலைக்கு இரையானான்.

ஆசாரியனை இழந்த உடனே இந்திரனுடைய பலம் குறைய ஆரம்பித்தது. அசுரர்களுடைய பலம் அதிகரித்தது. அவர்கள் தேவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். தேவர்கள் பீடிக்கப் பட்டதைக் கண்டு பிரம்மா இரக்கம் கொண்டு, ''தேவர்களே! பிருகஸ்பதியை இழந்தீர்கள். இது இந்திரனுடைய மதியீனத்தால் உண்டாயிற்று. இப்போது நீங்கள் துவஷ்டாவின் குமாரனும் தபஸ்வியுமான விசுவரூபனை வணங்கி அவனை ஆசாரியனாகக் கொள்ளுங்கள். உங்கள் காரியங்கள் சரிவர நடைபெறும்!'' என்றான்.

பிரம்மாவினால் இவ்வாறு சொல்லப் பட்ட தேவர்கள் சந்தோஷமடைந்து, அவ்வாறே செய்தார்கள். துவஷ்டாவின் குமாரன் வயதில் மிகக் குறைந்தவன். ஆயினும் மகா தபஸ்வி. தேவர்கள் அவனிடம் சென்று, ''சிறியவனாக இருந்தாலும் எல்லா வேதங்களையும் அறிந்தவன். எங்களுக்கு நீ புரோகிதனாக இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். விசுவரூபன் ஒப்புக் கொண்டான்.

தபஸ்வியும் சுத்தனுமான அவனுடைய சிக்ஷையின் பயனாகத் தேவர்களும் இந்திரனும் அசுரர்களுடைய தொந்தரவுகளிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள்.

விசுவரூபன் துவஷ்டாவின் குமாரனானாலும் அவனுடைய தாயார் தைத்ய குலத்தைச் சேர்ந்தவள். அந்தக் காரணத்தினால் விசுவரூபனைப் பற்றி இந்திரன் சந்தேகம் கொண்டான். ''இவனுடைய தாய் நம்முடைய விரோதிகளின் குலத்தைச் சேர்ந்தவள். ஆகையால் இவன் அசுரர்களிடம் பட்சபாதம் கொண்டவனாகவே இருப்பான்'' என்று எண்ணினான். இந்தச் சந்தேகம் வர வர அதிகரித்தது.



விசுவரூபனை முடித்துவிட வேண்டியதாக இந்திரன் தீர்மானித்துவிட்டான். விசுவரூபனால் தனக்கு அபாயம் வரும் என்று எண்ணி இந்திரன் விசுவரூபனை ஏமாற்றி அவன் தவத்தைக் கெடுப்பதற்காக அப்ஸரஸ் ஸ்திரீகளை ஏவினான். அவர்கள் இந்திரன் உத்தரவுப்படி பலவிதச் சிருங்கார சேஷ்டைகள் செய்தும் நர்த்தனம் செய்தும் ஏமாற்றப் பார்த்தார்கள். விசுவரூபன் இதற்கெல்லாம் இணங்காமல் தன் பிரும்மச்சரியத்தில் உறுதியாக இருந்தான். அதன் மேல் இந்திரன் இந்த வழியில் வெற்றி பெற முடியாது என்று தீர்மானித்துக் கொண்டு பெரும் பாப எண்ணத்தில் இறங்கினான். வச்சிராயுதத்தைப் பிரயோகித்து விசுவரூபனைக் கொன்றே விட்டான்.

இவ்வாறு தீராத பாபத்தை அடைந்த இந்திரன் அதற்காகப் பிராயச்சித்தம் செய்து தன் பாபத்தை உலகத்துக்குப் பங்கு செய்து கொடுத்தான் என்று சொல்லப்படுகிறது. இதனாலேயே பூமியில் சில பாகம் உவர் நிலமாயிற்று என்றும், ஆடவர்களுக்கில்லாத சில கஷ்டங்கள் ஸ்திரீகளுக்கு வந்து சேர்ந்தன என்றும் ஜலத்திற்கு நுரையும் கொப்புளமும் தோஷமுமாக ஏற்பட்டன என்றும் கதை.

தன் மகன் அக்கிரமமாகக் கொல்லப்பட்டதனால் துவஷ்டாவுக்கு இந்திரன் மேல் பெருங் கோபம் உண்டாகிப் பகையைத் தீர்த்துக் கொள்வதற்காக வேள்வித் தீ வளர்த்து ஹோமம் செய்தான். அதிலிருந்து இந்திரனுக்குச் சத்துருவான விருத்திராசுரன் கிளம்பினான். அக்கினியிலிருந்து உற்பவமான அசுரனைப் பார்த்துத் துவஷ்டா ''ஓ! இந்திர சத்துருவே! விருத்தி அடைவாயாக! இந்திரனைக் கொல்வாயாக!'' என்று சொல்லித் தேவராஜனை எதிர்க்க ஏவினான்.

விருத்திரனுக்கும் இந்திரனுக்கும் பலத்த யுத்தம் நடந்தது; விருத்திரனுடைய சக்தியே மேலோங்கிற்று. இந்திரன் தோல்வி அடைவான் என்று பயந்து ரிஷிகளும் புலவர்களும் மகாவிஷ்ணுவிடம் போய்த் தஞ்சம் அடைந்தார்கள். அப்போது திருமால் அவர்களுக்கு அபயம் சொன்னார். ''பயப்படாதீர்கள். இந்திரனுடைய வச்சிராயுதத்தில் நான் பிரவேசிப்பேன். தேவராஜன் முடிவில் வெற்றி அடைவான்'' என்றார்.

தேவர்களும் ரிஷிகளும் தைரியம் அடைந்து திரும்பினார்கள். பிறகு ரிஷிகள் விருத்திரனிடம் சென்று, ''இந்திரனிடம் சிநேகமாக இருக்க வேண்டும். இருவரும் சமமாக இருக்கிறீர்கள். இந்த யுத்தம் உலகத்தை மிகவும் பீடிக்கிறது'' என்றார்கள். விருத்திரன் ரிஷிகளை வணங்கி, ''குற்றமற்றவர்களே! மன்னிக்க வேண்டும்! இந்திரனும் நானும் எவ்வாறு ஒன்றாக முடியும்? இரண்டு சம தேஜசுகளுக்குள் எவ்வாறு நட்பு ஏற்பட முடியும்?'' என்றான்.

''அப்படிச் சந்தேகப்பட வேண்டாம். நல்லோர்களுடைய சேர்க்கை உறுதியாகவே இருக்கும்'' என்று ரிஷிகள் சொன்னார்கள்.

விருத்திரன் இணங்கினான். ''சரி யுத்தத்தை நிறுத்துகிறேன். ஆனால் எனக்கு இந்திரனிடம் நம்பிக்கையில்லை. நீங்கள் எனக்கு வரம் தரவேண்டும். உலர்ந்த ஆயுதத்தினாலாவது, ஈரமான ஆயுதத்தினாலாவது, கல்லினாலாவது, மரத்தினாலாவது, உலோகத்தினாலாவது, அஸ்திரத்தினாலாவது நான் இந்திரனால் கொல்ல முடியாதவனாக இருக்கவேண்டும். பகலிலாவது இரவிலாவது எனக்கு இந்திரனால் மரணம் உண்டாகாமல் ஆசீர்வதிக்க வேண்டும்.''

''அப்படியே!'' என்றார்கள் தேவரிஷிகள்.

விருத்திரன் பயந்தது சரியே. இந்திரன் விருத்திரனிடம் உண்மையாக நட்புக் கொள்ளவில்லை. அவனைக் கொல்லச் சமயம் பார்த்த வண்ணமாகவே இருந்தான். ஒரு நாள் சாயங்காலம் கடற்கரையில் விருத்திரனைச் சந்தித்தான். இது அசுரனை வஞ்சித்துக் கொல்லும் சமயம். இது பகலும் இல்லை, இரவும் இல்லை என்று யுத்தம் தொடங்கினான். பெரும்போர் நடந்தது.

விருத்திரன், ''ஹே! அதமனே! வீண் போகாத வஜ்ஜிராயுதத்தை ஏன் பிரயோகிக்காமல் இருக்கிறாய்? ஹரியின் தேஜஸினால் பிரவேசிக்கப்பட்டிருக்கும் உன்னுடைய ஆயுதத்தை என்மேல் செலுத்து; நான் நற்கதி அடைவேன்'' என்று திருமாலை ஸ்தோத்திரம் செய்தான்.

இந்திரன் விருத்திரனுடைய வலது கையை வெட்டினான். விருத்திரன் அதற்குச் சலியாமல் தன் இடது கையால் இரும்பு உலக்கையை வீசி இந்திரனைத் தாக்கினான். இடது கையையும் இந்திரன் வெட்டினான். இரண்டு கைகளையும் இழந்த விருத்திரன் வாயைத் திறந்து இந்திரனை விழுங்கிவிட்டான். ''ஐயோ!'' என்றார்கள் தேவர்கள்.

ஆனால் இந்திரன் சாகவில்லை. விருத்திரனுடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து பக்கத்தில் இருந்த கடற்கரை நுரையில் வச்சிராயுதத்தைப் பிரவேசிக்கச் செய்து

அந்த நுரையை விருத்திரன் மேல் பிரயோகித்தான். அப்போது மகா விஷ்ணு அந்த நுரையில் புகுந்தார். விருத்திரன் மாண்டான்.

இடைவிடாத யுத்தத்தால் மிகவும் பீடிக்கப்பட்ட உலகம் உடனே சந்தோஷம் அடைந்தது. ஆனால் இந்திரன் பிரம்மஹத்தி தோஷத்தினாலும் சத்தியம் தவறியதாலும் அவமானம் அடைந்து ஒளியிழந்து வெட்கத்தில் மூழ்கி ஒருவனுடைய கண்ணுக்கும் காணப்படாமல் மறைந்து கொண்டான்!

அரசன் இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அரசன் என்றால் அரசு செலுத்தும் தனி மனிதனோ, குலமோ, சபையோ ஏதேனுமொன்று. இந்த நியதிப்படி இந்திரன் மறைந்ததும் தேவர்களும் ரிஷிகளும் மிக்க வருத்தப்பட்டார்கள்.

பிறகு பராக்கிரமமும் புகழும் சீலமும் பொருந்திய நஹுஷ ராஜனிடம் ரிஷிகளும் தேவர்களும் சென்று, ''தேவ ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்று நீ எங்களுக்கு இந்திரனாக இருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

''நான் அசக்தன். உங்களை என்னால் எவ்வாறு காப்பாற்ற முடியும்? இந்திரன் எங்கே? நான் எங்கே?'' என்று நஹுஷன் அவனுக்கு இயற்கையான அடக்கத்துடன் மறுத்தான்.

''எங்களுடைய தவத்தின் பயனையெல்லாம் நீ அடைவாய். தயங்காமல் அபிஷேகம் செய்துகொள். உன் கண்களுக்குப் பட்ட எவனுடைய தேஜசும் உன்னை அடையும். இதனால் நீ பலவானாவாய். சுவர்க்கத்தில் தேவராஜனாக இருக்கக் கடவாய்!'' என்று வற்புறுத்திச் சம்மதிக்கச் செய்தார்கள்.

தேவர்கள் இந்திரனை நீக்கிவிட்டு நஹுஷனைத் தேவராஜாவாகச் செய்தார்கள். பிறகு நஹுஷன் எவ்வாறு நாசமடைந்தான் என்கிற கதையும் படிக்க வேண்டிய கதை.

53. நஹுஷன்

பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டுப் பதவியை விட்டு நீங்கின இந்திரன் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டான். தேவராஜ பதவியில் நஹுஷன் அமர்ந்தான்.

முதலில் நஹுஷன் நன்கு மதிக்கப்பட்டு வந்தான். பூலோகத்தில் அரசனாக இருந்தபோது அவன் சம்பாதித்த புகழும் புண்ணியமும் சில நாட்கள்வரையில் அவனைக் காப்பாற்றி வந்தன. பிறகு கெட்ட காலம் ஆரம்பித்தது. தேவராஜ பதவியை அடைந்துவிட்ட கர்வம் அவன் அடக்கத்தையும் சீலத்தையும் கெடுத்து விட்டது.

சுவர்க்க லோகம் சுகானுபவ உலகமானபடியால் நஹுஷன் தன் மனத்தை அந்த அனுபவங்களில் செலுத்தினான். காமசித்தனாகி விட்டான். ஒரு நாள் இந்திரனுடைய மனைவியாகிய சசிதேவியைப் பார்த்து மோகங் கொண்டான். துஷ்ட புத்தியடைந்த நஹுஷன் சபையில் கூடியவர்களைப் பார்த்துக் கேட்கலானான்:

''தேவராஜனுடைய மகிஷியான சசிதேவி என்னை ஏன் அடையவில்லை? நான் அல்லவா இப்போது இந்திரன்? சீக்கிரம் இந்திராணியை என் கிருகத்துக்கு அனுப்புவீர்களாக'' என்று உத்தரவிட்டான்.

இந்த விஷயம் இந்திராணிக்குத் தெரிந்தது. துக்கமும் கோபமும் அடைந்தாள். உடனே தேவ புரோகிதரிடம் சென்று, ''குருவே, என்னை இந்தக் கொடியவனிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!'' என்று புலம்பினாள்.

பிருகஸ்பதி அபயதானம் செய்தார். ''பயப்பட வேண்டாம்! இந்திரன் சீக்கிரம் வந்து விடுவான். நீ இங்கேயே இரு. உன் புருஷனை மறுபடியும் அடைவாய்!'' என்றார்.


சசிதேவி தன்னுடைய விருப்பத்துக்கு இணங்கவில்லை என்பதும் பிரகஸ்பதியிடம் சரண் புகுந்து அவருடைய கிருகத்தில் இருக்கிறாள் என்பதும் அறிந்து நஹுஷன் கோபம் கொண்டான்.

நஹுஷனுடைய சினத்தைக் கண்டு தேவர்கள் அஞ்சினார்கள். ''தேவராஜனே! கோபித்துக் கொள்ளாதீர். நீர் கோபம் கொண்டால் உலகமே வருந்தும். சசிதேவி பிறருடைய மனைவி. அவளை நீர் விரும்பலாகாது. தருமத்தைக் காப்பாற்றுவீராக'' என்றார்கள்.

காம மயக்கம் கொண்ட நஹுஷன் தேவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை. அவர்களுடைய பேச்சைத் தடுத்து, ''முன்னர் இந்திரன் அகலிகையைத் தீண்டிய காலத்தில் உங்களுடைய தருமம் எங்கே மறைந்திருந்தது? அப்போது ஏன் நீங்கள் அவனைத் தடுக்கவில்லை? என்னை மாத்திரம் ஏன் இப்போது தடுக்கிறீர்கள்? தவத்திலிருந்த விசுவரூபனை அவன் கொன்றபோது நீங்கள் என்ன செய்தீர்கள்? விருத்திரனை வஞ்சித்துக் கொன்றவனை நீங்கள் ஏன் பொறுத்தீர்கள்? சசிதேவி என்னை வந்து அடைவதே அவளுக்கு நலம். அவளைச் சமாதானப்படுத்தி என்னிடம் ஒப்புவிப்பதே உங்களுக்கும் க்ஷேமம்'' என்று கட்டளையிட்டான். (தொடரும்)



வேங்கடவரதன் (வீவி) ஒரு சாதாரண ட்யூடர் மட்டுமல்ல, 'இந்திர சபா' என்ற பெரிய கலை அரங்கத்தின் நிகழ்ச்சி ஆலோசகனும்கூட. இலக்கியத்திலும், கலையிலும் ஆர்வம் குமிழியிடும் துடிதுடிப்புள்ள வீவி, தன் நலம் பாராட்டாமல் பிறர் நலம் பேணுவதையே தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவதை இந் நாவல் முழுதும் காண்கிறோம். ''அவன் இவ்வுலகில் தனக்கென எதையும் எதிர்பார்க்கவில்லை. இன்பத்தைக் கண்டு ஸ்தம்பித்ததில்லை, துன்பத்தைக் கண்டு தேங்கி நின்றதில்லை.'' அவனது நண்பன் சங்கரனின் இந்த மதிப்பீட்டுக்கு இம்மிகூடக் குறையாதவாறு வீவி இந்த நாவல் நெடுகிலும் நடந்து கொள்கிறான்!



வீவியின் வாழ்வில் இரண்டு பெண்கள் குறுக்கிடுகிறார்கள். அவனுடன் படித்தவள் கமலா. அவனுடன் பேசுவதையோ, அவனுடன் ஊர் சுற்றுவதையோ மற்ற மாணவர்கள் வரப்பிரசாதமாக நினைத்தபோது வீவி மட்டும் அவளை அவள் நடத்தைக்காக வெறுத்து வந்தான். சமுத்திர மணலில் அவனுடைய எதிர்பாராத சந்திப்பும் அன்று அவளை அவன் திரஸ்காரம் செய்ததும் அவனுடைய ஏன், அவளுடைய வாழ்விலும் மறக்க முடியாத ஒரு சம்பவம்.

இரண்டாவது பெண் காமினி இந்திர சபாவில் ஒரு சிறு உத்தியோகத்துக்காக வந்து வீவியின் மனத்தில் இடம் பிடித்துக் கொண்ட கலையரசி. வீவி அவளுக்குக் குருவாக, வழிகாட்டியாக இருந்து, நாடக உலகிலும், பிறகு சினிமா உலகிலும் அவள் தலைசிறந்த நடிகையாக மிளிர வழிவகுத்துக் கொடுக்கிறான்.

காமினியின் மாமா கப்புரத்தினம் வீவியிடம் வன்மம் பாராட்டிச் செய்த சில காரியங்களால் வீவி இந்திர சபாவிலிருந்து வெளியேறிக் கல்லூரியில் ட்யூட்டராக நேரிடுகிறது. இந்த மாமா அவனுடைய இடத்தில் அமர்ந்து இந்திர சபாவின் புகழுக்கு மாசு ஏற்படுத்தியதோடு அல்லாமல், பெரிய தொகையையும் கையாண்டு விடுகிறார். காமினி உதவ மறுத்தும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல் அந்த மாமாவுக்கு உதவ முன் வருகிறான் வீவி. இது மாமாவின் மனத்தையே மாற்றி விடுகிறது. சேலம் கல்லூரிக்கு மாற்றலாகிப் போன வீவி எதிர்பாராதவிதமாகக் கமலாவைச் சந்திக்கிறான். அங்கு கமலாவும் தன் வாழ்க்கைக்குப் பச்சாதாபப்பட்டு வருந்துவதைக் கண்டு வீவி அவளுக்கு ஆறுதலாக விளங்குகிறான். கடைசியில், வீவியை, அவனை உள்ளும் புறமும் ஒரேயடியாகக் காதலித்து உருகி வரும் காமினி இருக்கும் இடத்துக்கே அனுப்பி விடுகிறார் ஆசிரியர்.

நாவலாசிரியர் 'மகரிஷி' தம் கதாநாயகன் வீவியை மண்ணின் மாண்புகள் அனைத்தையும் பெற்றவனாகச் சித்திரிக்க முயன்று அதில் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறார். ''உயிர்ச் சத்தற்ற, தீங்கை விளைவிக்கும் பொருள்களின் தீய தன்மைகள் மடிந்து மக்கி மறையச் செய்வதோடு அவற்றைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டும் விடும் மண்ணின் மாண்பு பெற்றவன்தான் வீவி!'' என்ற பதிப்பாசிரியரின் கூற்று ஒப்புக் கொள்ளத் தக்கதே.

இந்த நாவல் நாயகன் வீவியின் அருங்குணத்தை ஆசிரியர் நாவலின் தொடக்கத்திலேயே இரண்டு வரிகளில் அருமையாகச் சொல்லி விடுகிறார். ''பிறர் வேதனையை இவனால் பார்க்காமல் இருக்க முடியாது. துயரைக் கண்டுவிட்டுத் தூர இருந்தே கண்ணைத் துடைத்து விட்டுக் கொண்டு இவனால் போக முடியாது.'' எத்தனை உயர்ந்த பண்பு!

எழுத்தில் புதுமை

மண்ணின் மாண்பு

காமினி அவனுடைய ஆதரவில் வந்து சேரும் பாக்கியத்தைப் பெற்றவள். ''உங்களை என்றால் குரு என்று எண்ண முடியாது. குருவிடம் மரியாதையும் மதிப்பும்தான் செய்ய முடியும். பக்தி செய்ய முடியாதே!'' என்று காமினி சொல்வதின் உண்மை உய்த்து உணர வேண்டியது. காமினியை வீவி எப்படி யெல்லாம் உருவாக்குகிறான்? ''மண்ணைப் பிசைந்து உருட்டிச் சக்கரத்தில் வைத்துச் சுற்றினால் மட்டும் அது பானையாக வந்து விடுவதில்லை! சுற்றுகிறவன் கைவாகில் தான் அது உருப்பெறுகிறது. மெருகு அடைகிறது!'' மெருகேறிச் சுடர் விடும் எத்தனை பானைகளுக்கு இந்த அறிவு இருக்கிறது? காமினி தனக்கு உருவம் தந்த கரத்தைத் தெய்வமாகவே போற்றினாள்.

காமினியின் படைப்பு மெல்லியது, துல்லியமானது. ''அந்தப் பரிசுத்தமான மலரின் இதழ்களின் மேல் புற உலகின் தூசிகள் ஒட்ட முடியாதபடி அது தன்னைச் சுற்றி ஓர் அக்னிக் கோட்டையைக் கட்டிக் கொண்டிருக்கிறது.'' சினிமா நடிகையானாலும் ஒழுக்கத்தில் உயர்ந்தவள் காமினி என்பதை எத்தனை அழகாக ஆசிரியர் எடுத்துச் சொல்லி விட்டார்? வீவி பற்றி அவள் என்ன நினைக்கிறாள்? ''வானுற வளர்ந்து விட்டாலும் கூட அது (மரம்) தன்னை வளர்த்து ஆளாக்கிய மண்ணைப் போற்றுகிறது. மண் வளர்வதே இல்லை, வளம் தந்து வளர்க்கிறது அது.''

கிழக்கு வானத்தில் சிறிது நேரமும், மேற்கு வானத்தில் சிறிது நேரமும் தோன்றி மறையும் சுக்கிரன்போல நாவலின் தொடக்கத்திலும், இறுதியிலும் தோன்றி வாசகர்களின் மனத்தில் இடம் பிடித்துக்கொள்ளுகிறாள் கமலா. ''அவள் நல்ல அழகி. அந்த உயரம், அந்தக் குழலின் நெளி. நடையைப் போலவே நிமிர்ந்த வளர்ச்சி, பருவத் துடிப்பை வெளிக் கொணரத் துடிக்கும் சிவந்த முகம்'' என்றெல்லாம் முதலில் கமலாவை அறிமுகப்படுத்திய ஆசிரியர், ''வாலிப்பான அதே உடற்கட்டு! முகை அவிழ்ந்து, மலர் விரிந்து சகல ஜீவனிலும் வசீகர உணர்வை உண்டாக்கி, இளங் கிளையில் கம்பீர அழகுடன் ஆடி, பலர் பார்த்து ரசிக்க, சிலர் தொட்டு ரசிக்க, பலர் தீண்டி இன்புற இப்படி எத்தனை எத்தனையோ ரசிக வெறிக்கு ஆளாகி ஒரு நாள் செடியிலேயே கருகி, மனச் சாட்சியின் அக்கினிச் சூட்டிலே காய்ந்த மலர்'' என்று எல்லாப் புனிதங்களையும் இழந்துவிட்ட புழுதி படிந்த கமலாவைக் கதையின் இறுதிக் கட்டத்தில் கொண்டு நிறுத்துகிறார்.

கமலாவிடம் வீவி காட்டும் கனிவும், அவன் தாயிடம் அவன் கூறும் பரிந்துரைகளும் எங்கே, காமினியை மறந்து, கமலாவுக்குத் தன்னிடம் புகலிடம் கொடுத்து விடுவானோ என்று வாசகர்களைச் சிறிது நேரம் ஆசிரியர் மூச்சு முட்ட வைக்கிறார். நல்ல வேளை! நாவலாசிரியர் வாசகர்கள் ஆசையிலும் காமினியின் ஆசையிலும் மண்ணைப் போடவில்லை!

'மகரிஷி'யின் இந்த நாவலைப் படிக்கும் போது, தமிழ் இலக்கியத்தின் எதிர்காலம் பற்றி நம்முன்னே இருந்த சந்தேகங்கள் தவிடு பொடியாவதை உணர்கிறோம். சின்ன வயதில் பெரிய தத்துவங்களை அநாயாசமாகக் கையாளும் 'மகரிஷி'யின் ஆற்றலைக் கண்டு வியக்கிறோம். புதுமை எழுத்துக்கு ஆதர்சமாக, அச்சாணியாக விளங்கும் அவருடைய நடையில் ஒரு மோகன சக்தி பாய்ந்து வாசகர்களை மயக்குவதை நம்மால் அறிய முடிகிறது.

1932ல் பிறந்த தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு டி. கே. பாலசுப்பிரமணியன், 'மகரிஷி' என்ற தம் புனைபெயருக்குச் சிறிது கூட ஏற்காத உருவம், பருவம் இரண்டும் உடையவரேயானாலும் தமது நாவல்களில் ஆத்மீகப் பிரசாரம் செய்வதன் மூலம் அந்தப் பெயரை முழுக்க முழுக்கத் தமதாக்கிக்கொண்டுவிட்டார் என்று சொல்லலாம். ''எனது கதைகளில் நான் அதிகம் ஆத்மீகப் பிரசாரம் செய்வதாகச் சிலர் சொல்வது குற்றச்சாட்டு அல்ல. அதை நான் பொழுது போக்குக்காக என்றிராமல் ஒரு தனி அக்கறையுடனேயே செய்கிறேன்'' என்கிறார் 'மகரிஷி'.

இளம் பிராயத்தில் ஆஸ்திகச் சூழ்நிலையில் வளர்ந்து அதனால் ஏற்பட்ட பாதிப்பை அவருடைய வாய்மொழியிலேயே கேளுங்கள்:

''அமைதி தவழும் ஆலயப் பிராகாரம். மௌனித்து நிற்கும் மூர்த்தங்கள். பாதம் நோக்கி விழும் அர்ச்சனை மலர்கள். இருள் சூழ்ந்த சந்நிதியில் இலேசாக நெளிந்து எரியும் மணி விளக்கு. உதிர்ந்து கிடக்கும் ஆலய நந்தவனத்துப் பூக்கள். அதைப் பூக்குடலையில் பொறுக்கிப் போடும் முகம் தெரியாத உருவம் எல்லாமே எனது சிறு பிராயத்தில் எனது உள்ளத்தில் ஆழ்ந்த அலைப்பை உண்டாக்கி விட்டன.''

தமது தார்மீக எண்ணங்களுக்குப் பிறந்த மண்ணின் சூழ்நிலை வலுவூட்டின என்றால், வளர்ச்சி பெற்று வரும் இந்த நாட்களில் காமகோடி பெரியவர்கள், அண்ணல் ராஜாஜி இருவரின் எழுத்துக்களாலும் தான் ஓர் உத்வேகம் பெற்றிருப்பதாகக் கூறுகிறார் 'மகரிஷி'.

''மற்ற எழுத்தாளர்களிடமிருந்து மாறுபட்ட ஒரு புது எழுத்தாளராக நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் நாவல்கள் எல்லாம் முதலில் பத்திரிகைகளில் தொடர்கதையாக வெளிவராமல் ஒரேயடியாக நூலாக வெளிவருவதைத் தான் குறிப்பிடுகிறேன்'' என்றேன்.

''சில குறுநாவல்களைத் தவிர எனது பெரிய நாவல்கள் எதுவுமே பத்திரிகைகளில் தொடராக வெளிவந்தவை இல்லை. முழு சிருஷ்டியையும், எந்த வித சஸ்திர சிகிச்சையும் இல்லாமல் ஒரு தாயின் மன நிறைவோடு முழுமையாகக் காணுகின்ற பேரின்பத்தைத் தான் விரும்புகிறேன். இதிலிருந்து என்னை மாற்றும் முயற்சியில் எந்தப் பத்திரிகையும் இறங்கவில்லை. நான் ஈர்க்கவுமில்லை; ஈர்க்கப் படவுமில்லை'' என்கிறார் 'மகரிஷி'.

''உங்களால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது உண்டா?''

''டைரக்டர் திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் சகோதரர் திரு கே.எஸ். சபரிநாதனும், அன்பர் திரு கோமல் சுவாமிநாதனும் என் வீடு தேடி வந்து என் முதல் நாவலான 'பனிமலை'யை சினிமாவுக்கென்று வாங்கிச் சென்ற சம்பவத்தை நன்றியுடன் அடிக்கடி நினைவுகூர்கிறேன். வெளியுலகத்தின் கவனத்தைக் கவராமல் இருந்து வந்தேன் நான். 'பனிமலை',

யார் சொன்னது லக்மே டால்கம் விலையுயர்ந்-தது என்று?

தூவித் தூவி மகிழுங்கள் மேனிமுழுதும்!



தூவித் தூவி
மகிழுங்கள் ஆசை
தீர. மகரந்த மாரி
பொழியட்டும்
மெய்குளிர.
நாளெல்லாம் நேசக்
கதை சொல்லும் நறு
மணம். விரும்பிய
மாத்திரத்தில் கைக்
கெட்டும் விலைநயம்.
லக்மே டால்கம்· உரிமை
கொள்வீர்கள் உடலார.
உபயோகித்து ம்கிழ்ச்சிச்
சுழலிலே திளைக்க 'லக்மே
கரமான' நறுமணவகை
கள் நான்கு: லேவெண்
டர், நிர்வாண், வெட்டி
வேர், சந்தனம்.

லக்மே டால்கம்


டாக்டர்கள்
விரும்புவது
எவரெடி
டார்ச் 4591
அது சிறியது, எடுத்துச் செல்ல எளிதானது, எனினும் சக்திவாய்ந்த, ஒளி மிகுந்த வெளிச்சத்தை தருகிறது. ஒவ்வொரு நபருக்கும் கருத்ததும் ஒவ்வொரு குறிப்பிட்ட தேவைக்கும் ஏற்றதுமான டார்ச்சுகள் தயாரிக்கப்பட்டுள்ளன!
தேர்ந்தெடுக்க எண்ணற்ற சைஸ்கள், மாடல்கள், விலைகள் உண்டு.
தயாரிப்பவர்கள்:
UNION CARBIDE
யூனியன் கார்பைட்
இந்தியாவின் அதிக அனுபவமுள்ள டார்ச் தயாரிப்பாளர்கள்
பிரகாசமான ஒளி, நம்பகமுள்ள சக்தி அது 'எவரெடி' யாகத்தான் இருக்கும்!

'என்னதான் முடிவு' என்ற பெயரில் சினிமாவாக வந்த பிறகுதான் மக்கள் 'மகரிஷி'யைப் புரிந்து கொண்டார்கள். அதற்கு முன் இப்படி ஓர் எழுத்தாளர் தமிழ் நாட்டில் இருக்கிறார் என்பதே ரொம்பப் பேருக்குத் தெரியாதே!'' என்கிறார் மகரிஷி!

தற்போது சேலத்தில் சேலம் ஈரோடு மின்சார விநியோகக் கம்பெனியில் ஸ்டோர் உதவியாளராகப் பணியாற்றும் 'மகரிஷி' இதுவரை 'பனிமலை', 'மண்ணின் மாண்பு', 'உயிர்த் துடிப்பு', :மேக நிழல்'', 'வானத்து நிலவு', 'கலைந்த கருநி', 'மகா நதி', 'எதிர் காற்று', 'புழுதிப் புயல்', 'சாணக்ய சபதம்', 'அக்னி வளையம்', 'காந்த முள்' போன்ற பல நாவல்களை எழுதியிருக்கிறார்.

'' 'மண்ணின் மாண்பு' கதாநாயகன் வீவியைப் பற்றி அவனைப் படைத்த பிரும்மா என்ற முறையில் ஏதாவது சொல்லுங்களேன்'' என்றேன்.

''ஒரு முறை எழுத்தாள நண்பர் 'பீஷ்மன்' 'பிறர் வளர்ச்சியில் உள்ளம் பூரிப்பவர், பிறர் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறவர்' என்று ஓர் அன்பரை அறிமுகப்படுத்திச் சொன்னதும், இந்தக் கதாபாத்திரத்தின் உருவம் ஓரளவு உருப்பெற்று விட்டது. இலக்கிய ஆர்வம் மிக்க இன்னொரு சேலம் நண்பர் பெரிய தவற்றையும் எளிதில் மன்னிக்கும் குணம் உடையவர். இந்த இரு குண இயல்புகளுடன் பெயரின் முன்னிரண்டு எழுத்துக்களால் ஒருவரை அழைக்கும் முறையும் சேர்ந்து அமைந்த பாத்திரம்தான் 'வீவி'.

''எனது வாழ்க்கையில் ஏற்பட்ட பல இக்கட்டான சூழ்நிலைகள் எல்லாமாகச் சேர்ந்து உருவானதுதான் 'மண்ணின் மாண்பு' ஒருசில நிகழ்ச்சிகளைத் தவிர மற்றவையெல்லாம் அவ்வப்போது அங்கங்கே பார்த்து, கேள்விப்பட்ட சம்பவங்களைக் கொண்டு கோவை செய்யப்பட்டவையே.''

''உங்களுடைய முதல் சினிமாப் பிரவேசம் வெற்றியாக அமைந்திருந்தும் உங்களுடைய மற்றக் கதைகள் ஏன் சினிமாக்காரர்கள் கவனத்தைக் கவரவில்லை?''

''நல்ல கதைகளைப் பட அதிபர்களின் கவனத்துக்குக் கொண்டுபோகும் தனிப்பட்ட சாமர்த்தியம் என்னிடம் இல்லாததுதான்.''

''உங்கள் சினிமா அனுபவம் பற்றி நல்ல அம்சம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்'' என்றேன்.


''ஏன் இல்லை? 1965ல் சிறந்த சினிமாக் கதையாசிரியராக என்னை 'சினிமா ரசிகர் சங்கம்' தேர்ந்தெடுத்தது. முன்னாள் சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்கள் கரத்தால் ஒரு கேடயமும், வெள்ளிச் சிலை ஒன்றும் பரிசாக நான் பெற்ற இன்ப அனுபவத்தை மறக்கமுடியாது'' என்றார் 'மகரிஷி.

''மகரம்''

கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, விலை ரூ. 2-75.

குவா குவா குரங்கு!

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த விலங்கியல் நிபுணர் கிளாஸ் மைக்கேல் அண்மையில் ஆப்பிரிக்கா கண்டத்துக்குச் சென்று விலங்குகளைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். அப்போது ஒரு மனிதக் குரங்குக்குட்டி அவரிடம் அடைக்கலம் புகுந்தது. அதைக் கைவிட மனமின்றித் தம்முடனேயே எடுத்துக் கொண்டு திரும்பி விட்டார் அவர். தமது சொந்தக் குழந்தையைப்போல் அதைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வருகிறார் அவர்! (யூ.பி.எஸ்)





குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் வழக்கம் மலைவாழ் மக்களிடம் கிடையாது. குழந்தைக்குத் தூக்கம் வருவதை அறிந்து குழந்தையை மார்போடு அணைத்து வரிவடிவமற்ற முனகல் இசையோடு கவரிலே விட்டு விட்டு மோதிக் கொள்கிறார்கள். மோதும் சத்தம் அந்தக் குழந்தைக்கு இனிய கானமாக இருக்கும்போல் தெரிகிறது. விரைவில் குழந்தை தூங்கியும் விடுகிறது. - தகவல்: மன்னைதாஸ்

"ரசிகர் கூட்டத்தில் இளவட்டங்களின் பங்கு அதிகம் இருந்தால், ஜெயலலிதாவின் முகத்தைப் பார்க்க வந்திருப்பதாக நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. கத்தரிக்கோலுக்குத் தப்பிவிட்ட அந்த டான்ஸ் உடைதான் காரணம்!"

*   *   *   *

"பார்வை இழந்தவர்களில் மூன்று ரகம்! ஒரு கண் தெரியாதவர்கள், இரண்டு கண் தெரியாதவர்கள், படத் தணிக்கைக் குழுவினர்!"

குமுதம் திரைப்பட விமர்சனத்திலிருந்து இரண்டு பகுதிகள்

இதைப் பற்றித் தணிக்கைக் குழுவில் உறுப்பினராக இருக்கும் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களைக் கேட்டபொழுது அவர் சொன்ன விவரங்கள் பின்வருமாறு:

பட உலகில் பஞ்சசீலம்

தணிக்கைக் குழுவில் மொத்தம் இருபத்தி மூன்று உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதில் பெண்கள் மட்டும் என்னையும் சேர்த்துப் பத்து பேர்கள் இருக்கிறோம். தணிக்கைக்காக வரும் தமிழ், தெலுங்கு, ஹிந்திப் படங்களை நான்கு உறுப்பினர்களும், மண்டல அதிகாரி ஒருவரும் கொண்ட குழு பார்க்கிறது. படம் ஓடிக் கொண்டிருக்கும்போதே, நாங்கள் வெட்டப்பட வேண்டிய காட்சிகள், பாடல்கள், வசனங்கள், உடைகள் போன்றவைகளைக் குறித்துக் கொள்ளுவோம். படம் முடிந்த பிறகு குறித்துக் கொண்ட பகுதிகளில் உறுப்பினர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் மீண்டும் ஒரு முறை படத்தைப் போட்டுப் பார்ப்பதும் உண்டு.

வெட்டப்பட வேண்டிய பகுதிகள் குறித்து மண்டல அதிகாரியைச் சேர்த்து ஐந்து பேர்கள் கொண்ட குழு விவாதிக்கும். உதாரணமாக ஓர் உறுப்பினர், "இந்தக் காட்சியில் வரும் பாடல் இரு பொருள்பட எழுதப்பட்டுள்ளது. எனவே இதை நீக்கிவிட வேண்டும்" என்று சொல்லி, அதை மற்ற மூன்று உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தால், இரு பொருள் கொண்ட அந்தப் பாடல் படத்தில் இடம் பெற்று விடுகிறது. இம்மாதிரி நடக்கும் விவாதத்தின் முடிவில் வெட்டப்பட வேண்டிய பகுதிகளை மண்டல அதிகாரி குறித்துக் கொள்வார். குறித்துக் கொண்டுள்ள தாள்களில் நான்கு உறுப்பினர்களும் கையெழுத்திட்டுவிட்டு வந்துவிடுவோம். பின்னர் மண்டல அதிகாரி படத் தயாரிப்பாளர்களுடன் விவாதித்து வெட்டப்பட வேண்டிய பகுதிகளைச் சுட்டிக் காட்டி விளக்குவார். அவர் சுட்டிக் காட்டும் காட்சிகளைப் படத் தயாரிப்பாளர்கள் தாங்களே வெட்டி விடுவதாகத் தெரிவித்தால், அதன்படி உருவாகும் படத்தை மண்டல அதிகாரி மட்டும் பார்த்துவிட்டுச் சான்றிதழ் வழங்குவார். மண்டல அதிகாரி தணிக்கை செய்ய வேண்டிய காட்சிகளைப் படத் தயாரிப்பாளர்களிடத்தில் விவரித்துச் சொல்லியும் அந்தப் படத் தயாரிப்பாளர்கள் வெட்டப்படுவதற்கு ஒப்புதல் தராவிடில் தணிக்கை கமிட்டி படத் தயாரிப்பாளர்களுக்குக் கொடுக்கும் சா றிதழில் முக்கோண முத்திரையிட்டுத் தரப்படுகிறது. அத்துடன் தணிக்கையும் வற்புறுத்திச் செய்யப் படுகிறது. இந்த முக்கோண வடிவமுள்ள முத்திரையை நீங்கள் படத்தில் தணிக்கைக் குழுவின் சான்றிதழ் காண்பிக்கப்படும் பொழுது கவனிக்கலாம்.



வெட்ட வேண்டிய காட்சிகளைத் தணிக்கை உறுப்பினர்கள் நால்வரும் நிர்மானித்து முடிவெடுத்தும், படம் வெளிவந்த பிறகு பார்த்தால், அந்தக் காட்சிகள் வெட்டப்படாமலேயே இடம் பெற்றிருப்பதாகச் சிலர் என்னிடத்தில் தெரிவித்தார்கள். இது உண்மையா, இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

வெட்டப்பட வேண்டிய காட்சிகளைப் பற்றி உறுப்பினர்களும், மண்டல அதிகாரியும் விவாதிக்கையில் ஒரு சிலர் ஹிந்தி, மற்றும் ஆங்கிலப் படங்களை மேற்கோள்களாகக் காட்டி அக்காட்சி படத்தில் இடம் பெற வழி செய்கிறார்கள். படத் தயாரிப்பாளர்களும் இதையேதான் வலியுறுத்தி விவாதிக்கிறார்கள். தமிழ் நாட்டுக் கலாசாரப் பண்புகளைப் பற்றிச் சுட்டிக்காட்டும்பொழுது அது பயனற்றுத்தான் போகிறது.

தரக் குறைவான, ஆபாசப் படங்களைத் தவிர்த்து, தமிழ் நாட்டுக் கலாசாரப் பண்புக்கு ஏற்றபடி படம் உருவாக வேண்டுமானால் தணிக்கைக் குழுவினரும் சற்று அக்கறையெடுத்து வேண்டுவன செய்யத்தான் வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. தணிக்கைக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களிடம் கண்டிப்பும், ஆசாபாசங்களுக்கு இடமளிக்காத உறுதியும் இருந்தால் நிச்சயம் தரக் குறைவான படங்கள் வெளியாக வாய்ப்பே இருக்காது என்பது எனது அபிப்பிராயம்.

சலுகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் படத் தயாரிப்பாளர்களுக்கு, கண்டிப்புடன் நடந்துகொள்ளும் ஒருசில உறுப்பினர்களின் மீது வெறுப்பு ஏற்படுவது சகஜம்தான். அதற்காக நாம் நமது கடமையிலிருந்து தவறி நடப்போமாகில் அது சமுதாயத்துக்கே இழைக்கப்படும் தீங்குதான். ஆகவே எல்லா உறுப்பினர்களும் தணிக்கை செய்யும்போது உறுதியுடனும் கண்டிப்புடனும் இருந்து ஒத்துழைத்தால் படத் தயாரிப்பாளர்களும் தாங்கள் சமூகத்தின் மீது கொண்டுள்ள தவறான எண்ணத்தை மாற்றிக் கொள்ள ஏதுவாகிறது.

தமிழகத் திரைப்படங்கள், ஒருசில படங்களைத் தவிர மற்றவைகள் எல்லாம் ஆபாசமான முறையில் தயாரிக்கப்பட்டு வருவதை நினைக்கும்பொழுது என் மனம் வேதனையடையத்தான் செய்கிறது. மலையாளம், தெலுங்கு, கன்னடப் படங்களைத் தமிழ்ப் படங்களைவிடச் சற்றுத் தரமுள்ளவையாகத்தான் தயாரிக்கிறார்கள். ஒரு சமயம் நான் ஒரு பிரபல தமிழ் நடிகையிடம், ''ஆபாசத்தைத் தூண்டக்கூடிய உடைகளிலும், காட்சிகளிலும், நடனங்களிலும் நடிக்க முடியாது என்று எல்லா நடிகைகளும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைத்து முடிவெடுத்தால் என்ன?'' என்று கேட்டிருக்கிறேன். இன்னும் இதற்கான ஆயத்தங்கள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

ஒருசில வாரங்களுக்குமுன் 'காந்திஜியின் நூற்றாண்டு விழா'வை யொட்டித் தமிழக அரசின் கீழ் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் உப குழு (Women and Children's Sub-Committee) தயாரித்துள்ள பதினேழு அம்சத் திட்டத்தை விரிவுபடுத்த ஒரு பயிற்சி முகாம் திருவான்மியூரில் நடந்தது. பெண்கள் குழுவின் பதினேழு அம்சத் திட்டத்தில் 'கல்லூரி மாணவிகளின் பங்கு என்ன?' என்பதைப் பற்றி விவாதம் நடந்தது. விவாதத்தின் நடுவே திரைப்படங்களைப் பற்றியும், ஆபாசச் சுவரொட்டிகளைப் பற்றியும் பேச்சு நடந்தது. இதைப் பற்றி அவர்கள் என்னிடத்தில் கேட்ட பொழுது நான், ''ஆபாசமான சுவரொட்டிகளுக்கும் தணிக்கைக் குழுவுக்கும் சம்பந்தமே இல்லை'' என்பதைத் தெளிவுபடுத்தினேன். ''சென்னை நகரசபை மற்றும் போலீஸ் கமிஷனர் ஆகியோர் அனுமதியைப் பெற்ற பின்புதான் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன'' என்பதைத் தெரிவித்தேன். திரைப்படங்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கல்லூரி மாணவிகள் எல்லாரும் தமிழ்த் திரைப் படங்களில் ஆபாச உடைகளையும், நடனங்களையும், காட்சிகளையும் புகுத்துவதை வன்மையாகக் கண்டித்தனர். வெறும் பேச்சுடன் நில்லாமல் தாங்கள் இனி வரும் ஆபாசமான படங்களைப் பார்ப்பதில்லை என்று முடிவெடுத்தனர். இந்த முடிவை எல்லா மாணவிகளும் ஆதரித்து ஆரவாரம் செய்தார்கள்.

ஆபாசமான, தரமற்ற படங்கள் வெளியாவதைத் தடுக்க நான் கூறும் யோசனைகள் இவைதாம் :


1. ஆபாசத்தைத் தூண்டக்கூடிய வகையில் தயாரிக்கப்படும் தரமற்ற படங்களை மக்கள் வெறுத்துப் புறக்கணிக்க வேண்டும்.
2. தணிக்கைக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களிடையே கண்டிப்பும், ஆசாபாசங்களுக்கு இடமளிக்காத மன உறுதியும் இருத்தல் வேண்டும்.
3. ''நாங்கள் ஆபாசத்தைத் தூண்டும் உடைகளில் நடிக்கவோ, நடனம் ஆடவோ முடியாது'' என்று எல்லாத் திரைப்பட நடிகைகளும் முடிவெடுத்து ஒத்துழைக்க வேண்டும்.
4. இரு பொருள்பட எழுதும் பாடல்களை நிறுத்தப் பாடலாசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும்.
5. படத் தயாரிப்பாளர்கள் அனைவரும் தாங்கள் சமூகத்தின் மீது கொண்டுள்ள தவறான எண்ணத்தை மாற்றிக் கொண்டு படத் தயாரிப்பில் ஈடுபட வேண்டும்.

மேற்கண்ட பஞ்சசீலக் கருத்துக்கள் நிறைவேறும் நாளில் தரமுள்ள தமிழ்த்திரைப் படம் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

பேட்டி: **திரைத் துருவி**

[சினிமா சிந்தனை என்ற இந்தத் தொடரில் திரை உலகின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சிலவற்றையும் அவற்றுக்குத் திரை உலகப் பிரமுகர்கள் அளித்துள்ள பதில்களையும் படித்தீர்கள். இதுவரை கல்கியில் இடம் பெற்றுள்ள எட்டு கட்டுரைகளையும் நடுவராக இருந்து நன்கு ஆராய்ந்து திரு பி. எஸ். ராமையா அவர்கள் தமது முடிவுகளைக் கட்டுரை வடிவிலே தருவார். இது அடுத்த இதழில் இடம் பெறும். —ஆசிரியர்]







● சென்னை 'அண்டர் ஷெரிப்' திரு என். வி. கிருஷ்ணன் அவர்களின் புதல்வி குமாரி மதுரத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் சிறப்பாக நடந்தது. சென்னை கவர்னர் ஸ்ரீ உஜ்ஜல் சிங்கும் சர்தாரினி உஜ்ஜல்சிங்கும் விஜயம் செய்தனர்.



● 'சோ' அவர்களின் 'முகமது பின் துக்ளக்' நூறுவது நாடகம் பொதுத்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

● அசோக் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடு ஸ்தாபனத்தார் நடத்திய போட்டியில் கல்லூரி மாணவி மிஸ் ஜெயஸ்ரீ தாஸ் குப்தா 'மிஸ் கல்கத்தா 1968' என்ற புகழைச் சூட்டிக் கொண்டார்.

● சிறிய அரங்கத்தில் பெரிய கச்சேரிகளை வழங்கு வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட "ஆலாபனை"யின் ஆதரவில் ஆகஸ்டு 20ம் தேதி, மயிலை சாஸ்திரி மண்டபத்தில் சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யருக்கு அவருடைய சஷ்டியப்தபூர்த்தியை யொட்டி பாராட்டுரைகள் வழங்கப்பட்டன. திரு வி. ஆர். பட்டாபிராமன் தலைமை வகித்தார். பாராட்டுக்குப்பின் செம்மங்குடியின் இன்னிசைக் கச்சேரி அமோகமாக நடைபெற்றது.

● தென் ரயில்வேயைச் சேர்ந்த திரு எஸ். ஜெயவேலுவின் குமாரி ஜே. லீலாவதியின் பரத நாட்டிய அரங்கேற்றம் சென்னை பாலர் அரங்கத்தில் 23-8-68ல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. செட்டிநாடு ராஜா முத்தைய செட்டியார் தலைமை தாங்கினார்.



இனிக்கும் நினைவுகள்



25. தூண்டில் மீன்

"ஆமாம்மா! இனிமேல் நம்ப டாக்டர் ஐயாவுக்குக் கொஞ்சம் பளு குறையும். பெண்கள் 'க்யூ' முழுதும் லேடி டாக்டர்தான் பார்க்கிறாங்க... ஏம்மா, நம்ப ஐயாவும், அந்த அம்மாளும் கூட ஒண்ணாப் படிச்சவங்கதானாமே.. உங்க பிரசவத்தைக் கூட இங்கேயே வைச்சுக்கலாமில்லே...?'' என்று கேட்டாள் மெட்டர்னிடி அஸிஸ்டெண்ட்.

குழலியுள் இனம் புரியாத படபடப்பு மூண்டது. ''அந்த அம்மாவின் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

''டாக்டர் சீலியா.''

''டாக்டர் சீலியாவா?'' தன் கொந்தளிப்பை அப்படியே விழுங்க முயன்றான் குழலி. 'இதை ஏன் அவர் என்னிடம் சொல்லவில்லை?' என்ற கேள்வி விசுவரூபம் எடுத்து அவள் மண்டையைக் குடைந்தது.

''உங்களுக்குத் தெரியுமா அம்மா?''

''தெரி...யும்'' தன் தடுமாற்றத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவள் தவித்தாள். கண்களில் நீர் முட்டியது. நடுக் கடலில் பத்திரமாகப் போய்க் கொண்டிருந்த படகில் ஓர் ஓட்டை விழுந்துவிட்ட திகில் அவளைப் பற்றியது.

''அப்படின்னா அவங்களே உங்களை அப்புறமாப் பார்க்க வருவாங்களா?''

''ஆமாம்!''

மெட்டர்னிடி அஸிஸ்டெண்ட் எழுந்தாள்.

செய்தி கூறியவள் வெளியேறிய கணமே குழலியின் நெஞ்சில் ஏதோ சிக்கித் தவிப்பதைப் போன்ற பதைப்பு ஏற்பட்டது. 'டாக்டர் சீலியாவா? வேறு எத்தனையோ சீலியாக்கள் இருக்கக் கூடாதா? அவரோடு படித்தவள் என்று கூறினாளே! சீலியா இதே ஊருக்கு வரப் போவது வசந்தனுக்குத் தெரியாமலா இருக்கும்? அவர் ஏன் என்னிடம் இதுபற்றி எதுவும் கூறவில்லை?''

சற்று முன் குதூகலத்தில் திளைத்திருந்த அவள் மனம் தூண்டில் மீனாய்த் துடித்தது. மதிய உணவு சாப்பிட வந்த வசந்தனின் முகத்தை அவள் கூர்ந்து பார்த்தாள். அவன் முகத்தில் வருத்தமா, மகிழ்ச்சியா? எது படிந்திருந்தது?

''குழலி!''

அவளைப் பார்த்து வசந்தன் சிரிக்கும் சிரிப்பிலேயே அவளுக்குச் சந்தேகம் கவிந்து கொண்டது. 'எப்போதையும் விட இன்று ரொம்ப சந்தோஷமாக இருக்கிறார் போலிருக்கிறதே!'

வசந்தன் அவள் அருகே வந்து முதுகைத் தட்டினான். ''என்ன குழலி! உடம்பு நன்றாகத்தானே இருக்கிறது? சோர்ந்திருக்கிறாயே?''

அன்பும், பரிவும் இன்று அளவுக்கு அதிகமாகப் பொழிகிறதே! எல்லாவற்றையும் மறைத்து மழுப்பவா? என்றுமில்லாத உற்சாகம் கரை புரள்கிறதே! இதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்குமோ?


வசந்தன் விநோதமாக அவளைப் பார்த்தான். ஒரு கணம் பேதை போல் அவள் கண்கள் நிராதரவான சுடர்களாய்த் தெரிந்தன. மறுகணமே பயத்தையே படமாக வரைந்த பாவனையில் நடுங்கி நின்றாள். அவன் மனத்தில் இரக்கம் பீறிட்டது. அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்தவாறே மெல்லிய குரலில் ''குழலி!'' என்று அழைத்தான். அவள் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக் கொண்டவள் பத்திரமான அச்சத்தோடு தன் கையில் கிடைத்த மரக்கிளையைப் பற்றிக் கொண்டு திணறுவது போல் அவள் தன்னைச் சூழ்ந்த சந்தேகத்தையே உதறி, அவன் மனத்தினுள் ஐக்கியமாகிவிடத் துடித்தாள். அவனது ஆதரவான, இதமான பிடியில் அவள் அவனுக்கே ஆராதனையாகி, அர்ப்பணமாகிவிட்ட இன்பச் சோர்வில் தள்ளாடினாள். உள்ளத்தில் நம்பிக்கைச் சுடர் ஒளி வீசுவது போன்ற நிம்மதி ஏற்பட்டது. தன்னைச் சமாளித்துக் கொள்ளும் பாவனையில் வெற்றி பெற அவள் அவன் காலடியில் குனிந்து, பூட்ஸின் கயிறுகளைப் பிரித்தாள். அவளது செயல்களின் அர்த்தம் விளங்காத அவன் திகைப்போடு அவளையே பார்த்தான். ''என்னிடம் ஏதோ கேட்க நினைக்கிறாய். இல்லையா, குழலி?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!''

''சபாஷ்! எங்கே, கேட்டுவிடு!''

''கேட்டுவிடுவேன், நிச்சயமாக அதற்குரிய விடையைத் தருவீர்களானால்...!''

''ஓ! என்ன இத்தனை பீடிகை இன்றைக்கு? இரு, இன்று நான் ஏதாவது



தவறு செய்து விட்டேனா என்று பார்த்துக்கொள்ளுகிறேன். உம்...'' என்று யோசிக்கும் பாவனையில் முகத்தை

வைத்துக் கொண்டே, ''ஆமாம்! நான் வாங்குகிற சம்பளத்துக்கு இன்று செய்த வேலை கொஞ்சம் குறைவு...'' என்றான்.

அவன் கொஞ்சம் கொஞ்சமாக விஷயத்துக்கு வருகிறான் என்று குழலிக்குத் தோன்றியது.

''என்ன குழலி! நான் நகைச்சுவையாக ஏதேனும் பேச முயன்றால்கூட நீ சிரிக்கவே மாட்டேனென்கிறாய்!'' என்று வழக்கமான குற்றச்சாட்டை எடுத்து வீசினான் அவன்.

''அந்த நளினம் என்னிடம் இல்லை என்பதை எப்போதுமே குத்திக் காட்ட வேண்டுமா?'' அவள் குரலில் எங்கோ ஒரு மூலையில் சின்னஞ் சிறு வேற்றுமை தொனி புலப்படுவதை வசந்தன் சட்டெனக் கண்டுகொண்டான். அவளைச் சமாதானப் படுத்தும் நோக்கத்துடன், ''பார்த்தாயா? மறுபடியும் என் வேடிக்கையை. நீ உண்மையாக எடுத்துக் கொள்கிறாய்!'' என்றான்.

''உங்களைப் பொறுத்த உண்மைகள் எல்லாவற்றையும் நான் தெரிந்து கொள்ளத்தான் போகிறேன். நீங்கள் சொல்லாவிட்டாலும் கூட!'' குயிலியின் குரலில் அழுத்தம் தெரிந்தது. வசந்தனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

வசந்தன் திகைப்போடு எழுந்தான். அவன் நெற்றியிலும் உதட்டிலும் வியர்வை முத்துக்கள் அரும்பின. மணிக்கட்டை அழுத்தித் தேய்த்துக் கொண்டான் அவன். பிறகு கைகளைப் பின்புறம் சேர்த்துக் கட்டியவாறே கொஞ்ச நேரம் உலாவினான். உணர்ச்சித் துடிப்பில் முகத்தில் வழக்கமாக நிலவிக் கிடக்கும் சாந்தமும், சாதுர்யமும் விடைபெற்றுக் கொண்டன. சிந்தனையின் கோடுகள் நெற்றியில் நீண்டன. திடீரெனத் தான் வாழும் வாழ்க்கையின் இன்ப துன்பங்களே அவனுக்குத் தொடர்பில்லாதவை போல், அப்பாற்பட்டவை போல் தோன்றின. உலவிக் கொண்டே நின்ற வசந்தன் குழலியின் அருகே வந்ததும் நின்றான்.

''என்ன சொன்னாய், குழலி? என்னைப் பற்றிய உண்மைகளை நீ தெரிந்து கொள்ளப் போகிறாயா? ஓகோ! திடீரென்று இந்த ஆராய்ச்சியில் நீ ஏன் இறங்கிவிட்டாய்? பொழுது போகவில்லையா?''

அவனது ஒவ்வொரு சொல்லும் சீற்றத்தைப் படிப்படியாகச் சுமந்து சாடியது. அந்தச் சீறலால் தான் சிறு துரும்பாகிவிட்ட அவமானத்தில் குழலி குனிந்து கொண்டாள். கண்கள் குபீரெனப் பொங்கி வழிந்தன.

''நான் ஒன்றும் அத்தனை பெரிய உலகத் தலைவனோ, மர்ம மனிதனோ இல்லை. தெரிகிறதா?'' அதட்டலான அவன் தொனியில் அவள் தளிர் மேனி நடுங்கியது. ''நான் மிகச் சாதாரணமானவன். வறுமையின் கோரப் பிடியில் சிக்கி உழன்றவன். அதன் பயனாக ஒரு செல்வந்தருக்கு அடிமையாகி, உணர்ச்சிகளை அடகு வைத்தவன். இந்த உண்மைகள் எல்லாம்தான் என்னை ஒன்றுமில்லாதவனுக்கிக் கடைசியில்... அப்புறம்தான் உனக்குத் தெரியுமே...'' அவன் படபடவெனப் பொழிந்து விட்டுச் சோபாவில் பொத்தென விழுந்தான்.

குழலி வெறிச்சிட்ட பார்வையோடு அவனை நோக்கினாள். அவன் மொழிகளில் ஊடாடிக் கிடந்த கசப்பும் விரக்தியும், அவனது உண்மையான மன நிலையை விளக்கிக் காட்டின. உணர்ச்சி வேகத்தில் கொட்டிவிட்ட சொற்களின் விபரீதப் பொருள்களையெல்லாம் அவள் உன்னி உன்னி உணர்ந்து கண்ணீர் பெருக்கினாள். நிதானமான தயக்கத்துடன் அவள் தொடர்ந்தாள்: ''அதன் பயனாக என்னை மணக்க நேர்ந்தது. உங்களுக்குப் பிடிக்காமலேயே என்னோடு வாழ்கிறீர்கள் என்பதைச் சமயம் வரும் போது எனக்கு விளக்கிக் காட்டுகிறீர்கள். இப்படிக் காட்ட நீங்கள் ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கித் தயாராகக் காத்திருக்கிறீர்கள் இல்லையா?'' குழலியின் உடைந்த குரல் கேவியது.

கண்களையும், மனத்தையும் மறைத்திருந்த ஏதோ ஒரு திரை அகல வசந்தன் முற்றும் உணர்வு வரப் பெற்று வருந்தினான். அவனை நம்பி வந்த ஒரு பேதைப் பெண்ணை இப்படித் தான் வார்த்தைகளால் சாடுவதா? அவள் கர்ப்பிணி என்பதை எப்படித் தான் அவன் மறந்து போனானோ? அவன் எழுந்து மறுபடியும் அவள் அருகே வந்தான். அவனது விரல்கள் அவள் பளிங்குக் கன்னத்தில் உருளும் கண்ணீரை இதமாகத் துடைத்து விட்டன.

''குழலி, இங்கே பார்! இங்கே பாரேன்... உனக்கு இன்று என்ன வந்தது? ஒருநாளும் என்னிடம் இப்படியெல்லாம் பேச மாட்டாயே. நான் அலுப்பும் சலிப்புமாக வீடு திரும்பும் போது இப்படியெல்லாம் பேசினதால் எனக்குக் கோபம் வந்துவிட்டது. எங்கே, எழுந்திரு. எனக்கு ஒரே பசி. சாப்பாடு போடுகிறாயா?''

அவள் எழுந்தாள். விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு சாப்பிடும் இடத்துக்கு வந்தாள். அவளையே பின் தொடர்ந்தான் அவன். உணவு மேசையில் சூடான சமையல் வகை வந்து

ராபின் ப்ளூ உலகத்தில் மிக ஏராளமாக விற்பனையாகும் நீலம்

உலகம் முழுதும் சுத்தமான அல்ட்ரா மரைன் ப்ளூ என்றும், வெண்மை தருவதில் பிரபலமானது என்றும் புகழ்பெற்றது. ராபின் அசல் ப்ளூ ஆனபடியால் உங்களுக்கு இயற்கையில் கவர்ச்சியான வெண்மை தருகிறது. அத்துடன் ஒரு பாக்கெட் பல சலவைகளுக்கும் பயன்படுகிறது. மேலும் ராபின் ப்ளூ துணிகளை கெடுக்காது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

போலிகள் ஜாக்கிரதை.
அசல் ராபின் ப்ளூவையே
வற்புறுத்திக்கேளுங்கள்.





ராபின் ப்ளூ உங்கள் துணிகளுக்கு இயற்கையில் கவர்ச்சிகரமான வெண்மையை சேர்க்கிறது



ARSC-29 TAM

தலைவலியா?



அவேதன்



சாப்பிட்டு உடனடியாக நிவாரணம் பெறுங்கள்

SQUIBB

SARABHAI CHEMICALS

இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பொரேடட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். காரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.

அற்புத 'எபேப்' அடங்கிய அவேதன தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர சாதாரண வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் துரிதமான, தீமையற்ற, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கிறது.

Shilpi SC 51A/67 Tam

சேர்ந்தது. வசந்தனின் தட்டில் மல்லிகையாக உதிரும் சாதம். கடலைப் பருப்பு விழித்துப் பார்க்கும் புடலங்காய்க் கூட்டு. உறைந்த நெய் விழுது சூடான சாதத்தில் உருகிக் கரைந்தது. குழம்புக் கரண்டி அவனருகே நீண்ட போது, அவன் அவளையும் சாப்பிடும் படி உபசரித்தான்.

''பிறகு சாப்பிடுகிறேன்'' என்று பதில் வந்தது.

''சரி. அப்படியானால் எல்லாவற்றையும் எடுத்து வைத்து மூடு. நானும் பிறகு சாப்பிடுகிறேன்.''

அவள் மௌனமான குரூரத்தோடு அவனைப் பார்த்தாள். பிறகு மற்றொரு தட்டில் சாதத்தைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

அவளது தீர்க்கமான பார்வை அவனைச் சாடியது. அவன் வேறுபுறம் பார்வையைத் திருப்பிக் கொண்டான். தன் கணவன் மற்றொருத்தியை மனத்துள் சுமந்தவனோ என்ற ஐயமான நெருடல் அவளுக்கு எப்போதுமே இருந்து வந்தது. தன் மனைவி தன்னை உணர்ந்து கொண்டாளோ, கண்டுகொண்டாளோ என்ற சந்தேகமான உறுத்தல் அவனுக்கும் ஓரிரு சமயங்களில் தோன்றியது. இதன் முடிவு திருப்திகரமாக விரியுமா?

குழலி சாதத்தைப் புரட்டிப் புரட்டிப் பிசைந்து கொண்டேதான் இருந்தாள். வாயில் ஓர் உருண்டை கூட இடவில்லை.

''சாப்பிடேன்.''

''நீங்கள்... ஏன் சீலியா வந்ததையே என்னிடம் சொல்லவில்லை...?'' சாப்பிடுவதற்குத் தடையாக இந்த எண்ணமே சிக்கிக் கொண்டாற்போல் அவள் திணறினாள்.

வசந்தனுக்குத் திக்கென்றது. தன்னையும், தன் உள்ளத்தையும், விண்டுரைக்கிறாளோ? முதன் முதல் சீலியாவைப் பற்றியே இப்போதுதான் அவள் பேசுகிறாள். அவனது ரகசியத்தைத் தான் உணர்ந்து, தனக்குள் காத்ததையே ஒரு சாதனையாகக் காண்பித்துக் கொள்கிறாளோ?

கண்ணுக்குப் புலனாகாத அலை ஒன்று வசந்தனின் உள்ளத்தைப் புரட்டிப் பார்ப்பது போலிருந்தது. பண்டு கடந்த பகற் கனவுகள் எல்லாம் வலிய கோட்டையாகிச் சூழ்ந்து விட்டது போல் அவன் மெய் சிலிர்த்தான்.

''என்னிடம் நீங்கள் அதைச் சொல்ல விரும்பவில்லை. இல்லையா?'' மறுபடியும் ஆரம்பித்த விஷயத்துக்கே வந்தாள் குழலி. ''வரப் போவதே உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். வந்தபின்பும் கூடச் சொல்லவில்லை!''



சங்கீத வித்வான்: ஏண்டா சிஷ்யா! உனக்கு என் சங்கீதம் பிடிச்சிருக்கா?

சிஷ்யன்: பிடிச்சிருக்கு சார்!

வித்வான்: ஏன் பிடிச்சிருக்குங்கறதுக்குக் காரணம் சொல்லு.

சிஷ்யன்: எனக்கு ஞானம் போதாத காரணமோ என்னமோ....? எனக்குச் சொல்லத் தெரியல்லே சார்!

''சொல்லியிருக்கலாம். ஆனால் எனக்கு அது அத்தனை முக்கியமாகப் படவில்லை.''

''என்னிடம் சொல்வதா?''

''இல்லை. அவள் வருவதும், வந்ததும்....''

''சீலியாவா உங்களுக்கு முக்கியமாகப் படவில்லை?'' அவளுடைய சன்னமான குரல் அவன் இதய அழுத்தில் அம்பாகப் பாய்ந்து தைத்தது.

''ஆமாம். இப்போது அப்படித்தான்...'' என்று அழுத்தம் திருத்தமாக அவன் அணியடித்தாற்போல் கூறினான்.

குழலி பதில் பேசவில்லை. நின்று நிதானித்துத் தன் கணவன் கூறும் மொழிகளை உண்மையென நம்பித் தீர்மானித்துக் கொள்ள விரும்பினாள். மெல்லிய குரலில், ''இதை நான் நம்ப முயல்கிறேன்'' என்றாள்.

''முயல்கிறேன் என்ன, முயல்கிறேன்? உன்னை நம்பும்படியாக யாரும் விரல் கணுக்களில் ஊசி ஏற்றவில்லை.'' வசந்தனுக்குக் 'குபுக்'கெனக் கோபம் பொத்துக் கொண்டது. கையை உதறிக் கொண்டு எழுந்து விட்டான். குழலி தடுக்கப் பார்த்தாள். அவன் அவசரமாக உள்ளே விரைந்தான். அப்புறம் அவளுக்கும் சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. அந்த நேரமே என்றுமில்லாத வழக்கமாக மனஸ்தாப மூட்டம் போட்டுக் கொண்டது.

அறையினுள் செல்ல அவளுக்குத் துணிவு வரவில்லை. ஒருக்களித்துச் சாத்தியிருந்த கதவிடுக்கு வழியே சிற்றுகச் சீறும் ஒளி. இந்த 'ம்'மென்ற

சுவர்க் கோழி மட்டும் ரீங்காரமிடும் தனிமை மோனத்தில், நிசப்தத்தின் தனி ஆழத்தில் நம்பிக்கை குன்றி மடிய, வெறும் தரையில் கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்த வண்ணம் குழலி படுத்துக் கிடந்தாள்.

''உள்ளே வந்து படுத்துக்கொள் ளேன்.'' அறையுள்ளிருந்து மிகப் பிர யாசையோடு சகஜ பாவத்தை வர வழைத்துக் கொண்ட உடைந்த குரல் போலியாக அழைத்தது.

குழலி அசையவுமில்லை; மறுமொழி கூறவுமில்லை. இன்னும் அவள் கேட்க வேண்டியவை எவ்வளவோ இருந்தன. கொட்டிவிட வேண்டும் போல் பட படப்பில் மனம் பேதலித்தது. கணவ னிடம் நேரில் கேட்க முடியாமல் உறுத் தியதெல்லாம் கற்பனை வடிவங்களாகப் பெருகி உயிர்த்தன. இந்த நினைவு களுக்கு ஒரு வரம்போ, வரையறையோ ஏது? அன்றொரு நாள் வசந்தனை அறி முகப்படுத்தும் விருந்தின்போது சீலியா வோடு பேசியது... வசந்தனைச் சுட்டிக் குழலி காட்டியபோது மயக்கம் வருவ தாகச் சீலியா மனத்துக்குள் மறுகியது. கடைசியில் விருந்து கூட உண்ணாமல் வெளியேறியது... அன்றிரவே சீலியா வின் அப்பா ராகவன் மீனாட்சிசுந்தரத் திடம் வந்து சீலியா வசந்தனை விரும்பு வதாக மறைமுகமான சொற்களால் வர்ணித்து, விட்டுக் கொடுக்கும்படி கேட்டது... அதன் பின் வசந்தனுக்கு உடம்பு சரியின்றி ஸ்பெஷல் வார்டில் சேர்த்திருப்பதாகச் சீலியா போன் பண் ணியது... குழலியும் மீனாட்சிசுந்தரமு மாகச் சென்று வசந்தனை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டது... அப்போது காரில் ஏறும்போது கண் கலங்கச் சீலியா வசந்தனைப் பார்த்துத் தலையசைத்து விடை தந்தது... அதே கலக்கத்துடன் வசந்தனும் தலையசைப்பாலேயே விடை பெற்றது. எல்லாமே நிழற் படங்களாக அவள் மனத்தில் படர்ந்தன. அப்புறம் அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சி திருமணம்... சீலியா மட்டுமல்ல, சித் தப்பா ராகவன் கூடக் குழலியின் திரு மணத்துக்கு வரவில்லை....! ஏன் சித்தி துளசி கூட அல்லவா கணவனுக்கு அடங்கி வராமல் இருந்துவிட்டாள்! அம்மா மட்டும் தனியொருத்தியாக நின்று '...அம்மா!...அம்மா!...' தனக் குள் ஒரு குரல் அப்படித் தன்னையே அழைப்பதை உணர்ந்தாள் குழலி. இல ரென்று எல்லா உணர்வும் அழிய, தனக் குத் தானே உணரும் ரகசிய உவகை யால் உந்தப்பட்டு எழுந்தாள். அந்த அன்பின் ரகசிய மலர்ச்சிக்குக் காரண மானவனைக் காணும் ஆசை தூண்டவே, எழுந்து மெதுவாக அறைக் கதவைத் திறந்தாள். வசந்தன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். மறுபடியும் அவள் மனம் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போலாகி விட்டது.

''நான் ஒரு பொருட்டல்ல அவருக்கு. என் கண்ணீர் அவரைக் கலக்கிவிட வில்லை. அவருக்கு வேண்டாதவள் நான்.'' இந்த நினைவையே அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மறு படியும் வெறும் தரையைப் புகல் அடைந்தது அவள் உடல். நெஞ்சின் பொருமல்கள் எல்லாம் கட்டவிழ்ந்து பீறிட்டன. அவள் உடல் குலுங்கிக் குலுங்கிச் சோர்ந்தது.

ஃ ஃ ஃ

''நெடூர், ஆரம்ப சுகாதார நிலை யம்'' என்ற எழுத்துக்கள் மழை நீரில் நனைந்து மங்கித் தெரிந்தன. கண்ணுக் கெட்டிய தூரம் வரை வானம் மப்பும், மந்தாரமுமாகக் குழம்பிக் கிடந்தது. ஆஸ்பத்திரி வராந்தாவில் ஒண்டிய வாறே நோயாளிக் கூட்டம் டாக்டர் வரவுக்காகக் காத்து நின்றது. கம்ப வுண்டர் மருந்துகளைக் கலக்கிக்கொண் டிருந்தார். ஸ்வீப்பர் நோயாளிக் கூட் டத்தை அதட்டிக் கொண்டிருந்தாள். எப்போதும் போல் வசந்தன் அந்த நேரத்துக்கு வந்திருக்க வேண்டும். ஆஸ் பத்திரியை யொட்டிய குவார்ட்டர்ஸி லிருந்து அப்போதே மலர்ந்த மல்லி கையைப் போன்ற தூய்மையான திருக் கோலத்துடன் வந்த சீலியாவுக்கு வசந் தனைக் காணாதது வியப்பை அளித்தது.

''டாக்டர்! பிரசவம் நார்மலாக இருக்காது போலுள்ளது. நீங்கள்தான் வர வேண்டும். 'ஃபோர்செப்ஸ் அப்ளை' பண்ண வேண்டும்.'' மருத்துவப் பெண் விஷயத்தைக் கூறிய சுருக்கிலேயே, சீலியா 'லேபர் ரூமை' நோக்கி வேக மாக நடந்தாள். கடமை என்ற உன் னத நோக்கு ஒழியாமல் சூழ்ந்துகொண் டால் ஒருவர் தம் இன்ப துன்பத்தி லிருந்து எத்தனை சீக்கிரம் விடை பெற்று விட முடிகிறது!

கடமையின் வெற்றிப் புன்னகை யோடு திரும்பிய சீலியாவிடம், ''இன்று டாக்டர் வரவில்லை. அவருக்கு உடம்பு சரியில்லையாம்'' என்றார் கம்பவுண்டர்.

அன்று மாலை வசந்தனுக்குப் பதி லாகச் சீலியா சப்—சென்டருக்குப் போய் வந்தாள். திரும்பும்போது மணி எட் டாகி விட்டது. கூட வந்த 'ஹெல்த் விசிட்டர்' சீலியாவைப் பார்த்து, ''டாக்டர்! கொஞ்சம் 'வானை' நிறுத்தி இறங்கிக் கொள்ளலாமா? டாக்டர் வீடு



ஸிரிடோன் காஃபி

நீங்கள் காஃபியைத்தான்
விரும்புகிறீர்கள்-

**இதை அறிந்தே இப்பொழுது
ஸிரிடோன் காஃபி மணத்திலும்
தயாரிக்கிறோம்!**

ஒரு கோப்பை பாலில் ஸிரிடோன்
காஃபியை கலந்து அதன் சுவையான
காஃபி மணம் உங்களை எப்படி
கவருகிறது என்று பாருங்கள்



ஸிரிடோன்
கொக்கோ
மணத்திலும்
கிடைக்கிறது

இதோ வருகிறது. அவரைப் பார்த்து விட்டு....'' என்று அனுமதி கோரும் தோரணையில் வினவினாள். சட்டெனச் சீலியாவின் மனத்திலும் அதே எண்ணம் பிரதிபலித்தது.


''ஓ! நானும்வருகிறேனே?'' என்றாள்.

'வான்' வசந்தனின் வீட்டருகே நின்றது. கார் ஓசை கேட்டுக் குழலி வெளியில் வந்தாள். பனி படர்ந்த மலர் போல் அவள் முகம் மங்கிக் கிடந்தது. ஆனால் சீலியாவைப் பார்த்தகணமே அவள் உள்ளம் பதறி விதிர்த்தது. ஒரே விநாடியில் கண்களில் ஒளிர்ந்த அதிர்ச்சி உள்ளத்தின் முறிவைக் காட்டியது. சீலியா அதனை உணராத பாவனையில் இலேசாகச் சிரிக்க முயன்றாள். ''குழலி! சௌக்கியந்தானே? டாக்டருக்கு உடம்பு தேவலையா?'' என்று நளினமான குரலில் வினவினாள்.

''உள்ளே படுத்திருக்கிறார்'' என்று விலகி வழி விட்ட குழலி, தனியாகச் சீலியாவை வரவேற்று எதுவும் கூறவில்லை. அவள் கால்கள் இற்று, கண்கள் இருண்டன. காதுகள் மங்கி, 'ஹோ' வென்று இரைச்சலிட்டன. திராணியற்ற நிலையில் அப்படியே கீழே உட்கார்ந்து கொண்டாள் அவள். ஐந்து நிமிடங்களிலேயே சீலியா வசந்தனை விசாரித்துவிட்டுத் திரும்பி விட்டாள். வாசற்படி தாண்டும்போது சுவரில் சாய்ந்தவாறு குழலி உட்கார்ந்திருப்பதைக் கண்டவள் அவளருகே போய் ஏதேனும் பேசலாமா என்று எண்ணினாள். அதற்குள் அறைக்குள்ளிருந்து குழலியை வசந்தன் அழைத்தான். அந்தக் குரலின் புல்லரிப்பில் ஏக்கம் சுமந்தவளாய்ச் சீலியா குழலியையே நோக்கினாள். அவள் எழவில்லை. எனவே அவள் அருகே போய்க் குழலியின் தோளைத் தொட்டாள். குழலி மயக்கமடைந்த நிலையில் இருப்பதைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள். அவளைத் தன்மேல் சாய்த்துக் கொண்டாள். ஹெலன் விசிட்டர் பரபரப்புடன் தண்ணீர் எடுத்து வந்தாள். இந்தப் பரபரப்பில் வசந்தனும் தட்டுத் தடுமாறி எழுந்து வந்தான். சீலியாவும் ஹெலன் விசிட்டருமாகக் குழலியைத் தூக்கிப் படுக்கையில் படுக்க வைத்தனர். சீலியா நாடியைப் பரிசோதித்து விட்டுத் திருப்தியோடு வசந்தனை நிமிர்ந்து பார்த்தாள்.

''இப்படித்தான் அடிக்கடி கொஞ்ச நாட்களாகவே மயக்கம் வருகிறது'' என்று வசந்தன் முணுமுணுத்தான்.

வசந்தனின் வீட்டை விட்டுப் புறப்பட்டதோ, தனது குவார்ட்டர்ஸினுள்




''நேற்று இந்தக் கார் நாற்பது மைல் வேகத்தில் போயிற்று - தெரியுமா, சார்!''
''நம்ப முடியலையே! இன்றைய பேப்பரில் நேற்று நாற்பது மைல் வேகத்தில் கார்று விபத்தாகச் செய்தி ஒன்றும் காணோமே!''

நுழைந்து கதவைத் தாளிட்டதோ எல்லாமே சீலியாவுக்கு இயந்திர கதி தான். தனக்குள் கொந்தளிக்கும் தாள முடியாத தோல்வித் துடிப்பு மாற்ற முடியாத பலவீனமாய்ப் பெருகி நின்றது. வேதாந்திகள் கூறுவதுபோல் தீவினைகள் தொடரும் என்பது எத்தனை உண்மை? அவள் ஏன் இந்த நெடுங் கிராமத்துக்கு அங்கு வசந்தன் இருக்கிறான் என்று தெரிந்தும் வர ஒப்புக் கொண்டாள்? அங்கு வர நேர்ந்ததையே ஒரு பாக்கியமாகக் கருதி அல்லவா ஓடி வந்தாள்? அவளை வாசலில் கண்டும் வரவேற்காத குழலியின் இல்லத்துக்குள் சென்றுகூட, குசலம் விசாரித்து விட்டு வந்தாளே!

சீலியா உடைகூட மாற்றிக்கொள்ளவில்லை. வந்த ஒரே நாளில் தன் நிம்மதி கொஞ்சம் பறிபோன உணர்வோடு மனிதத் துணைக்குப் பதிலாக, தான் கொணர்ந்திருந்த பாட்டரி ரேடியோவை இயக்கினாள்.

பிரதமர் நேரு அவர்களின் குரல் ஒலித்தது. பேச்சின் கம்பீர ஈர்ப்பும், வேண்டுகோளின் தாத்பரியமும், மக்களுக்குச் செய்தியை வேண்டுகோளாக விதியோதிக்கும் கனிவான தோரணையும் தேசத்தின் உண்மையான நிலையைப் படம் பிடித்துக் காட்டும் சாமர்த்தியமும் சீலியாவின் மனத்தை ஈர்த்தன. 'ஜெய் ஹிந்த்' என்று முழங்கி முடித்த குரல் சீலியாவின் உள்ளத்தில் புதிய எழுச்சியை ஊட்டியது. **(தொடரும்)**

இந்தப் பாலிசி உனக்காக!



என்டௌமென்ட் அஷ்யூரன்ஸ் பாலிசி, ஒருவருடைய ஓய்வுகாலம் நிம்மதியாகக் கழிய வழிவகை செய்கிறது.

எடுத்துக்காட்டாக, 25-வது வயதில் எடுக்கப்படும் இந்தப் பாலிசி, 30-வது ஆண்டின் இறுதியில் அதாவது நீங்கள் ஓய்வுபெறும் தருணத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத் தினருக்கும் ரூ. 5,000த்திற்கு (போனசுகளுடன் சேர்த்து) வகை செய்கிறது. இப்பாலிசிக்கென, நீங்கள் பிரீமியமாகச் செலுத்து வது ஒரு சிறு தொகையான ரூபாய் பதினைந்தே!

ஒன்று உறுதி. உங்களையே நம்பி வாழ்வோரை, உங்கள் ஆயுள் இன்சூரன்சு நிச்சயம் காப்பாற்றும் —நீங்கள் இல்லாது போயினும். எனவே, ஆயுள் இன்சூரன்சு அளிக்கும் ஈடிணையற்ற அனுகூலங்களைப் பெற்றுப் பயனடைக.



உங்கள் எல்.ஐ.சி. முகவரை (ஏஜென்ட்) இன்றே சந்தியுங்கள். உங்களுடைய உற்ற நண்பர் அவர். உங்களுக்கு உதவவே பயிற்சி பெற்றுள்ளார்.

ஆயுள் இன்சூரன்சுபோல ஆதரவு தருவது எதுவுமே இல்லை



அத்தை மகன் ரத்தினமே

கே. பி. நீலமணி

விடுமுறைக்கு வந்த லதாவுக்கு வீட்டில் இப்படியோர் அதிர்ச்சி காத்திருக்குமென்று அவள் கனவுகூடக் காணவில்லை. வருகிற ஆவணியிலேயே அவளுக்குத் திருமணமாம். மாப்பிள்ளைகூடப் பார்த்தாயிற்றும். இதை விடப் பெரிய இடியே தன் தலையில் விழுந்திருக்கலாம் போல்தான் அவளுக்குத் தோன்றியது.

தாக்குண்ட புலியைப் போல், தன்னுடைய மாடி அறைக்குள்ளேயே இப்படியும் அப்படியுமாக நடந்து கொண்டிருந்த லதா திடீரென்று, ''முனியா!'' என்று உரக்கக் கத்தினாள்.

வீட்டிலே வேறு யாருமில்லை. கீழே வேலையாயிருந்த முனியன், வாசற் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு நாலே எட்டில் மாடியைப் பிடித்துச் சின்ன எஜமானி முன் பவ்யமாக வந்து நின்றான்.

''எனக்குக் கலியாணமின்னு உனக்கு முன்னுடியே தெரியுமில்லையா?''

''நல்லாத் தெரியுங்களே. நான்தானே நாலுவாட்டி வண்டி கட்டிக்கிட்டுப் போயி, சம்பந்தி ஐயாவை நம்ம வீட்டுக்கு அழைத்து வந்தேன்.''

''ஷட் அப்.... சம்பந்தி ஐயாவாம், சம்பந்தி ஐயா! யாருக்கு யார் சம்பந்தி? கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு. இந்தக் கல்யாணம் யாருக்கு?''

முனியன் மனத்துக்குள்ளேயே இடிஇடியென்று சிரித்துக் கொண்டான். 'ஐயோ, இந்தப் பாப்பா இன்னும் பச்சைப் பிள்ளையாகவே இருக்குதே. இந்த வயசிலே ஒவ்வொரு பொண்ணும் என்ன போடு போடுது!'

''ஏ, செவிட்டு முனியா, உன்னைத்தான் கேட்கிறேன். காதிலே விழலியா? யாருக்கு இந்த வீட்டிலே கலியாணம்னு கேட்கிறேன்.''

''போ, பாப்பா! இன்னும் பச்சைப் புள்ளையாட்டம். எஜமானுக்கு உங்களைத் தவிர இன்னும் பத்துப் பொண்ணு இருக்கு கட்டிக் கொடுக்க?''

''அதனாலேதான் கேட்கிறேன். இந்தக் கல்யாணத்தைப் பத்தி என்னை ஒரு வார்த்தை கேட்காமலே எப்படி நிச்சயம் பண்ணலாம்னு?''

''நல்ல மனுஷங்களா, பெரிய இடமா வந்துதேன்னு ஐயா யோசிச்சிருக்காரு. மேலும் அப்பா வார்த்தையை நீங்க தட்ட மாட்டீங்கன்னு உங்க மேலே அவ்வளவு நம்பிக்கை. ஆ .... பாப்பம்மா மாப்பிள்ளையை நீங்க பார்த்தா அப்படியே ஜன் ஆயிடுவீங்க ஆமா.....!''

''நான்சென்ஸ்... உன்னை இப்பவே 'க்ரீம்' பண்ணி மாடியிலேயிருந்து எறிஞ்சிடப் போறேன். என் முன்னாலே நிற்கவேண்டாம். போயிடு.''

முனியன் தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்து வாயில் திணித்துக் கொண்டு சிரித்தபடி கீழே இறங்கினான்.

கட்டிலில் குப்புறப் படுத்திருந்த லதாவின் விழிகள் வடித்துக் கொண்டிருந்த கண்ணீரை வஞ்சனையின்றி 'ஃபோம்' மெத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது.

அரை மணி நேர அவகாசம் அவளது மனத்துக்கு ஆறுதல் அளிக்காவிட்டாலும், கண்ணீருக்கு முற்றுப்புள்ளி வைத்தது. எதிரே இருந்த சுவரின்மீது தற்செயலாகப் பார்வை சென்று மோதியபோது 'அம்மா!' என்று தன்னையும் அறியாமல் அவளது உதடுகள் முணுமுணுத்தன. அம்மா இருந்தால் இப்படி நடக்குமா?

ஐந்து வயதிலே அவளை விட்டுச் சென்ற அன்னையோடு பழகிய அடிநாட்கள் அவளுக்கு நினைவில்லை. ஆனால் தனக்குத் தாயார் இல்லாத குறையே எழ இடமில்லாமல், அத்தனை சீரும் சிறப்புமாக வளர்த்து ஆளாக்கிய தந்தையை — தந்தையின் பாசத்தை அவளால் புறக்கணிக்க முடியவில்லையே!

லதாவைப் பெண்ணுக்குப் பெண்ணாகவும், ஆணுக்கு ஆணாகவும் அத்தனை செல்லமும் சுதந்திரமும் கொடுத்தே கோபாலசாமி



ராமாயணப் பிரவசனம் செய்தவர், அதை ஏற்பாடு செய்தவர் வீட்டில் இரவு படுத்தார். மறுநாள் காலை வீட்டுக்காரர், "இரவு முழுதும் எனக்குத் தூக்கமில்லை. உங்கள் குறட்டையைத்தான் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்றார்.

"என் பிரவசனத்தைக் கேட்டால் போதாதா? நான் விடுகிற குறட்டையையுமா சிரத்தையாகக் கேட்கணும்?" என்றார் சாஸ்திரிகள்.

ஆளாக்கினார். அந்தக் கிராமத்திலேயே நல்ல செல்வாக்கும் மதிப்பும் உடைய பணக்காரரான கோபாலசாமி சற்று முற்போக்கான எண்ணமும் கொண்டவர். இல்லாவிட்டால் அந்தக் கிராமத்திலேயே புதுமையாய், அது வரையில் யாரும் செய்யாத காரியமாய், லதாவை ஹைஸ்கூல் படிப்பு முடிந்ததும் மேற்கொண்டு கல்லூரிப் படிப்புக்காகப் பட்டணத்தில் ஒரு ஹாஸ்டலில் சேர்த்து விடுவாரா ?

ஆனால் பட்டணத்து வாசம் தன் பெண்ணின் உள்ளத்தில், எத்தனை புதிய துணிச்சலை வளர்த்து விட்டது என்பதை அறிந்த போதுதான் கோபாலசாமியே பதறிப் போனார்.

ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் லதா, டவுனில் வசிக்கும் ஒன்றுவிட்ட அத்தை விசாலத்தின் வீட்டுக்கு ஒவ்வொரு வாராந்திர விடுமுறைக்கும் போய் வருவது வழக்கம். இந்தப் பழக்கம் கல்லூரியில் அவளுடன் படிக்கும் அத்தை மகன் ரத்தினத்தைச் சந்தித்த பிறகு ஏற்பட்டது.

கோபாலசாமியின் பெண், தன் பிள்ளை படிக்கும் கல்லூரியில்தான் படிக்கிறாள் என்று அறிந்ததும் எப்படியாவது மகனிடம் லதாவை வீட்டுக்கு அழைத்து வரும்படி வற்புறுத்தினாள் விசாலம். முதன்முறை ரத்தினத்துடன் லதா டவுனுக்குப் போனதும், அத்தை, விட்டுப் போன பழைய உறவை யெல்லாம் விவரமாக எடுத்து விளக்கி, இன்று லட்சாதிபதியாகக் கோபாலசாமி விளங்குவதற்கு ஆதியில் தானும் தனது காலஞ்சென்ற கணவரும் செய்த உதவிகளையெல்லாம் லதாவின் மனத்தில் பதியும்படி கூறினாள்.

எந்த நோக்கத்தின் அடிப்படையில் அத்தை இந்த உறவு விதைகளைத் தூவினாளோ அந்த எண்ணம் லதாவின் உள்ளத்தில் நன்றாக வேர்விட்டுத் துளிர்த்து விட்டது என்பதை அறிந்து அத்தை மகிழ்ந்து போனாள். லதாவை மருமகளாக அடைவதன் மூலம் கோபாலசாமி தன் இரண்டை ஆஸ்தி முழுதும் தன் பிள்ளைக்குக் கிடைத்து விடும் என்பது அத்தையின் அந்தரங்கமான விருப்பம்.

விசாலத்தின் இத்தகைய கிழ்த்தரமான எண்ணங்களையும், பேராசையையும் கண்டு மனம் வெறுத்துத்தான் கோபாலசாமி, தமக்கு இப்படியொரு தங்கை இருக்கிறாள் என்கிற உறவை அடிநாட்களிலேயே கத்திரித்துக் கொண்டு விட்டார். ஆனால் இப்போது—

கல்லூரியில் படிக்கும் லதா, ஹாஸ்டலிலேயே அடைந்து கிடக்காமல், கோபாலசாமி மறைக்க அல்லது மறக்க விரும்பிய அத்தை உறவைத் தேடிப் பிடித்துக் கொண்டதோடு, அவள் மகன் ரத்தினத்தையே மணந்து கொள்ளவும் விரும்புகிறாள் என்று அறிந்தபோது கோபாலசாமியால் எப்படி அதிர்ச்சியடையாமல் இருக்க முடியும்?

"'நூலைப் போல் சேலை' என்பார்கள் ; விசாலத்தின் வயிற்றில் பிறந்த பிள்ளை உத்தமனாக இருக்க முடியாது. அவன் உன்னைக் காதலிக்கவில்லை. உன்னைச் சூழ்ந்துள்ள சுகபோகங்களை, இந்தச் சொத்துக்களைத்தான் நேசிக்கிறான். அவன் உறவு உனக்கு வேண்டாம்" என்று எவ்வளவோ எடுத்துக் கூறினார். ஆனால் லதாவின் மனம் ரத்தினத்தின் திசையிலிருந்து திரும்ப மறுத்தது.


அப்பாவின் நோக்குப்படி, அத்தை வேண்டுமானால் பொல்லாதவளாக இருக்கலாம். ஆனால் அதற்காகப் பழமொழியைப் பிடித்துக் கொண்டு ரத்தினத்தைக் குறை கூறுவது லதாவுக்குப் பிடிக்கவில்லை. மேலும் அத்தனை ஆழமாக நேசித்த அவனை அவளால் எளிதில் மறக்க இயலவில்லை

ஆனால் அதற்காக—

அத்தனை அருமையாக வளர்த்த தம் ஒரே மகளின் வாழ்க்கையை, அவளுடைய அனுபவமற்ற அறியாத்தனத்துக்குப் பலியாக்கிப் பாழாக்க கோபாலசாமி தயாராக இல்லை.

விடுமுறைக்கு வந்த லதாவுக்கு, 'இத்துடன் தன்னுடைய கல்லூரிப் படிப்புக்கும் நீண்ட விடுமுறை' என்கிற செய்தியோடு தனது திருமணத்துக்கும் அப்பா ஏற்பாடு செய்து விட்டார் என்பது அதிர்ச்சி தரும் விஷயமல்லவா ?

அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்ட லதா தீவிரமானதோர் அவசர முடிவுக்கு வந்தாள். திருச்சிக்கு ஏதோ அவசர ஜோலியாகச் சென்றிருக்கும் தந்தை ஊர் திரும்புவதற்குள் வீட்டை விட்டு ஓடிப் போய்விட வேண்டும் என்பதுதான் அது. இல்லாவிட்டால் அப்பா எண்ணியபடியே காரியத்தை



சிரஞ்சீவி : ஆ. ஷண்முகம் L.E.E.க்கும்
செல்வி : கு. முத்தம்மாளுக்கும்

21-8-68 புதன்கிழமை யன்று தூத்துக்குடியில் திருவருள் துணையுடன் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. விழாவுக்கு விஜயம் செய்த அன்பர்களுக்கும் வாழ்த்துக்கள் அனுப்பிய அன்பர்களுக்கும் எங்களின் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ச. ஆறுமுகம் பிள்ளை
தூத்துக்குடி

ஆ. குருசுவாமி
ஓட்டப்பிடாரம்



ஒவல்டின்

புரதப் பொருள், வைட்டமின்கள், ஃபாஸ்பேட்டைடுகள், ஏடுகட்டிய புத்தம்புதிய பால், முதிர்ந்த பார்லி மால்ட் ஆகியவை வளப்பமாக அடங்கியது.

உடல்நலமும், வலிமையும், தென்பும் உருப்பெற இவை யாவும் உங்களுக்குத் தேவை



உடல்நலமும், வலிமையும், தென்பும் உருப்பெற உங்களுக்கு இன்றியமையாத எல்லா ஊட்டப்பொருள்களும் செறிந்தது ஒவல்டின். பாலுடன் ஒவல்டின் சேர்க்கும்போது, நீங்கள் சேர்ப்பது இன்சுவை மட்டுமல்ல —உடல்நலம், வலிமை, தென்பு.

அருந்துங்கள் இன்சுவைமிக்க **ஒவல்டின்**

இன்றும்.. நாளையும்... என்றும்!





ASP/JI/22 Tam

முடித்து விடுவார் என்பதில் லதாவுக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

'அதிகாலை எழும்பூர் வரும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் தவறாமல் என்னைச் சந்திக்கவும். மற்றவை நேரில்' என்று ரத்தினத்துக்குத் தந்தி அடித்துவிட்டு அன்று தன் தந்தைக்கும் நீண்டதொரு கடிதம் எழுதி வைத்துவிட்டு லதா புறப்பட்டு விட்டாள்.

ரத்தினம் ஸ்டேஷனுக்கு வந்து லதாவை வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அத்தையைக் கண்டதும் லதா கட்டிக் கொண்டு மடி மீது தலை சாய்த்து விம்மி விம்மி அழுதாள்.

''அவன் என்னிக்குமே இப்படிப் பிடிவாதக்காரன்தாண்டி, லதா. நெனைச்சதைச் செஞ்சு முடிச்சப்புட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான். ஆனால் ஏதோ நாலு எழுத்துப் படிச்சு நீயும் புத்திசாலிப் பெண்ணாக இருந்ததினாலே தப்பிச்சு வந்துட்டே. இனி ஒண்ணுக்கும் நீ கவலைப்படாதே. நான் பார்த்துக்கறேன்!'' என்று அத்தை ஆறுதல் கூறினாள்.

''இல்லேன்னாலும் சட்டப்படி லதா மேஜர் ஆனவள்; அவளை அவள் அப்பா கட்டாயப்படுத்த முடியாது அம்மா!'' என்று தனது சட்ட ஞானத்தை வெளிப்படுத்தினான் ரத்தினம்.

இரண்டு மூன்று நாட்கள் வரையில் அப்பா தேடி வந்து விடுவார், அல்லது அவசரத் தந்தியோ தபாலோ வரும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அப்படி ஏதும் நிகழவில்லை. கோபாலசாமி அலட்டிக் கொண்டதாகவே தெரியவில்லை.

''அவன் ஆதியிலிருந்தே இப்படித்தாண்டி மகா அழுத்தம். எல்லாம் உன் கழுத்திலே ரத்தினம் மூணு முடிச்சுப் போட்டுட்டான்னா அப்புறம் எல்லாம் தானே சரியாப் போய் விடும்'' என்று ஆறுதல் கூறிய அத்தை, துரிதமாக மகனுடைய திருமணத்துக்கான திட்டத்தையும் வகுத்தாள்.

லதா புறப்பட்டு வரும்போது தன்னுடைய அத்தனை நகைகளையும் அணிந்து கொண்டு கையிலும் ஒரு சிறு தொகையை ரொக்கமாக வைத்திருந்தாள். ஆனால் அதைப் பற்றியெல்லாம் அத்தை ஆர்வம் உள்ளவளாகவே காட்டிக் கொள்ளவில்லை. இப்போது இல்லாவிட்டால் நாளைக்குக் கோபாலசாமியின் இத்தனை சொத்தும் லதாவின் புருஷன் ரத்தினத்தின் காலடிக்கு வந்து சேர வேண்டியதுதானே என்பது அத்தையின் எண்ணம். ஆகவே, அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போகலாமா?

கல்யாணத்தைச் சிக்கனமாக, அதோடு விளம்பரமில்லாமல் திருநீர்மலையில் வைத்து நடத்திவிட வேண்டியது என்று புரோகிதரிடமிருந்து அதற்கான ஒரு நாளையும் பார்த்து வைத்து விட்டாள் அத்தை. ஆனால், அந்தப் புதன்கிழமையன்று அதிகாலையில்தான் ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது.

திருநீர் மலைக்கு புறப்பட எல்லோரும் ஆயத்தமாக இருந்தனர். அப்போது கையில் ஒரு தினசரியைப் பிரித்துக் கொண்டு கோபமாகவும், வேகமாகவும் உள்ளே வந்த ரத்தினம் முதல் பக்கத்திலிருந்த ஒரு பெரிய விளம்பரத்தை அம்மாவிடமும் லதாவிடமும் காண்பித்தான். அதில் கீழ்க்கண்ட வரிகள் இருந்தன:

அன்புள்ள லதாவுக்கு அப்பா:

''திடீரென்று நீ இப்படிக் காணாமல் போய்விடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஓடிப்போனவளைத் தேடிக் கண்டுபிடிக்கும் தெம்பு இப்போது எனக்கில்லை. வயோதிகத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நான், உன்னையும் உன் கணவனையும் அண்டி எஞ்சிய வாழ்நாளை ஓட்டிவிடலாம் என்று ஆறுதல் பெற்றிருந்தேன். ஆனால் எனக்குப் பிடிக்காத ஒருவனை மணந்து கொள்ளத் துணிந்து என்னை நிராதரவாக விட்டுப் பிரிந்து சென்று விட்டாய். ஆயினும், உயிருள்ளவரை நானும் வாழ்ந்தாக வேண்டுமே! அதற்கு என்னால் ஒரு பற்றுக்கோடு இல்லாமல் வாழ இயலாது. என்னுடைய பலவீனத்துக்கு வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்து ஓர் ஏழைப் பெண்ணை மணந்துகொண்டு விட்டேன். நானே சுயமாகச் சம்பாதித்த எனது இந்தச் சொத்துக்களில் என் மனைவியைத் தவிர வேறு ஒருவருக்கும் உரிமை இல்லை. நீ எங்கிருந்தாலும் நன்றாக வாழவேண்டும்.


இப்படிக்கு, கோபாலசாமி.''

''மகா பாவி!'' என்று பக்கத்தில் லதா இருப்பதை லட்சியம் செய்யாமல் வாயாறத்

அட்டைப்பட விளக்கம்:

குழந்தைப் பண்பு

தம்மை மிக அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்ளும் பெரியவர்களுக்கும் கூட பல சமயங்களில் குழந்தைகள் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றார்கள். நம்மிடைத் தோன்றும் மொழி, மத, இன, நிற, ராஜ்ய வேறுபாடுகள் குழந்தைகளுக்கிடையே தலைகாட்டுவதில்லை. ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரிகிறதோ இல்லையோ, எப்படியோ அவர்கள் சேர்ந்து விளையாடுகிறார்கள். தங்களுக்குள் கதை சொல்லிக் கொள்கிறார்கள். கடைசியில் இணைபிரியா நண்பர்களாகி விடுகிறார்கள். அட்டைப் படத்தில் காணும் இரு குழந்தைகளும் (ஜெயஸ்ரீ, அருணா) அவ்வாறே வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறு மொழி பேசுபவர்கள். ஆனாலும் சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே பிரிக்க முடியாதபடி இணைசேர்ந்து விட்டார்கள். ஒரே மாதிரி உடை, ஒன்றாகவே சாப்பாடு, ஒன்றாகவே விளையாட்டு! எந்த வித்தியாசமும் அவர்களின் நட்பைப் பாதிக்கவில்லை. பெரியவர்களான நாமும் குழந்தைகளைப்போல் இந்த உயரிய பண்பைக் கடைப்பிடிப்போமேயானால், இன்று உலகெங்கும் காணும் பூசல்கள் தாமே மறைந்துவிடுமல்லவா?-வண்ணப்படம்: கோமளாவரதன்



''ஏன் இப்படி இரண்டு பேருமே துக்கமா உட்கார்ந்திருக்கா ?''

''முதல்வன் 'இந்த உலகத்திலே எல்லோருமே அயோக்கியர் என்று நினைத்துக் கெட்டுப் போனவன். மற்றவன் எல்லோருமே நல்லவர் என்று நம்பிக் கெட்டுப்போனவன் !''

திட்டிய அத்தை, ''இந்த வயசிலே இவனுக்கு இப்படியோர் ஆசையா ! நாசமாப் போகட்டும்னு பெத்த பொண்ணுக்குச் சல்லிக் காசில்லாமல் அவளை நடுத் தெருவிலே நிறுத்திப்பிட்டு, 'எங்கேயிருந்தாலும் நன்ருக வாழணும்'னு பத்திரிகையிலே ஆசீர்வாதம் வேறே பண்ணுறன் பாவி!'' என்று பேப்பரைச் சுருட்டி லதாவின் பக்கம் வீசி எறிந்தாள்.

''இந்தக் கிழவனுக்கு எவ்வளவு கெட்ட எண்ணம் பார்த்தியா அம்மா ?'' என்று தன் பங்கு ஆத்திரத்தையும் கொட்டிய ரத்தினத்தை அத்தை அடக்கினுள்.

''கெட்ட எண்ணமோ நல்ல எண்ணமோ அவன் பொண்ணு. அவன் நாலு விதமாகவும் நடத்துவான். ஏண்டா, ரத்தினம், இந்தக் கல்யாணத்துக்காக உன் மாமாவோட விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ளப் போகிறயா? உனக்கு வேறே பெண்ணு கிடைக்க மாட்டாள்!'' என்று அத்தை கூறி முடிக்கு முன்னர், ''நானும் அதைத்தான் அம்மா தீவிரமா யோசித்துக்கொண்டு இருக்கேன். பாவம், மாமா!''' என்று தாயாரின் வாக்கை ஆமோதித்துத் திருநீர்மலைப் பயணத்தையே நிறுத்திவிட்டு, எங்கோ நண்பனைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றுவிட்டான் ரத்தினம்.

உலகில் தான் ஓர் அனுதையாகிவிட்டதை இப்போதுதான் முதன் முதலாக உணர்ந்தவள் போல் லதா அத்தையின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள். ஆனல் அத்தையின் கரங்கள் மெல்ல அவளது பிடியிலிருந்து நழுவிச் சென்று விட்டன.

உள்ளங்கை நெல்லிக்கனி போல் அவர்களுடைய எண்ணங்கள் அவளுக்குப் புரிந்தது. ரத்தினத்தின் காதல், தன் உடல் மீது கூட அல்ல — தனது சொத்தின்மீது மட்டுமே — என்பதை அப்பா எவ்வளவு நிர்க்கமாய் அநுபவத்திலிருந்து அறிந்து வைத்திருக்கிறர் என்பதை எண்ணி லதாவால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இரவு வண்டிக்குப் புறப்படுவதற்காக லதா தன்னுடைய சாமான்களைப் பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அத்தையும் ரத்தினமும் கவனிக்காததுபோல் இருந்தனர்.

''இதுதான் உங்கள் காதலா ?'' என்று கேட்கத் துடித்த நாக்கை அடக்கிக்கொண்டு லதா வெளியேறியபோது குறுக்கே நின்று அத்தையோ, ரத்தினமோ தடுக்கவில்லை !

காலையில் ஊர் வந்து இறங்கியபோது ரயில்வே ஸ்டேஷனில் லதாவுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அது —

அவளுக்காக அப்பா ஸ்டேஷனுக்கு வண்டியோடு வந்திருந்தார்.

''உன் கடிதப்படியே விளம்பரம் கொடுத்திருந்தேனே சரியா இருந்ததா ?'' என்று சிரித்துக் கொண்டே கேட்ட தந்தையிடம், ''அதிருக்கட்டும். அந்த விளம்பரத்தைப் பார்த்ததும், அத்தையும் ரத்தினமும் இப்படித்தான் நடந்து கொள்ளுவார்கள். நான் உடனே புறப்பட்டு வந்து சேருவேன்னு வண்டியையும் கட்டிண்டு கரெக்டா வந்து நிற்கிறீர்களே! பணத்துக்கு ஆசைப்படாமெ என்னை அத்தை எத்துண்டுடலாம்னு உங்களுக்குச் சந்தேகம்கூட ஏற்படலியா அப்பா?'' என்று லதா ஆச்சரியத்துடன் கேட்டதும், தலையிலே கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்து வாயிலே திணித்துக் கொண்டு இடி இடியென்று சிரித்த முனியன், ''இன்னும் நம்ப பாப்பா பச்சைப் பிள்ளையாவே இருக்கே; இந்த வயசிலே ஒவ்வொரு பொண்ணும் என்ன போடு போடுது !..... எஜமானனுக்கு எவ்வளவு வருஷம் அனுபவம் ; ஒவ்வொருத்தரையும் பார்க்கிறபோதே இவன் இப்படி இருப்பான், இன்னது நினைக்கிறன்னு கரெக்டாச் சொல்லிப்பிடமாட்டாங்களா ?'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்தி விட்டான்.

''அப்பா! நம்ப முனியனுக்கு இப்ப சம்பளம் ஏதாவது ஒசத்தியிருக்கேளா ?'' என்ற ஆச்சரியத்துடன் கேட்ட லதாவிடம், ''ஏன் அம்மா ?'' என்றர் கோபாலசாமி ஒன்றும் புரியாமல்.

''இல்லே! இப்படி ஒரேயடியா உங்களைக் காக்காய் பிடிக்கிறனேன்னு கேட்டேன்'' என்று கூறிய லதா சிரித்தாள். வண்டி மாடும் அந்தச் சிரிப்பொலிக்குப் பின்னணி இசைவதுபோல் சலங்கையைக் குலுக்கிக் கொண்டு வேகமாக ஓடியது.

இலட்சிய மனைவி

குடும்பப் பிரச்னை

ஓர் "இலட்சிய மனைவி" எப்படி நடந்து கொள்வாள்? புதுமை இலக்கியத்தில் சில இலட்சியக் கதாநாயகிகள். சோதனையான தருணங்களில் எப்படிச் சமயோசித புத்தியுடனும், சீரிய பண்பாட்டுடனும் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம்: ❋

பார்வதி அப்பொழுதுதான் (இரண்டாந்தாரமாக) கல்யாணம் செய்து கூட்டிக்கொண்டு வரப்பட்டிருக்கும் புதுப் பெண். என்றாலும் அவள் உடனே ஒரு நல்ல கிருஹஸ்தி யாகி விட்டாள். அன்று மாலை ஓர் அழகிய கம்பீரமான வாலிபன் வந்து பார்வதியை வணங்கிக் கொண்டு, "அம்மா! நான் உன் மூத்த குமாரன்" என்றான். அவனுக்கு வயது இருபது இருக்கும்.

பார்வதி கோமளக் குரலில், "வா, மகனே! வா! இப்படி உட்கார்!" என்றாள்.

"இரண்டு வருடங்களாகின்றன, நான் என் தாயாரைப் பறி கொடுத்து. இவ்விரண்டு வருஷங்களாக நாங்கள் துன்பத்தையும் துயரத்தையும் தவிர சுகமென்பதையே அறியோம். இன்றைக்கு நீ வந்திருக்கிறாயம்மா! நாங்கள் க்ஷேமமாயிருக்க வேண்டும் என்று ஆசீர்வதி!" என்று மகேந்திரன் வேண்டிக் கொண்டான்.

பார்வதி வெகு மிருதுவாகவும் அன்பாகவும் பேசினாள். ஏனெனில், என்றைக்கு அவளொரு கிருஹஸ்தியாகி விட்டாளோ, அன்றைக்கே அதற்குரிய லட்சணங்களோடு நடந்து கொள்ள வேண்டுமல்லவா? சகலமும் அறிந்தவளும், சகலமும் தெரிந்தவளாய்ப் பேசவும் கூடியவள்தான் நல்ல கிருஹஸ்தியாய் இருக்க முடியும். பார்வதியோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு இத்தியாதி விவகாரங்களில் அவள் தனது வயதுக்கு மீறிய பரிபக்குவமுடையவள் என்பது தெரிந்திருக்கும். இதைத் தவிர வெறுமனே வெட்கப்படுவதும், நாணிக் கோணிக் கொள்வதும் அவள் சுபாவத்திலேயே கிடையாது. அவள் கணவர் புவன சௌந்தரி தம் ஜமீன் நிர்வாகத்தைத் தாமே நேரில் மேற்பார்த்து வந்தார். சூர்யோதயம் முதல் இரவு பத்துப்பதினொரு மணி வரையில் அவருக்கு வேலை இருந்துகொண்டே இருக்கும். பார்வதியைப் பார்த்து "நீதான் இந்த வீட்டின் சொந்தக்காரி. நீயே எல்லாவற்றையும் பார்த்துத் தெரிந்து கொண்டு குடும்பத்தை நடத்து!" என்று கூறுவார். (அந்த அளவுக்கு, இல் வாழ்க்கையின் தொடக்கத்திலேயே தன் கணவனின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டாள் பார்வதி. தான் மறுமணம் செய்து கொண்டதில் மகள் யசோதைக்கு விருப்பமில்லை என்பதை அறிந்திருந்தார், புவன சௌந்தரி. மூத்த மகன் மகேந்திரனை அனுப்பி யசோதையை வரச் செய்கிறாள், பார்வதி.)







★ லா. ச. ராமாமிர்தம்

★ மாயூரம் வேதநாயகம் பிள்ளை

★ பேராசிரியர் கல்கி

அன்று பார்வதி நகை காய்த்த பூங்கொடிபோல் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். புத்தம் புதிய விலை மதிக்கக் கூடாத ஆபரணங்களைத் தரித்துக் கொண்டு அவள் இந்திராணிபோல் வீற்றிருந்ததை எட்ட வரும்போதே கண்ட யசோதையின் மனசுக்குள்ளிருந்த துவேஷம் மூண்டது. மனத்துக்குள் சபித்தவாறு பார்வதியை அணுகினாள். பார்வதி யசோதையை அழைத்துக்கொண்டு போய் ஒரு ரத்தினக் கம்பளத்தில் உட்காரவைத்துத் தானும் அமர்ந்து கையிலிருந்த

விசிறியால் யசோதைக்கு விசிறிக்கொண்டே ''ஏனம்மா, யசோதா! உனக்கு உன் அம்மா மீது கோபமா?'' என்று கேட்டாள். யசோதை நாணத்தால் முகம் சிவந்தாள். பார்வதி தான் அணிந்திருந்த நகைகளை யெல்லாம் ஒன்று விடாமல் கழற்றி யசோதைக்குப் பூட்டி விட்டாள். யசோதைக்கு வியப்புத் தாளவில்லை.

''உன் அம்மாவின் சீதனம்'' என்றாள் பார்வதி. (''உன் அம்மா'' என்று தன்னைப் பற்றிப் பார்வதி கூறியதுமே யசோதையின் உள்ளத்திலிருந்த துவேஷம் மறைந்து விடுகிறது.)

மறு நாள் மகேந்திரன் யசோதையிடம், ''உன் கோபம்கொஞ்சமாவது குறைந்ததா?'' என்று கேட்டதும், தான் பார்வதியைப் பற்றி எண்ணியதும் பேசியதும் தவறு என்று மன்னிப்புக் கேட்கிறாள் யசோதை. ''ஏனண்ணா! மாற்றாந் தாயார்கள்கூட இவ்வளவு அன்பும் ஆதரவுமாயிருப்பதுண்டா என்ன?'' என்று வியப்பும் வாஞ்சையும் மேலிடக் கேட்கும் அளவுக்குப் பார்வதியின் பண்பு பரிமளிக்கிறது.

[சரத்சந்திர சட்டர்ஜியின் 'தேவதாஸ்' என்ற நவீனத்திலிருந்து.]

ஃ ஃ ஃ

ஞானம்பாளுக்கும் பிரதாபமுதலியாருக்கும் திருமணம் நிகழ்ந்தபின் அவள் கணவனின் வீட்டுக்கு வந்து, கணவன், மாமியார் ஆகியோருக்கான பணிவிடைகளை யெல்லாம் தானே கவனித்துச் செய்து வரத் தொடங்கினாள். ''என் தாயாரும் ஞானம்பாளும் தாயும் மகளும் போல் அதிக நேசமும் பிரியமுமாக ஒத்து வாழ்ந்தார்கள்'' என்று பிரதாப முதலியாரே குறிப்பிடுகிறார்.

''இதற்குமுன் நீ வேலை செய்ததை நான் ஒரு நாளும் பார்த்ததில்லையே? இப்போது இந்த வேலைகளையெல்லாம் எப்படிக் கற்றுக் கொண்டாய்?'' என்று நான் (பிரதாப முதலியார்) கேட்க, அவள், ''பறவைகளுக்குப் பறக்கவும், மீன்களுக்கு நீந்தவும் யார் கற்பித்தார்கள்? அப்படியே நானும் வேலை செய்யப் பயின்றேன்'' என்றாள்.

தன் மனைவி ஞானம்பாளின் நற்பண்புகள், பழக்க வழக்கங்கள் குறித்துப் பிரதாப முதலியாருக்கு அளவிறந்த மதிப்புண்டு. அவர் கூறுகிறார்: ''எங்கள் ஆசிரியரிடத்தில் நான் பல புத்திமதிகளைக் கற்றுக் கொண்டேன். அதுபோலவே என் தாயாரிடத்திலும் ஞானம்பாளிடத்திலும் அநேக நற்குணங்களைக் கற்றுக் கொண்டேன். ஒரு நாள் என் முகத்தைக் கடுகடுத்துக்கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டு என் வேலைக்காரனைக் கோபித்தேன். பக்கத்தில் இருந்த ஞானம்பாள் ஒன்றும் பேசாமல் எழுந்து போய் விட்டாள். பிறகு அவளை நான் கண்டு, ''ஏன் போய் விட்டாய்?'' என்று கேட்க, ''உங்களுக்குக் கோபம் வரும்போது உங்களைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் கோப முகத்தோடு கண்ணாடியைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும்!'' என்று சொன்னாள். நான் தனிமையாகப் போய்க் கோப முகத்துடனே கண்ணாடியைப் பார்த்தேன். அப்போதிருந்த கொடுமை எனக்கே சகிக்காமல் அன்று முதல் கோபத்துக்கு விடைகொடுத்து விட்டேன். ஞானம்பாள் எனக்கு இளையவளாயிருந்தாலும் அவளுடைய விநய காம்பீரியம், நாகரிகம், சீலம் இவற்றால் அவளிடத்தில் பெரிய மரியாதை எனக்குத் தெரியாமலே உண்டானது.

ஃ ஃ ஃ

அவளுக்கு முகஸ்துதி பிடிக்காது. ஒரு நாள் நான் அவள் முகத்தைச் சந்திரன் போன்றதென்று புகழ்ந்த போது அவள், ''சந்திரனுக்குச் சொந்த ஒளியில்லை; சூரியனுடைய ஒளியினால் சந்திரன் சிறப்படைந்து விளங்குகிறது என்று நாம் நூல்களில் படித்திருக்கிறோம். அப்படியே மனிதர்களுடைய வடிவெல்லாம் சூரியனாகிய கடவுளிடத்திலிருந்து உண்டாவதால், அவரே தோத்திரத்துக்குப் பாத்திரர்'' என்று சொல்லிவிட்டு அப்பாற் போய் விட்டாள். அன்று முதல் அவளைப் புகழ்ச்சியாகப் பேசுகிறதில்லை என்று உறுதி செய்து கொண்டேன்.

ஞானம்பாளுக்கும் பிரதாப முதலியாருக்கும் திருமணம் நிறைவேறிய பின்பும் தம் அருமை மகளையும் மருமகனையும் தம்மிடமே வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார் ஞானம்பாளின் தகப்பனார். பிரதாப முதலியாரும் பெற்றோர்க்கு ஒரே பிள்ளை. மகனையும் மருமகளையும் சம்பந்தியின் வீட்டில் விட்டு வைக்கப் பிரதாப முதலியாரின் தந்தை இணங்குவாரா? இந்தக் கட்டத்தில் ஞானம்பாளின் தகப்பனார் தம் மகளிடம் கேட்கிறார்:

''உனக்கு நான் வேண்டுமா, உன் கணவன் வேண்டுமா?''

அதற்கு ஞானம்பாள் வெகு சாதுரியமாக, ''அப்பா! என் தாயாருக்குத் தன் மகன் வேண்டுமா, நீங்கள் வேண்டுமா?'' என்று திருப்பிக் கேட்கிறாள்.

[வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நூலிலிருந்து.]

ஃ ஃ ஃ

(தாக்ஷாயணியின் தங்கைக்குத் திருமணம் நிச்சயமாகி அவளுக்கு அழைப்பு வந்திருக்கிறது. தன் தந்தையிடம் கணவனுக்கு ஏற்பட்டுள்ள மனக் கசப்பு இன்னும் நீங்கவில்லை என்பதை தாக்ஷாயணி மறக்கவில்லை. அவ்வமயம் அவன் கடுமையாக நோய்வாய்ப் பட்டு, உடல் மிகவும் இளைத்திருக்கிறான்)

''உங்களுக்கு இன்று மனம் சரியில்லையல்லவா?'' என்கிறாள் தாக்ஷாயணி.

அவன் முகம் இலேசான பச்சையாய் மாறிற்று. ''உனக்கு ஏன் அப்படித் தோணணும்?''

''எனக்குத் தோணவில்லை. தெரியும். இன்று தபால்காரன் வந்து போனதிலிருந்து நீங்கள் சரியாயில்லை. என்னை என்ன என்று கூடக் கேட்கவில்லை. என்னோடு அப்புறம் சரியாய்ப் பேசக்கூட இல்லை.''

''பிறருக்கு வரும் கடிதத்தைப் பிரிப்பதோ கேட்டு வாங்கிப் படிப்பதோ எனக்குப் பழக்கமில்லை.''

''அப்போது நான் பிறத்தியாரா ?''

அவன் பேசவில்லை.

''அப்போது உங்களுக்கு கடிதம் வந்தாலும் நான் என்ன என்று தெரிந்து கொள்ளக் கூடாதல்லவா ?''

''எனக்குக் கடிதம் போட யார் இருக்கிறார்கள் ? இனி எனக்கு வர வேண்டிய ஓலை ஒன்றுதான் பாக்கி. அது வந்தாலும் அதற்குப் பதில் போட முடியாது. நானே மெய்ப்பியாக வேண்டும்.''

''சரி, சரி; உங்களோடு பேசினால் மூச்சு விடாமல் இப்படித்தான் தர்க்கம் செய்வீர்கள்.' வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் நாக்கில் நரம்பு இல்லாமல் வெடுக்கென அச்சானியமாய் ஏதாவது சொல்வீர்கள். உங்கள் உடம்பு இருக்கும் நிலைக்கு எனக்குத்தான் தாங்காது. நானே தணிந்து போகிறேன்.''

''நான் கிருதார்த்தனானேன். என் அகமுடையாள் எனக்குத் தணிந்து போகிறாள். என் ஜன்மம் சாபல்யம் அடைந்தது.''

''எனக்கு வந்தது இதுதான். இந்தாருங்கள் !'' கடிதத்தை மடியிலிருந்து எடுத்து அவனிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பிரித்தான். கண்கள் வரி மேல் ஓடின. அது அச்சடித்த திருமண அழைப்பு.

(மனைவியுடன் பேசிக் கொண்டேயிருந்தவன் கையிலிருந்த பத்திரிகையை அலட்சியமாய் வீசினான். அது பறந்து சென்று ஜலத்தில் கிடந்த பாறாங்கல் மேல் விழுந்தது.)

''அதை ஏன் எறிந்தீர்கள்?'' மூண்டெழும் கோபத்தில் அவளுக்குக் கன்னங்கள் குறுகுறுத்தன.

'' ஏன் ? இதை வைத்துக் கொண்டு கல்யாணத்துக்கு நாம் போகப்போகிறோமா?''

''போகாவிட்டால் எறியணுமோ ?''— கோபக் கண்ணீர் கண்களை உறுத்தியது.

''தாக்ஷாயணி !''

அவன் மெதுவாகக் கூப்பிட்டது அவளுக்குக் காது கேட்கவில்லை. கிட்ட நெருங்கி முகத்து எதிரில் விரலைச் சொடுக்கினான்.

''...ம்...ம்?'' இடுக்கென விழித்துக் கொண்டாள்.

'' என்ன தபஸில் இறங்கி விட்டாய் ?''

''நான் தாக்ஷாயணி அல்லவா ? நீங்கள் பசுபதி.'' அவள் அப்படிச் சொன்னதுமே அவன் முகத்தில் குபுக்கெனக் குங்குமம் குழம்பிற்று. உடல் கிடுகிடென ஆடிற்று. கீழே விழாதபடி அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான். அவள் அவனை அப்படியே அணைத்துக் கொண்டாள். அவளுள் கிளர்ந்த தாய்மை தாங்க முடியாமல் வாய் குழறிற்று. புடவைத் தலைப்பால் நெற்றியை ஒற்றினாள்.



சரத்சந்திர சட்டர்ஜி

அப்பா! எவ்வளவு பலவீனமாய்ப் போய் விட்டார்! ஒன்றுமே தாங்க முடிவதில்லை. அவள் விழிகள் நிறைந்து கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

''ஏன் அழுகிறாய் ?''

அவளைக் கட்டிக் கொண்டு தேம்பினான்.

''தாக்ஷாயணி, ஏன் அழுகிறாய்''

''ஒரு நாள் இது மாதிரி உங்களை நான் இழந்து விடுவேனா ?''

''நம் பையன் இருக்கிறான்.''

''இருந்தால் என்ன ? உங்களுக்குப்பின் தான் அவன், எல்லாமுமே ! நமக்குப்பின்தான் அவன் வந்தான். ஆமாம், எல்லாமே உங்களுக்கு அப்புறந்தான். இது விஷயத்தில் அன்று எப்படியோ அப்படித்தான் எனக்கு இன்றும். நான் இருக்கும் வரையில் அப்படித்தான்.''

[லா.ச. ராமாமிர்தம் எழுதிய 'தாக்ஷாயணி' என்ற சிறு கதையிலிருந்து.]

ஃ ஃ ஃ

(செங்கோடன் செம்பவளவல்லியைக் காதலிக்கிறான். இடையில் பட்டணத்துப் பெண் பங்கஜம் அவன் வாழ்க்கையில் குறுக்கிடுகிறாள். எனினும் செங்கோடன் செம்பாவை மறந்து விடவில்லை. செம்பாவைத் தனக்குக் கலியாணம் செய்து தரும்படி செங்கோடன் மூன்று நாளைக்குள் தன்னை வந்து கேட்காவிட்டால் அவளுக்கு வேறு இடத்தில் திருமணம் நிச்சயம் செய்யப் போவதாக அவள் தந்தை கூறிவிட்டார். செம்பா இருட்டையும் பொருட்படுத்தாமல் செங்கோடனின் குடிசைக்கு வருகிறாள், அவனிடம் இச்செய்தியைக் கூறிவிட வேண்டும் என்ற துடிப்புடன். செம்பவளவல்லிக்கு அழுகையே வந்துவிடுகிறது. விம்முகிறாள்.)

செங்கோடன் அவளுடைய கன்னத்தைத் தூக்கிப் பிடித்துக் கண்ணீரைத் துடைத்தான். ''என்னதான் சமாசாரம்? சொல்! உன்னை உன் அப்பன் வீட்டை விட்டுத் துரத்தி விட்டானா ?''

செம்பா தேம்பிக் கொண்டே, ''அப்படிச் செய்தால்தான் பரவாயில்லையே ? என்னைக் கொன்று போட்டுவிட்டாலும் கவலையில்லை. ஆனால்.....'' என்று தயங்கினாள்.

''ஆனால் வேறு என்ன ? உன்னை எந்தப் பயல் கொள்ளத் துணிவான் ? உன் அப்பனேயிருந்தாலும் முடியாது. நீ எனக்குச் சொந்தமானவள்......''


''நீ இப்படித்தான் ரொம்ப நாட்களாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாய். பேசி என்ன பிரயோசனம் ?''


''பின்னே என்ன செய்யச் சொல்லுகிறாய்? நான்தான் 'இந்த வருஷம் கழியட்டும் ;

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன்ட் செய்யப்படுகிறது

அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறு எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாக உள்ளதோ அது உங்கள் உடலில் கலப்பதற்கு அவ்வளவுக் கவ்வளவு நேரமாகிறது. நீங்கள் வலியிலிருந்து நிவாரணம் பெறவும் அவ்வளவுக்கவ்வளவு காக்க வேண்டியிருக்கிறது.

மைக்ரோஃபைன்ட் ஆக இருப்பதனால் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன —எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளூ • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டைஅழற்சி • பல்வலி

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.

சாப்பிடும் அளவு:

வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி

A.G.33-49TM



புதிய

மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்து விடுகிறது.

நிகோலஸ் தயாரிப்பு

வெள்ளாமை வீட்டுக்கு வரட்டும்; உடனே கல்யாணம் வைத்துவிடலாம்' என்று சொன்னேனே ?''

''அதுவரையில் யார் காத்திருப்பார்கள்? இன்னும் மூன்று நாளைக்குள் நீ வந்து கல்யாணப் பேச்சை எடுக்காவிட்டால் அப்பா என்னை வேறு இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்துவிடப் போகிறார். மாப்பிள்ளைகூடப் பார்த்து விட்டார்.''

(அவ்விதமே அவன் செம்பாவின் வீட்டுக்குப் போய் அவள் தகப்பனிடம் முறைப்படி பெண் கேட்கிறான். அவரும் இசைகிறார். முகூர்த்தம் குறித்தாகி விட்டது.)

இந்தச் சமயத்தில் உள்ளேயிருந்து செம்பவளவல்லி அவசரமாக வந்தாள்.

''அப்பா! இவரிடம் ஒரு கேள்வி கேட்க வேணும். அதற்குச் சரியான பதில் சொன்னால்தான் கலியாணம் !''

''கேட்டுக் கொள்! நன்றாய்ச் சந்தேகமற என்னென்ன கேட்க வேணுமோ எல்லாவற்றையும் கேட்டுக் கொள் ! நீயும் இவனும் தானே ஆயுள் முழுதும் வாழ்க்கை நடத்த வேணும்?'' என்றார் பெரிய கவுண்டர். (செம்பாவின் தந்தை)

''சினிமாக் கொட்டகையில் ஒரு பெண் பிள்ளை இவரைக் கன்னத்தில் அடித்தது வாஸ்தவமா ?'' என்றாள். (பட்டணத்துப் பெண் பங்கஜத்தைக் குறிப்பிட்டுக் கேட்டாள் அவள்.)

செங்கோடன் தலை குனிந்தான்.

''ஏன் தலையைக் குனிந்து கொள்கிறாய் ? என் கேள்விக்குப் பதில் சொல்லப் போகிறாயா, இல்லையா ?''

''அது வாஸ்தவம்தான். அதற்கு என்ன செய்ய வேணும்?'' என்றான்.

''இவர் ஆண் பிள்ளைதானே ? பெண் பிள்ளை கன்னத்தில் அறைந்தால் இவர் ஏன் சும்மா வரவேணும்? திருப்பி நாலு அறை கொடுப்பதற்கென்ன ?''

''பெண்பிள்ளையாக இருந்தபடியால்தான் சும்மா விட்டு விட்டு வந்தேன். ஆண் பிள்ளையாயிருந்தால் அங்கேயே பொக்கையில் வைத்திருப்பேன்!''

''பெண்பிள்ளையாயிருந்தால் அதற்காகச் சும்மா விட்டுவிடுவதா ? அவள் தவடையில் இரண்டு அறை கொடுத்துவிட்டு வர வேணும். இல்லாவிட்டால்....''

''இல்லாவிட்டால்.....?''

''இல்லாவிட்டால் நான் போய் அவள் கன்னத்தில் நாலு அறை கொடுத்துவிட்டு வருவேன். அதற்குப் பிறகுதான் கலியாணம்!'' என்றாள் செம்பா.

(அதே செம்பா செங்கோடனை மணந்து கொண்ட பிறகு:)

'' செம்பா ! நான் இனிமேல் அடிக்கடி சினிமாவுக்குப் போகிறதென்று உத்தேசித்திருக்கிறேன். உன்னையும் அழைத்துப் போவேன் !'' என்றான் செங்கோடன்.

''நன்றாயிருக்கிறது! உங்களுக்குப் பைத்தியமா, என்ன? நாளைக்கு நமக்கு இரண்டு குஞ்சு குழந்தைகளைப் பழனி ஆண்டவன் கொடுக்க மாட்டானா ? அவர்களுக்கு ஏதாவது தேடி வைக்க வேண்டாமா? சினிமாவிலும் இனிமாவிலும் பணத்தைத் தொலைத்து விடலாம் என்று பார்க்கிறீர்களா?'' என்று கேட்டாள் செம்பா.

(திருமணத்துக்குமுன் செங்கோடனை சினிமா பார்க்கும்படி தூண்டியவள் இந்தச் செம்பாதான்! இன்று அவனுக்கு அவள் வாழ்க்கைத் துணைவியாகிவிட்ட நிலையில் எவ்வளவு பொறுப்புணர்ச்சியும் குடும்பப் பாசமும் அவளிடம் குடிபுகுந்துவிட்டன!)

''பணம் கிடக்கிறது....'' என்று செங்கோடன் அலட்சியமாகப் பேசியதும் அவள், ''அதெல்லாம் உதவாது! நான் உங்களைப் போகவிடமாட்டேன். சினிமாவிலே பார்க்கிற ராஜா — ராணியாக நாமே இருந்தால் போகிறது!'' என்றாள்.

[அமரர் கல்கியின் 'பொய்மான் கரடு' என்ற நவீனத்திலிருந்து.]



''என்ன! அரசியல்லே இறங்கிட்டாப்பிலே இருக்கு. தலைவனா இருக்கியா! இல்லே, தலைவனைப் பின்பற்றுகிறவனா இருக்கியா ?''

''பின்பற்றுகிறவர்கள் யாருமே இல்லாத தலைவனா இருக்கேன்!''

இலட்சியக் கதாநாயகிகள் நால்வரை இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு பழைய நகைச்சுவைத் துணுக்கை நேயர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

''அவன் நெடுநாட்களாக ஓர் இலட்சிய மனைவியைத் தேடிக் கொண்டிருந்தான்'' என்றான் ஒருவன்.

''கிடைத்தாளா ?'' என்றான் மற்றவன்.

''அப்படி ஒருத்தியைக் கண்டான். ஆனால் அவள் ஒரு லட்சியக் கணவனைத் தேடிக் கொண்டிருந்தாள்!'' என்றான் அவன்.

இல்வாழ்க்கை ஓர் இரட்டை மாட்டுவண்டி. வாழ்க்கை சிறப்பெய்த இருவருமே பரஸ்பரம் விட்டுக் கொடுப்பதும் தியாகம் செய்வதும் இன்றியமையாததல்லவா?

— பாணன்

பொன்னிவனத்துப் பூங்குயில்



கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 40

சிங்கம்தான்!

பாலுக்குச் சர்க்கரை போட்டது போல், பாட்டுக்குப் பக்கவாத்தியங்கள் அமைய வேண்டும். சர்க்கரை, பாலைச் சாப்பிட்டுவிடக் கூடாது. முன்பெல்லாம் பக்கவாத்தியக்காரர்கள் நல்ல பாட்டைத் தேடிக் கொண்டு வருவார்கள். திருஞான சம்பந்தரின் பாட்டுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் மகான் தாமே வலுவில் வந்து யாழ் இசைத்தார். குயிலியின் பாட்டுக்குக் கீர்த்திசிங்கனின் மத்தளம் வெகு நேர்த்தியாக அமைந்தது. நாச்சியார் கோயில் வெண்கலத்தைப் போல், குயிலியின் சாரீரத்தில் இயற்கையான கார்வை ஒன்று உண்டு. அது பிறரை மட்டுமல்ல, அவளையே மயங்க வைத்தது. ஒன்றரைக் கட்டை, இரண்டரைக் கட்டை என்று சங்கீதத்தை எரி துரும்போடு ஒப்பிடாமல் கணீர் என்று பாடும் அவள் குரலில் இயற்கையாகவே ஒரு சுருதி சுத்தமும் இணைந்திருந்தது. அதோடு கூடக் கீர்த்திசிங்கனின் தஞ்சாவூர் டேக்காவும் சேர்ந்தால் எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டுமா? சிங்கனின் மத்தள வாசிப்பே தனி ரகம். அவன் தலையாட்டாமல் வாசிப்பான். மாட்டை அடிக்கிறாற்போல் மத்தளத்தை அடிக்க மாட்டான். அதற்கு வயிறாரச் சாதம் போட்டு வலத் தலையைத் தடவிக் கொடுத்துத் தாய் குழந்தையின் வயிற்றை விரலால் தட்டிப் பார்க்கிறாற்போல் மெதுவாகத்தான் தட்டுவான். அவனுடைய அரைச் சாப்பு ஆயிரம் பொன் பெறும். முழுச் சாப்போ மூவுலகமும் பெறும். குரல் இனிமையை அவனுடைய குமுக்கிகள் அதிகப்படுத்தும். பட்டு கத்திரித்ததுபோல் பாட்டுக்குத் தேவையானதைத்தான் வாசிப்பான். மாடிப் படிகளில் உருண்டு உருண்டு விழுவதைப்போல், 'தடதட படபட' என்று தட்டி உருண்டு கொண்டே இடத்துக்கு வரமாட்டான். அநாயாசமாகக் குமுறிக் கொண்டே இடத்தில் வந்து நிற்பான். காலப் பிரமாணத்தையே கச்சேரி முழுதும் அமர்த்திக் கொண்டிருக்க மாட்டான். அவன் மத்தளத்தின் சொற்கள் மகாகவி காளிதாசனின் கவிதையைப்போல் சுருக்கமாகவும், கருத்து நிறைந்து உருக்கமாகவும் இருக்கும். மங்கையின் குரலில் வரும் பாட்டை, மத்தளமும் பாடுவது போன்ற மணியான வாசிப்பு. இவ்வாறு பாட்டும், பக்கவாத்தியமும் சேர்ந்து விட்டால் காகக்கா பஞ்சம்?



சுவாமிமலை அடிவாரத்தில் உள்ள மண்டபத்தில் குயிலி பாடிக் கொண்டிருந்தாள். பெருமாள் கோயிலிலே பிரசாதங்கள்

நன்றாக இருக்கும். ஆறுமுகப் பெருமான் சந்நிதியிலோ, பாட்டு அருவிப் பெருகும். முருகனை நினைந்து உருகிப் பாடினாள் குயிலி. கற்கட்டு மண்டபம் ஆதலால் மேளக்கட்டு அற்புதமாக இருந்தது. கீர்த்திசிங்கன் தன்னை மறந்து பாட்டில் லயித்து வாசித்துக் கொண்டிருந்தான். பாட்டு முடிந்தவுடன் 'கலகல' வென்று கரகோஷங்கள், வானதிர எழுந்தன. கூட்டத்தில் 'நீ முந்தி, நான் முந்தி' என்று சண்டைகூட வந்தது. ஓட அல்ல; பாடிய குயிலிக்குப் பணம் போடத்தான். ஒரு பெரிய தஞ்சாவூர்த் தாம்பாளம் நிறையச் சில்லறையைத் தூக்கி வந்தான் சின்னத்தம்பி.

''குயிலி! காசு மலைபோல் குவிஞ்சு போச்சு, இத பாரு!'' என்று ஆசையோடு தட்டைக் குயிலியின் முன் வைத்தான். குயிலி அந்தக் குவியலை ஒரு முறை பார்த்தாள். செப்புக் காசுகளும், வெள்ளிப் பணங்களும் நிறைந்த அந்தக் குவியலில் பற்பல இடங்களில் பருப்புத் தேங்காயில் முந்திரிப் பருப்பு வைத்தது போல் பல தங்கக் காசுகளும் இருந்தன. குயிலி தன் இரு கைகளாலும், அந்தக் காசுகளை மறுபடியும் ஒரு முறை கோபுரம் போல் குவித்து வைத்தாள். அதன் நடுவில் தன் வலது கையைக் குறுக்கே விரித்து, அரிவாளைப் போல் வைத்துச் சரி பாதியாக வெட்டிப் பங்கு போட்டாள்.

''சிங்கம், இந்தாய்யா, உன் பங்கு'' என்றாள். சிங்கன் சிரித்தான்.

''என்னய்யா, பணத்தை எடுத்துக் கன்னு சொன்னா பல்லைக் காட்டுறே?'' என்றாள் குயிலி குறும்பாக. இதற்குச் சிங்கன் இளைத்தவனா?

''பின்னே என்ன? பல்லைக் காட்டாமல் கண்ணையா காட்டுவாங்க?'' என்றான் அவன். குயிலிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''எங்கிட்டே வந்து கண்ணைக் காட்டினால் நம்ம பயக உன் கன்னத்தைப் கழட்டிப்புடுவாங்க. உஷார். எடுத்துக்கய்யா பணத்தை!'' இதற்கும் சிங்கன் சிரித்தான்.

''ஏனய்யா, மறுபடியும் சிரிக்கிறே? நீ சில்லறையைக் கண்ணாலேயே பார்த்ததில்லையா?''



பரம்பரை ஆண்டியாக இருந்தால் நான் பார்த்திருப்பேன். பஞ்சத்துக்கு ஆண்டிதானே நான்!'' என்றான் சிங்கன். அவன் கண்கள் அந்தக் காசின் பக்கம் செல்லவே மறுத்தன. குயிலியைப் பார்ப்பதில்தான் அந்தக் கண்கள் இன்பத்தைப் பெற்றனவே அன்றிப் பணக் குவியலைப் பார்க்கவே ஆசைப்படவில்லை.

''காசைப் பாருன்னு சொன்னால் என்னையே பார்க்கிறாயே, ஐயா!''

''பங்கு பிரிச்சால் ஒழுங்காப் பிரிக்கணும்.''

''அடி சிங்கனே! அப்படி வாய்யா வழிக்கு. நான் பிரிச்சதிலே என்ன தப்பு? சரி பாதி பிரிச்சேன். இந்த உலகத்திலேயே பக்கவாத்தியத்துக்குப் பாதி பங்கு கொடுக்கிற வித்துவான் நான் ஒருத்திதான் ஐயா!'' என்று கர்வத்துடன் கூறினாள் குயிலி.

''நீ கொடுத்ததைக் குற்றம் சொல்லவில்லை. ஆனால் பழத்தைக் கூறு போடுவது போல் பணத்தைக் கூறு போடலாமா? இருந்த தங்கக் காசெல்லாம் எனக்கு நீ பிரித்துக் கொடுத்த பங்கில் வந்து விட்டதே'' என்று மூன்று தங்கக் காசுகளைக் கையில் எடுத்துக் காட்டினான் சிங்கம்.

''அதனாலே என்ன இப்போ? அது உன் அதிருஷ்டம். நான் பிரிச்சால் பிரிச்சதுதான்'' என்றாள் பெருமிதக்காரி.

''அது நியாயமில்லையே!''

''என்னய்யா, நியாயம்? என்ன ராசாங்கத்தையா பிரிச்சுக்கறோம்?.... இன்னிக்கு உன் பங்கிலே நாலு காசு கூடினால் நாளைக்கு என் பங்கிலே வந்துட்டுப் போகுது'' என்று சொல்லிக் கொண்டே, ''உம், துண்டைப் பிடி'' என்றாள் குயிலி. சிங்கன் அவசரமாகத் தன் மேல் துண்டைத் தோளில் போட்டபடி விரித்தான். குயிலி காசை அதில் கொட்டினாள்.

'அடே, பிரதாபசிம்மா! அரசனின் மகனாகப் பிறந்து உன் தலையெழுத்து இப்படி ஒரு பெண்ணிடம் பிச்சை வாங்கும்படி ஆயிற்றே?' என்று கீர்த்தி சிங்கனை அவர் மனச்சாட்சி கேட்டது. காசைக் கொட்டிய குயிலி பையன்களோடு விருட்டென்று நடந்தாள். சிங்கன் இதைப் பார்த்துவிட்டு, ''ஏய், ஏய்!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அவள் பின்னால் ஓடினான்.

''என் பேரு ஏய் இல்லே. நான் ஏய்க்கவும் மாட்டேன். என் பேரு குயிலி'' என்று சொல்லிக் கொண்டே குயிலி நின்றாள்.

''நான் உன்னைப் பேர் சொல்லிக் கூப்பிடலாமா?''

பின்னே பேரு எதுக்காக வைக்கிறது?'' என்று அவனை ஒரு பார்வை பார்த்தாள் அவள். பாவையின் பேச்சில் வந்த கேள்வியைக் காட்டிலும், அவள் பார்வையே அவனைப் பல கேள்விகள் கேட்டன. இளவரசரின் உள்ளம் மெழுகு போல் இளகியது. வள்ளியம்மைக்கு முன் வேட்டுவன் வேடத்தில் வந்த முருகனைப் போல் பிரதாப சிம்மரும் அவள் பேச்சில் மயங்கினார். பார்வையில் மயங்கினார். குரலில் மயங்கினார். அப்படியே மரம் போல் நின்றார்.

''என்னய்யா மரம் மாதிரி நிக்கறே?'' என்றாள் அவள்.

''மலைமேலே இருக்கிறவனைக் கேளு'' என்று கையை உயர்த்திக் காட்டினான் அவன்.


''அவரு மானைத் தேடி வந்தாரு. மங்கை அழகைக் கண்டாரு. மரத்தைப் போல் நின்னாரு. நீ ஏனய்யா நிக்கிறே?'' என்று மேலும் கேட்டாள் குயிலி.

'நான் மானைத் தேடி வரவில்லை. உன்னைத் தேடித்தான் வந்தேன். நீ ஓடுவதில் மானையும், ஆடி நடிப்பதில் மயிலையும், உன் குரலில் குயிலையும் கண்டேன். மையல் கொண்டு விட்டேன். மரமாகி நிற்கிறேன்' என்று பிரதாப சிம்மர் சொல்லி விடுவாரா? அரசனாயிற்றே? ஏழையும் ஏழையும் காதலிக்கலாம். ஏணியின் அடிப் படியும் முதற் படியும், தெற்கும் வடக்கும் காதல் கொள்ள முடியுமா? அரசனுக்குத்தான் எத்தனை கட்டுப்பாடு? வண்டிக்குப் பின்னே அவள் உட்கார்ந்திருந்தாள். 'ஏய்' என்னும் அவள் குரலில் முதலில் அவர் மயங்கினார். பிறகு அவளுடைய வாலிபத் துடிப்பில் மயங்கினார். களங்கமற்ற பேச்சில் கருத்தைப் பறி கொடுத்தார். வடவாற்றிலே வெண்ணிலவில் விண்ணை மயக்கப் பெண்ணரசி பாடினாள். அந்தப் பாட்டில் அவர் பரவசமானார். வெள்ளத்திலிருந்து காக்க ஓடினார். கள்விகை பயந்து ஓடினாள். எப்பொழுதும் அவள் நினைவாகவே இருந்தார். இடையில் கடமை குறுக்கிட்டது. தனக்குப் போட்டியாக ஒரு கள்வன் முளைத்தான். அதே கள்வன் அவளையுமா கவரவேண்டும்? இராவணன் வீட்டில் சிறையிருந்தாள் என்பதற்காகச் சீதாபிராட்டியை ராமபிரான் சந்தேகப்பட்டார். அதுவே ''சிறையிருந்தவள் ஏற்றம்'' என்னும் மகா காவியம் ஆயிற்று. 'நான் ராமனும் அல்ல; இவள் சீதையும் அல்ல. இவள் ஒரு விலைமாது. தெருவில் பாடுபவள். வீட்டிலே நிலைகொள்ளாதவள். காட்டு ராஜாவினால் கவர்ந்து செல்லப் பட்டவள். ஆனால் அவள் பேச்சில் வடிவது தேனா? விஷமா? கண்ணில் இருப்

நம்பிக்கையானது. அதனால்தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றன.
அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப்பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற்கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது.
தயாரிப்பவர்கள்: கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில 70 ஆண்டு களுக்கும் மேலான அனுபவ முடையவர்கள்.

3 சைஸ்கள்;
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)


நவ-தால்



பாதுகாப்பிற்கு ஒரு
பூட்டு உள்ளதெனில்
அது நவ-தால்
ஒன்றே ஒன்றுதான்!

நவ-தால்

Godrej கோத்ரெஜ் எப்போதும் நங்கூரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்



''ஏண்டி புடவைக்கு ஜரிகை இவ்வளவு இருந்தால்போதும்னு சொன்னே இப்ப தகராறு பண்றியே!''

''தகராறு பண்றது பாத்திரக்காரன்தான்! நானில்லே! பெரிய சைஸ் ஜாடிக்கு இந்த ஜரிகை பத்தாதுன்னு சொல்லிப்புட்டானே...!''

பது அமுதமா, நஞ்சா? அவள் முகத்தில் காணும் அழகு வனப்பா வஞ்சனையா? ஏ, மனமே! திருச்சிராப்பள்ளி அரசிளங்குமரியைப் பார்த்தபோதுகூட உன் கண் முன் இந்தக் குயிலிதானே நின்ருள்? இவள் இருக்கிருள் என்ற தைரியத்தில்தானே நீ அவளிடம் சபதம் போட்டாய்? ஒரு வாரத்துக்குள் எத்தனை மாற்றம்? ஏன் இப்பொழுது அவளுக்கு முன் பேசாமல் நின்று கொண்டிருக்கிருய்? உணர்ச்சி மரத்துப் போய் விட்டதா? மரமாகவே ஆகிவிட்டாயா? முருகன் மையலில் மரமானுன். நீ ஐயத்தில் மரமாக முடியுமா?' என்று அவருடைய மனக் குதிரை ஒரு கணத்துக்குள் கன வேகமாகப் பறந்தது.

''ஏனய்யா, உனக்குப் பித்துக் கித்துப் புடிச்சுப் போச்சா? ஏன் சும்மா நிக்கிறே?'' என்ற குயிலியின் கேள்வி அவரை மறுபடியும் தன் நிலைமைக்குக் கொண்டு வந்தது.

''ஆமாம். எனக்குப் பைத்தியம் தான். இந்தக் காசு எனக்கு வேண்டாம்'' என்று வெறி வந்தவனைப்போல் துண்டிலிருந்த பணத்தை அப்படியே அவள் தலையின்மீது கொட்டினுன் கீர்த்திசிங்கன்.

''இது லெச்சுமி ஐயா. இப்படிச் செய்யாதே'' என்ருள் அவள்.

''பங்கைப் பிரிச்சுக் கொடுத்துப் போகச் சொன்னுல் என்ன அர்த்தம்? என்னை விட்டு விட்டுப் போகத்தான் நீ பாடினுயா?''

''என்னய்யா உளர்றே? உன்னை விட்டுட்டுப் போகாமல் கூடவே கூட்டிக்கிட்டு அலைவாங்களா? இப்படிக் கேட்டாக்க என்ன அர்த்தம்?'' என்ருள் குயிலி.

''அர்த்தம்தான் தெரியுதே. பல்லைப் பல்லை இளிக்கிருயே! இந்தா, சிங்கம், உன்னைக் கண்டு கரடி புலியெல்லாம் பயப்படும். ஆனுல் இந்தக் குயிலி உன் முதுகிலேயே உட்கார்ந்து ஹாய்யாப் பாடும். உன் பார்வைக்கெல்லாம் பயப்படாது'' என்று அவன் கையைப் பிடித்தான் சின்னத்தம்பி.

''சின்னத்தம்பி, நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை'' என்று கோபத்தோடு மொழிந்தான் சிங்கன்.

''என்னய்யா புரிந்து கொள்ளவில்லை? கால் இடத்திலே பல்லவியா எடுத்து விட்டாய் புரியாமல் போக? பொம்பளையைப் பார்த்து ஆம்பிளை முறைச்சா ஏன் முறைக்கிருன்னு எங்களுக்குப் புரியாதா? இந்தா பாருய்யா. நாட்டு ராசாவுக்குப் பயந்து கோட்டையை விட்டு வந்தோம். காட்டு ராசா கல்லிக்கிட்டுப் போனுன். அவனேயே ஏமாத்திட்டு எங்கக்கா தப்பிச்சு வந்திச்சு. நீ என்ன பாட்டிலே ராசான்னு எண்ணமோ?'' என்ருன் சின்னத்தம்பி.

கீர்த்திசிங்கன் கடகடவென்று சிரித்தான். உடனே சுதாரித்துக் கொண்டு ஒரு கணம் தன்னை மறந்த நிலையில் அவள் முன் நின்று விட்டோம் என் பதை உணர்ந்தான்.

''நாங்க ஒண்ணும் பிச்சைக்காரங்க இல்லை. பாதிப் பங்கைப் பிரிச்சுக் கொடுத்தால் நான் வாங்க முடியாது. அதனுடைய பாட்டுக்காகப் பணம் போட்டாங்களா இல்லை, என் தாளத்துக்குப் பணம் போட்டாங்களா?''

''ரெண்டுக்கும் சேர்த்துத்தான்'' என்ருள் குயிலி.

''இல்லை. நானும்தான் ஊர் ஊராப் போய் மத்தளத்தைத் தட்டிக்கிட்டுப் பாடினேன். கால் காசு கிடைக்கவில்லை. பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெற்ற மாதிரி பொம்பளை பாட்டுக்கு வாசிச்சேன். போட்டாங்க பணத்தை. நான் வர்றேன்'' என்று சொல்லிவிட்டு விருட்டென்று வேகமாக நடந்தான் கீர்த்திசிங்கன்.

குயிலியும் அவன் கூட்டத்ினரும் அவன் போகும் வேகத்தையே விறைத்துப் பார்த்தனர். ஆனுல் ஒருவரும் அவனைக் கூப்பிடவில்லை. இதற்காக அவன் நிற்கவா போகிருன்? ஆனுல் போகிற வேகத்திலேயே இடுப்பில் கட்டியிருந்த நாடாவை அவிழ்த்து மிருதங்கத்தை ஒரு மூங்கில் புதரின்மேல் தொபீரென்று போட்டு விட்டு இவர்களைத் திரும்பிப் பார்க்காமலே வேகமாக நடந்தான்.

''டேய், சின்னத்தம்பி! கூப்பிடுடா, அந்த ஆளை'' என்ருள் குயிலி.

''ஏன்?'' என்று கேட்டான் அவன் கோபத்தோடு.

''அட, பசிச்சவண்டா. பசிச்சவனும் பைத்தியக்காரனும் ஒண்ணு. அந்த ஆள் போகிற போக்கைப் பார்த்தால் நேரே காவிரியிலே போய் விழுந்துடுவான் போல இருக்கு.''

''இவன் எங்கே விழுந்தா நமக்கென்ன, குயிலி? அவன் ராங்கியாப் பேசுறான். கோணக் கண்ணுலே பார்க்கிறான். பெரிய ராசகுமாரன்னு நினைச்சிட்டான் போல் இருக்கு.''

''ஏய், ஐயா, நில்லு, நில்லு....'' என்று கூவிக் கொண்டே குயிலி ஓடினாள். அவள் கண்கள் சிவந்திருந்தன.

''ஏன் நிக்கணும்? நீதான் பங்கைக் கையிலே கொடுத்துப் போடான்னுட்டையே!''

''அதிலே என்னய்யா தப்பு? உங்க ராசாங்கத்திலே ஒழுங்கா நடந்துக்கறவ குத்தவாளி போலே இருக்கு. உன் காசை உன் கையிலே கொடுத்தேன். குற்றமா?''

''நான் காசுக்காக வல்லே. உன் பாட்டுக்கு ஆசைப்பட்டு வந்தேன்.''

''அப்படியானால் ஒரு பாட்டுப் பாடறேன். கேட்டுட்டு ஓடு!'' என்றாள் குயிலி கோபத்துடன்.

''நான் ஒரு இடத்துக்கும் போகமாட்டேன். நான் உன்னோடையேதான் இருப்பேன். நீ பாடினால் நான் மத்தளம் தட்டுவேன். நீ ஆடினால் நான் தலைக்கோல் தட்டுவேன்.''

''நான் ஏன் ஆடறேன்? எனக்குத்தான் அது தெரியாதே.''

''உனக்கா தெரியாது? மீன் குஞ்சுக்கு நீந்தக் கத்துக் கொடுக்கணுமா? குல வித்தை கல்லாமலேயே வரும்.''

''எங்க குலம் வேறே. என் குணம் வேறே. நாங்கள் ஓட ஓட விரட்டுவோம். அதுதான் எங்க குணம். ஆனால் நீ இப்போ ஓடறே. நான் உன்னைக் கூப்பிடறேன். வாய்யா, நீ ஒரு பக்கமும் போக வேண்டாம். என் கூடவே இரு'' என்றாள் குயிலி.

அவளும் தன்னை வெறுக்கவில்லை; தன்னிடம் மிகவும் அன்பாக நடந்து கொள்ளுகிறாள். இது ஏன் என்று அவன் யோசித்தான். அவன் மட்டுமா? அவளும் கூட அதையே யோசித்தாள். இவனிடம் நமக்கு என்ன அக்கறை? இவன் எப்படிப் போனால் நமக்கு என்ன? ஏன் இவனை வருந்தி வருந்தி அழைக்க வேண்டும்? என்று அவளுடைய அறிவு அவளைக் கேட்டது. ஆனால் அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒன்று ஒரு காரணமும் இல்லாமல் அவனிடம் அவளை ஒட்டிக் கொள்ளச் செய்தது. அது பாசமா? ஏழைகள் எல்லோரும் ஒரே இனம் என்ற எண்ணமா? அல்லது காதல் என்பது அதுதானா? அவள் அதை ஆராய விரும்பவில்லை. அவனைச் சமாதானம் செய்து கூடவே அழைத்துக்கொண்டு கோயிலை நோக்கிச் சென்றாள் குயிலி. அவனோ எதற்கு எடுத்தாலும் விதண்டாவாதமாகப் பேசினான். உணவு அங்காடியில் அவள் வாங்கிக் கொடுத்த உணவை அவன் உண்ண மறுத்தான்.

''இதிலே என்னுடைய பசி அடங்காது'' என்றான்.

''வேறே எப்படிச் சாப்பிடறதாம்?''

''பெண் பிள்ளைதானே நீ? உன் கையாலே பொங்கிப் போட்டால் சாப்பிடுறேன்.''

''ஐயா, அரிசியும் பருப்பும் இருக்கிற வீட்டிலேதான் அடுப்பை மூட்டி ஆக்க முடியும். நாமெல்லாம் அன்றாடம் காய்ச்சி. காசு கிடைச்சுதா, நாலு வேளைக்குச் சேர்த்துச் சாப்பிடு. இல்லியா, நாலு நாளைக்குக் காயப் போடு. இதுதான் என்னுடைய பழக்கம்'' என்றாள் குயிலி.

''உனக்குச் சமையல் செய்யத் தெரியாட்டி நான் சமைக்கிறேன். நீ சாப்பிடலாமில்லே'' என்று கேட்டுவிட்டு, அவள் உத்தரவுக்குக் காத்திராமல், அவள் கையிலிருந்த பண மூட்டையைப் பறித்துக் கொண்டு பரபரவென்று ஒரு பலசரக்குக் கடைக்குள் நுழைந்தான் கீர்த்திசிங்கன்.

தாங்களே சமையல் செய்து சாப்பிடப் போகிறோம் என்ற செய்தி பரவிய மாத்திரத்தில் அவள் கூட்டத்தினர் எல்லோரும் தாங்கள் அநாதைகள் என்ற எண்ணம் மாறி, ஒவ்வொருவரும் குடும்பஸ்தர்கள் ஆகிவிட்டார்கள். உப்பு, புளி, மிளகாய், அரிசி, பருப்பு, வெல்லம் என்று அவன் துண்டை விரித்து வாங்கி மூட்டைகளைக் கட்டினான்.

''ஏனய்யா, உனக்குப் பாயசம் வைக்கத் தெரியுமா?'' என்றான் முந்திரிக்கொட்டை.

''குறுமாக் குழம்பு வைப்பியா?'' என்று ஆவலுடன் கேட்டான் சின்னத்தம்பி.

இதுவரையில் கிடைத்ததைத் தின்று வந்த அந்தக் குழந்தைகள் இன்று அவரவர்கள் விருப்பப்பட்டதைச் சாப்பிடப் போகிறோர்கள் என்ற ஆனந்தத்தில் குயிலியும் சமையல் காரியத்தில் குதூகலத்துடன் இறங்கினாள். நல்ல பிஞ்சுக் காய்கறிகளாக, வெங்காயம்,

முருங்கைக்காய், புடலம்பிஞ்சு என்று அவளும் வாங்கினாள். அத்தனை சாமான்களை வாங்கியும் அப்படியும் சில்லறை மிஞ்சி யிருந்தது.

''இன்னிக்குப் பணம் எடுக்க எடுக்கக் குறையல்லடா'' என்றாள் குயிலி.


''அது எப்படிக் குறையும்?'' என்று தன் மனத்துக்குள் சொல்லிக்கொண்டே சிரித்தான், கீர்த்திசிங்கன். ஆம். தாம்பாளத்தில் அத்தனை பொற்காசுகளையும் தன் ஆட்களை விட்டுப் போடச் சொன்னவனே அவன்தானே?

''காவேரிக் கரையிலேயே அடுப்பை மூட்டுவோமா?'' என்று ஆவலோடு கேட்டாள் குயிலி.

''இந்த ஊரிலேயா? இது க்ஷேத்திரமல்ல? ஆற்றங்கரை சுத்தமா இருக்காது. அதோட அடுப்பைப் பத்த வச்சா ஆண்டிகள் வேறே வந்து கூடிடுவாங்க. தாராசுரம் கோயில் வாசல் மண்டபத்தில் சமையல்'' என்று சொல்லிவிட்டு ஆற்றிலே இறங்கி நீந்தினான் கீர்த்திசிங்கன்.

குயிலியின் கூட்டம் அவனைத் தொடர்ந்தது.

இக்காலத்தில் தாராசுரம் என்று அழைக்கப்படும் இராசராசபுரத்தில், ஐராவதேசுவரர் கோயில் வாசலில் உள்ள தீர்த்தக்கரை மண்டபத்தில் கீர்த்திசிங்கன் சமையல் செய்ய ஆரம்பித்தான். சற்று நேரத்துக்கு முன் தேடுவாரற்றுக் கிடந்த மூன்று கற்கள் இப்பொழுது ஓர் அழகிய அடுப்பாக மாறின. அதனுள்ளிருந்து எழுந்த தீயில் சோறு கொதித்துக் கொண்டிருந்தது. அந்தக் கொதியின் தாளத்துக்கு ஏற்பக் கீர்த்திசிங்கன் கைகளில் தாளம் போட்டுக் கொண்டிருந்தான். குயிலியும், அவளுடைய கூட்டத்தினரும் அந்தக் குட்டி மகேசுவர பூசைக்குரிய காய்கறிகளை அரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவராவது சமையல் செய்யும் கீர்த்திசிங்கனை நீ என்ன சாதி என்று கேட்கவில்லை. 'சாதி இரண்டொழிய வேறில்லை.' அதில் ஏழைகளெல்லாம் ஒரே சாதி என்ற எண்ணத்தில்தான் அவர்கள் இருந்தார்கள். அவனது சமையலின் நறுமணம் இரண்டொரு விருந்தினர்களையும், நான்கு பைரவர்களையும் அங்கே வரும்படி அழைத்து விட்டது. குயிலியும் பையன்களும் அன்று தங்கள் வாழ்க்கையிலேயே முதன் முறையாக ருசித்துச் சாப்பிட்டார்கள். அதற்குக் காரணம் சிங்கனின் சமையல் மாத்திரமன்று. அவன் அதற்காக எடுத்துக் கொண்ட நேரத்தில் நல்ல பசியையும்



''என்ன சார் உமக்கு இரட்டைக் குழந்தை பிறந்திருக்குதாமே, என்ன பேர் வச்சிருக்கேள் ?''

(பத்திரிகைகளுக்குத் துணுக்குகள் எழுதி அனுப்புபவர்) : ''ஒண்ணுக்கு 'காரனேட்' இன்னொண்ணுக்கு 'டிட்பிட்ஸ் !' ''

''...!...!...!...!''

வரவழைத்திருந்தான். அவன் எவ்வளவோ வற்புறுத்தியும், குயிலி தங்கள் கூடவே அவனும் உட்கார்ந்தால்தான் சாப்பிட முடியும் என்று சொல்லிவிட்டாள். கூட்டாஞ்சோறும், அவனுடைய வேடிக்கைப் பேச்சுக்களும் அவர்களை மிகவும் கவர்ந்து விட்டன. அவன் சின்னச் சின்னக் கதைகளைச் சொல்லுவான். ராகங்களைச் சீட்டியடித்துக் கொண்டே ஒரு புல்லாங்குழல் கச்சேரியை நிகழ்த்தி விடுவான். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். இன்றுவரை தலைவியாயிருந்த குயிலியையும் அவன் அதிகாரம் செய்வான். இவைகளைப் பார்த்து அவர்கள் எல்லோரும் சிங்கனிடம் அளவற்ற அன்பு கொண்டார்கள். சாப்பாடு முடியும்பொழுது திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. நாலு கால் மண்டபத்துக்குள் சாரல் அடிக்க ஆரம்பித்தது. சிங்கன் எழுந்து கோயிலை நோக்கியவாறு, ''குயிலி! எல்லோரும் இங்கே வாங்க'' என்று சொல்லிக் கொண்டே ஓடினான். இதுவரையில் சித்திரக்காரர் ரங்கமன்னாரின் வீட்டைத் தவிர வேறு ஒரு பெரிய கட்டடத்துக்குள்ளும் நுழையாத குயிலியும் அவள் கூட்டத்தினரும் பயந்து கொண்டே கோயிலுக்கு அவனைத் தொடர்ந்து ஓடினார்கள். வெளியே மழை அடிக்கிறதே என்ற பயம். உள்ளே சென்றால் மனிதன் அடிப்பானோ என்ற பயம். இந்த இரண்டுக்கும் இடையில் அந்த ஏழைகளின் கூட்டம் தவித்துக் கோயிலுக்குள் நுழைந்ததும், ''அட அம்மா!'' என்று அச்சரியத்தோடு கூவினாள் குயிலி. (தொடரும்)



பாரத அன்னையின் சுவீகாரப் புத்திரி நிவேதிதா

நஜன்

அரசியல் துறையில் அன்னிபெஸண்ட் எப்படி இந்தியருக்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துச் சேவை செய்தாரோ அதே போல் ஆத்மீகத் துறையில் இந்தியர்களுக்காகத் தன்னலத் தியாகம் செய்து பணிபுரிந்தவர் பிரிட்டிஷ் இனத்தைச் சேர்ந்த நிவேதிதா. அவருடைய நூற்றாண்டு பிறந்த தின விழா அக்டோபர் 27ந் தேதி கொண்டாடப்படவிருக்கிறது. அவருடைய நினைவுத் தபால் தலையை இந்திய அரசு வெளியிடவிருக்கிறார்கள்.

பாதிரியார் ஒருவரின் மூத்த புதல்வியாகப் பிறந்த அவர் (28–10–1867) உபாத்தியாயினியாகத் தன் வாழ்க்கையை மேற்கொண்டார். குழந்தைகள் கல்வியில் பெரும் அக்கறை காட்டினார். தகப்பனார் 34 வயதிலேயே காலமாகி விட்டதால் குடும்பத்தை நடத்தும் பொறுப்பு இவரைச் சேர்ந்தது. கல்வி போதனையுடன் இலக்கிய வளர்ச்சியிலும் இவர் பேரார்வம் காட்டினார்.

1895 நவம்பரில் இவர் முதன் முறையாக சுவாமி விவேகாநந்தரை சந்திக்க நேர்ந்தது. இந்தச் சந்திப்பு இவருடைய வாழ்க்கையையே மாற்றிவிட்டது. அதுவரை மார்க்கரேட் நோபில் என்றிருந்த பெயரை நிவேதிதா என்று மாற்றி வைத்துக் கொண்டார். இந்தியாவுக்கும் இந்து மதத்துக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதை இப்பெயர் மாற்றம் அறிவிப்பதாகக் கொள்ளலாம்.

லண்டன் விக்டோரியா ரயில் நிலையத்துக் கருகில் சுவாமி விவேகாநந்தர் செய்த பிரசங்கத்தை நிவேதிதா கேட்டுச் சுவாமிகளிடம் மிகவும் ஈடுபட முடிவு செய்தார். விவேகாநந்தர் இந்தியாவுக்கே வந்துவிடும்படி அழைத்ததன்பேரில் நிவேதிதா 1897ல் இந்தியாவுக்குப் புறப்பட்டார். (1898) ஜனவரி மாதம் அவர் கல்கத்தாவில் வந்து இறங்கினார்.

அப்போதெல்லாம் இந்துக்களிடையே தங்கிப் பணி புரிவது என்பது சுலபமான காரியமில்லை. ஆசாரம் என்ற பெயரில் அவர்கள் யாரையும் நல்லது செய்யக் கூட கிட்ட நெருங்க விடுவதில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் நிவேதிதா அவர்களிடையே தங்கிக் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதைத் தொடர்ந்து குழந்தைகளின் தாய்மார்களும் நிவேதிதாவுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தனர். தெருக்களிலுள்ள குப்பை கூளங்களை நிவேதிதாவே அகற்றுவதைப் பார்த்து மற்றவர்களும் அவரைப் பின்பற்றினர். தம் வசதிகள், உணவு இவைகளையும் தியாகம் செய்து இவர் பொதுஜன சேவையில் ஈடுபட்டார். ''சகோதரிகளின் இல்லம்'' என்கிற சேவா ஸ்தாபனத்தை அவர் கல்கத்தாவில் நிறுவினார்.

அச்சமயம் கொடிய பிளேக் வியாதி கல்கத்தாவில் பரவியது. இதற்குப் பயந்து கொண்டு கல்கத்தாவை விட்டு வெளியேற நிவேதிதா விரும்பவில்லை. அங்கேயே தங்கி மக்களுக்குச் சேவை செய்தார். ''எனக்கு முதலில் தங்கப் புகலிடம் தந்த இடத்தை நான் எப்போதும் கைவிடமாட்டேன்'' என்று அவர் கூறியது அவரது நன்றியறிதலைக் காட்டுகிறது.

இவர் அயர்லாந்தில் பிறந்தவர். அயர்லாந்து தன் சுதந்திரத்தைப் பெற வீரப் போராட்டம் நடத்தியதை நிவேதிதா கண்டிருக்கிறார். இதனால் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலும் அவருக்கு சிரத்தை ஏற்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. பல இந்தியப் புரட்சியாளருக்கு அவர் தஞ்சம் அளித்திருக்கிறார். பலாத்கார முறையை இவர் வெறுத்த போதிலும் அந்தத் தியாகிகளுக்கு உதவ இவர் தயங்கியதேயில்லை. இவர் இந்திய அரசியலில் பங்குகொள்ளாததன் காரணம், ஆத்மீகத் துறையில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருந்ததனால் தான் என்று இவரே ஒரு சமயம் குறிப்பிட்டிருக்கிறார். இருந்தபோதிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் இவரைச் சந்தேகக் கண் கொண்டே நோக்கி வந்தனர்.

ஹிந்து மதம் பெரும் அளவுக்கு இவருக்குக் கடமைப் பட்டிருக்கிறது. 'நான் கண்ட குருநாதன்' (The Master as I saw him) ஹிந்து மதத்தின் தொட்டில் கதைகள் (Cradle tales of Hinduism) பொறுக்கி எடுக்கப்பட்ட கட்டுரைகள் (Selected essays) ஆகிய இவருடைய புத்தகங்கள் அறிவு உலகுக்கு அளிக்கப்பட்ட பொக்கிஷங்கள். ஜகதீஷ் சந்திர போஸ் ஒரு சமயம் நோய்வாய்ப் பட்டிருந்த போது அவருக்குத் தொண்டு செய்து அவரைக் குணப்படுத்தினார். 'என்னைத் தேற்றி விட்டு அவள் போய்விட்டாளே' என்று ஜகதீஷ் சந்திரர் இவர் மறைவின்போது வாய் விட்டு அலறி அழுதாராம்.

இவர் உடல் நலம் குன்றியபோது டார்ஜிலிங்கில் தங்கியிருந்தார். உடம்பு தேறாமல் பாரத மண்ணிலேயே இவர் மாண்டு மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டார்.



இன்னொரு சேலம் எங்கே?

'புது உலகில் சென்னை' என்ற கட்டுரையைப் படித்தேன். அமெரிக்காவில் உள்ள ஓரிகான் மாநிலத்தில் 'மெட்ராஸ்' என்ற பெயரில் ஒரு நகரம் இருப்பதுபோல், 'சேலம்' என்ற நகரமும் அதே மாநிலத்திலேயே உண்டு என்பதனை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமது மாநிலத்திலுள்ள 'சேலம்' நகரின் பெயரைப் பெற்றுள்ள இதே சேலம் நகரம்தான், ஓரிகான் மாநிலத்தின் தலைநகரமும் ஆகும்! இவ்விரு சேலம் நகரங்களிடையே ''சகோதர அன்புப் பிணைப்பு'' ஏற்பட்டுள்ளதும், அதன் தொடர்பாக அமெரிக்க சேலம் நகரின் மேயர் திரு வில்லார்டு சி. மார்ஷல் மற்றும் அமெரிக்கப் பிரமுகர்களான திரு மௌரீசு ஜுவே, திரு வில்லியம் ஏ.வி. தாஸ் போன்றவர்கள் நமது சேலம் நகருக்கு அண்மையில் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டதும் நினைவுகூரத் தக்கது.

சேலம் என்ற பெயரைப் பெற்றுள்ள தால்தானோ என்னவோ, இந்நகர மக்கள் நமது மாநிலத்தில் உள்ள மக்களுடன் கடிதத் தொடர்பு கொள்ளப் பெரிதும் விருப்பம் கொண்டுள்ளனர். அந்நகரத்தில் உள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த மக்களுடன் கடிதம் மூலம் தொடர்பு ஏற்படுத்தி வைப்பதில் அங்குள்ள ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப், சிஸ்டர் சிடி கமிட்டி (Sister city committee) ஆகியவற்றின் உறுப்பினர்கள் அக்கறை கொண்டுள்ளனர். ஆர்வமிக்கவர்கள் மேற்குறித்த நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

இத்துடன் ஓரிகான் மாநிலத்திலுள்ள சேலம் நகர மன்ற நிருவாகிகளின் படமொன்றையும் அனுப்பியுள்ளேன்.

தர்மபுரி — 1
1—9—68 கே. பாலசுந்தரம்

தரத்தில் ஓர் உயரம்

தியாகதாசனின் ''உயரத்தில் ஒரு கோபுரம்'' என்னும் சிறுகதையைப் படிக்கும் நல் வாய்ப்புக் கிடைத்தது. கோபுரத்தின் உயரம் கண்ணைக் கவர்வது போல், கதையின் உயர்ந்த தரம் நெஞ்சில் நிலைபெற்று நிற்கிறது.

மதுரை — 3
5—9—68 லக்ஷ்மி கண்ணன்

பாலத்துக்கு ஒரு பெருமை

'மகரிஷி' அவர்களின் 'ஒரு பாலம்' ஓர் உன்னதமான படைப்பு. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே பாலமாக இருந்து ஆத்மிகத் தொடர்புகளை இணைக்கும் புரோகிதர்களின் பெருமையை எவ்வளவு அழகாக வலியுறுத்தியிருக்கிறார்! நாம் எவ்வளவுதான் மேற்கத்திய நாகரிகங்களைப் பின்பற்றினாலும் இந்தியன் இந்தியனாக இருப்பதின் பெருமையை விளக்கிய ஆசிரியருக்கு எனது உளங் கனிந்த பாராட்டுதல்கள்.

சென்னை—33
28—8—68 எஸ். சௌரிராஜன்

தொண்டு வேறில்லை

ஸ்ரீமதி விமலாரமணி எழுதிய 'மின்மினி' கதை போலி கௌரவத்தைப் பெரிதாக மதிக்கும் பெண்களுக்கு ஒரு நல்ல பாடமாக அமையும்.

இது போன்ற கதைகள் பல வெளிவந்து நாட்டு மக்களின் போக்கைச் சீர் திருத்துமாயின், அதைப் போன்ற தொண்டு வேறு எதுவுமில்லை.

தாஸரெத்
2—9—68 விஜயா பால்ராஜ்

வட்ட மேஜை

பிரச்னை தீர....

''வரவுக்கு மேல் செலவா?'', ''தினம் ஒரு மணி நேரம்'' போன்ற குடும்பப் பிரச்னைக் கட்டுரைகள் நடுத்தர வருமானமுள்ள குடும்பப் பெண்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றன. ஆர்வமுள்ளவர்கள் அக்கறை காட்டினால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ வழியுண்டு.

கடப்பை.
31—8—68 சுந்தரா சுப்பிரமணியன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

